ஜூலை 23 - 29, 2006 | July 23 - 29, 2006 | 28 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI | සුඩර් ඔළි | வார மலர்



## இயல்பு வாழ்வா? இறுதித் தீர்வா?

## சாத்தான் சமாதான வேதம் ஓதுகிறது

# யுத்தம் தொடங்குவதை புலிகள் தாமதிப்பது ஏன்?

போரியல் போக்குப் பற்றிய
ஒரு மதிப்பாய்வுத் தொடர் ஆரம்பம்

# சாத்தான் சமாதான வேதம் ஓதுகிறது

தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக வும், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுடன் ஒத்துழைப்பது என்ற விடயத்திலும் தனது நிலைப்பாட்டை



இந்திய அரசுத் தலைமைக்கு எடுத்து விளக்க முடிவுசெய்துள்ளது ஐ.தே.கட்சி. இதனையடுத்து கட்சியின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று மிக விரைவில் புது டில் லிக்கு விஜயம் செய்யத் தயாராகின்றது.

### மஹிந்தர்-ஐ.தே.கட்சி முறுகல்

அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத் துவது தொடர்பாக சர்வகட்சி பிரதிநிதிகள் அடங்கிய குழு, மற்றும் புத்திஜீவிகளைக் கொண்ட குழு ஆகியவற்றின் செயற் பாடுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து, முடுக்கிவிட்டுள்ளார். இந் நிலையிலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 49 சதவீதமான மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்ட ஐ.தே. கட்சி, ஜனாதிபதியின் சமாதான முன் னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்க முடியாமல் திண்டாடுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர் பில் 'மஹிந்தவின் சிந்தனைகளி'ன் அடிப்படையில் சமாதான முயற் சிகளை முன்னெடுத்து வரும் அதே நேரம் தன்னையும் தனது அரசாங் கத்தையும் பலப்படுத்திக் கொள்வதற் காக ஐ.தே.கட்சியின் அங்கத்தவர் களைத் தம் பக்கம் இழுக்கும் செயற் பாடுகளிலும் மஹிந்தர் தீவிரமாக இறங்கியுள்ளார்.

மஹிந்தரின் இத்தகைய வலைவிரிப் பில் ஏமாற்றம் அடைந்துள்ள ஐ.தே. கட்சி, எதிர்காலத்தில் சர்வகட்சி மாநாடு களில் மட்டும் கலந்து கொள்வதென்றும் சர்வகட்சி ஆலோசனைக் குழுவில் பங்குபற்றப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளது.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்கவின் தலைமையில் புதுடில்லி செல்லவிருக்கும் கட்சியின் உயர்மட்டக் குழு, இனப்பிரச்சினை தொடர்பான தமது கட்சியின் தற்போதைய அணுகு முறைகளையும் அமைதி முயற்சிகளில் அது ஆளுந்தரப்புடன் ஒத்துழைத்துச் செயற்பட முடியாமல் இருப்பதற்கான காரணங்களையும் இந்தியத் தலைவர்க ளுக்கு நேரில் விளக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

### இந்தியாவின் விருப்பம்

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம். அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந் தித்தபோது இந்தியாவின் இந்த விருப் பத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

புதுடில்லியின் வற்புறுத்தலுக்கு அமைய இந்திய வெளியுறவுச் செயலா ளரின் விஜயத்தின் பின்னர் ஐ.தே.கட்சித் தலைவர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஆனால், அந்தப் பேச்சுநடை பெறுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னரே ஐ.தே.கட்சியின் உறுப்பினர் ஒருவரை அரசுக்குள் ஈர்த்துக் கொண்ட ஜனாதிபதி அவருக்குப் பிரதியமைச்சர் பதவியையும் வழங்கிவிட்டார். ஆனால், இதுபற்றி ரணிலுடனான தமது சந்திப்பின் போது எதையும் கூறாது தவிர்த்துக் கொண்டார் அவர்.

அமைதி முயற்சிகளுக்குத் தமது கட்சியின் ஆதரவைக் கோரிவரும் அதே வேளை, கட்சியைப் பலவீனப்படுத்தும் வகையில், கட்சி அங்கத்தவர்களை அரசின் பக்கம் இழுத்தெடுத்து 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த விரும்பும்' ஜனாதிபதியின் முயற்சி ஐ.தே. கட்சிக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தான் இந்தியத் தலைவர்களுடன் நெருங்கிய உறவுகளைக் கட்டி வளர்த்துள்ள அக்கட்சி தமது நிமாற்றத்தை அவர்களுக்கு விளக்க வேண்டியது அவசியம் எனக் கருதுகின் றது.

> இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து தென்னிலங்கை கட்சிகள் கொண்டுள்ள முரண்பட்ட நிலைப்பாடு பற்றி கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஜெப்ரிலன்ட்ரெட் இனப்பிரச்சினை தொடர்பில் அரசின் நடவடிக்கைகள் சரியாக இல்லையென்றும் இது விடயத்தில் தென்னிலங்கை கட்சிகள் கடும் போக்குடன் நடந்து கொள்வதாக வும் கூறி தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

### வரலாறு திரும்புகின்றது

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தமிழ் மக்களது தாகங்களையும் அபிலாஷைக ளையும் தீர்த்து வைக்கும் வகையில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் பிரச் சினைக்கான தீர்வை முன் வைக்குமா என்ற வினா ஒரு புறம் இருக்க, இப்பிரச்சினைக் குத் தீர்வொன்று எட்டப்படாமல் இழுத் தடிப்புக்கு உள்ளாவதால் உருவாகும் தாக்கங்களை இதே சக்திகள் தெரிந்திருந்தும் கூட பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது தென்னிலங் கையின் பிரதான கட்சிகள் இரண்டும் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி ஏட்டிக்குப் போட்டியாக களத்தில் குதிப்பதே வரலாறு. அதேவரலாறுதான் இப்போது மீண்டும் திரும்பியிருக்கிறது.

### ஜே.வி.பி.யின் நிலைப்பாடு

சமாதான முயற்சிகள் தொடர்பான ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு இவ்வாறு இருக்க, மஹிந்தரின் நேச அணியில் உள்ள கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி., அதிகாரப் பரவலின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் மஹிந்தரின் முயற்சிக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன் சர்வதேச அழுத்தத்துக்கு அடிபணிந்து சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றை அவர் முன் வைப்பாரானால் தாம் வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் கூறியுள்ளது. அத்துடன் ஒற்றையாட்சி வரம்பை மஹிந் தர் மீற முடியாதென்றும் இராணுவத் தீர்வே இனப் பிரச்சினைக்குப் பொருத்தமான அணுகுமுறை என்றும் அது இப்போதும் மேடைதோறும் அடித்துக் கூறி வருகிறது.

இந்தப் பின்னணியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸும் அரசுடன் இணைந்து கொள்ளப் போவதாகவும் செய்திகள் வெளிவந்தன.

இ.தொ.கா. அரசுடன் இணைய இருப் பது குறித்த தனது அதிருப்தியை வெளியிட் டுள்ள ஜே.வி.பி., மஹிந்தரின் இந்தத் திட்டம் நாட்டுக்கும் அவருக்கும் நல்லதல்ல என்று எச்சரித்துள்ளது.

### ஜாதிக ஹெல உறுமய

மஹிந்தரின் நேச அணியிலுள்ள மற் றொரு கட்சியான ஜாதிக ஹெல உறும யவும் அதிகாரப் பகிர்வு குறித்த அரசாங் கத்தின் ஆலோசனைகளுக்கு எதிர்ப் புத் தெரிவித்துள்ளதுடன் விடுத லைப் புலிகள் தனிநாடு தவிர்ந்த வேறு எதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதால் பிரச் சினைக்குத் தீர்வொன்று எட்டப் படுவதற்கு முன்னர் இராணுவ ரீதியில் அவர்களை முடக்கவேண்டும் என வும் மஹிந்தரைக் கோரி நிற்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து தென்னிலங்கை கட்சிகள் கொண்டுள்ள முரண்பட்ட நிலைப் பாடுபற்றி கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஜெப்ரிலன்ட் ரெட் இனப்பிரச்சினை தொடர்பில் அரசின் நடவடிக்கைகள் சரியாக இல்லையென்றும் இதுவிடயத் தில் தென்னிலங்கை கட்சிகள் கடும் போக்குடன் நடந்து கொள் வதாகவும் கூறித் தமது ஆதங் கத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

### விடுதலைப் புலிகளுக்கான மஹிந்தரின் அழைப்பு

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி தொடர்பில் அரசின் நடவடிக்கைகள் சரியாக இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ள அமெரிக்காவுக்கான இலங்கை யின் முன்னாள் தூதுவரே சுட்டிக்காட் டியுள்ளார். இந்நிலையில்தான், தீர்வு முயற்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது யோசனைகளை முன்வைக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார் மஹிந்தர்.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழம் என்ற தமது நிலைப்பாட்டைக் கைவிட்டு, தமிழ் மக்களின் தேவைகளையும் அபிலா ஷைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்று முன்வைக்கப்படுமானால், அது குறித்து நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும் என்று ஏற்கனவே கூறிவிட்டனர்.

*அனுசரணைப் பணியில் இருந்து நோர்வேயையும்-

*பிரச்சினைத் தீர்வுக்கான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும் ஒதுக்கி வைத்துவிட்டு மீண்டும் மீண்டும் விடுத லைப் புலிகளை, "உங்கள் யோசனை களை முன்வைத்து பேசவாருங்கள்" என்று மஹிந்தர் அழைப்பதில் பொதிந்துள்ள அர்த்தம் அவருக்கு மட்டுமே புரியும்.

### புலிகளின் நிலைப்பாடு

மஹிந்தரின் இந்த ஏமாற்று வித்தைகளை



நன்கு புரிந்து கொண்டுள்ள நிலையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், "பூரண சுயாட்சிக்குக் குறைந்த எதையும் தமிழ் மக்கள் தமது பிரச்சினைக் கான தீர்வாக ஏற்றுக்கொள்ளப் போவ தில்லை" என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியத் தொலைக் காட்சியான என்.டி.ரி.விக்கு அவர் வழங் கிய செவ்வியில்,

"தமக்கான முழு உரிமைகளையும் பெற்றுக் கொள்வதற்காகவே எமது மக்கள் தமது போராட்டத்தை நீண்ட காலம் முன்னெடுத்து வருகிறார்கள். அவர்கள் பூரண சுயாட்சியுடன் கூடிய தீர்வொன் றையே எதிர்பார்க்கிறார்கள். மற்றவர்களின் எண்ணங்கள் வெறும் எண்ணங்களாகவே இருந்துவிட்டுப் போகட்டும். அவை பிரச்சினைக்கான தீர்வுகள் அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நின்று விடாது, தமது பிரச்சினைக்கான இறுதித் தீர்வு என்ன என்பதை எமது மக்களே தீர்மானிப்பர் என்றும் கூறியுள்ளார்.

### கடும் எதிர்ப்பு

இவ்வாறு மஹிந்தரின் தீர்வு முயற் சிகளை,

* நாட்டின் இரு பிரதான கட்சிகளில்

**நேதாஜி**

ஒன்றான ஐ.தே.கட்சி-

* மஹிந்தரின் நேச அணியில் உள்ள பலம் வாய்ந்த கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய

* தமிழர் தரப்பான தமிழீழ விடுத லைப் புலிகள் ஆகிய மூன்று தரப்புகளும் கடுமையாக எதிர்க்கும் நிலையில், மஹிந் தர் இனப்பிரச்சினைக்கு கௌரவமான சமாதானத் தீர்வைக் காணப்போவதாகக் கூறுவது சாத்தான் வேதம் ஓதுவதைப் போலவே இருக்கின்றது.

மஹிந்தரது தீர்வு முயற்சிகளை ஐ.தே. கட்சியும் மற்றைய பேரினவாதக் கட்சிக ளும் தமது சொந்த அரசியல் இருப்பைக் கருத்தில் கொண்டு, எதிர்த்து வருவதை கணக்கில் எடுக்காது தமிழர்தரப்பு இவரது முயற்சிகளை ஏன் முற்றுமுழுதாக எதிர்க் கிறது என்று பார்ப்போமா?

இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்ட யோசனையைத் தயாரிப்பதற்காக அமைக் கப்பட்ட சர்வகட்சி ஆலோசனைக் கூட்டத்தில் மஹிந்தர் ஆற்றிய உரையி லேயே இதற்கான

(16ஆம் பக்கம் பார்க்க)





# யுத்தத்தை தொடங்குவதற்கு புலிகள் தயங்குவது ஏன் ?

## போரியல் போக்குப் பற்றிய மேம்போக்கான மதிப்பீடு

1

**- நவின் -**

*மீண்டும் போர் ஒன்று வெடித்தால் வடமுனை சமர்க் களம்தான் முதலில் சூடு பிடிக்கும். யாழ் குடாநாட்டில் தமது நிலைமை 'அம்பேல்' ஆகும் என்பதுதான் இராணுவத் தரப்பின் பீதி. அது உண்மையும் கூட.*

*வடமுனை முன்னரங்க நிலைகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் முப்படைத் தளபதிகள் குழு நேரில் சென்று மதிப்பீடு செய்து அங்குள்ள படை அணித் தளபதிகளையும் படையினரையும் உஷார்படுத்த வேண்டிய அக்கறையை - நெருக்குதலை - ஏற்படுத்தியிருக்கின்றது; வடமுனைக் களநிலைவரம். மீண்டும் யுத்தம் வெடித்தால் குடாநாட்டில் அரச படைகளின் கட்டுப்பாடு தாக்குப் பிடிக்குமா? அதிகாரத்தைத் தக்க வைப்பது சாத்தியமா? அங்கு யுத்தம் எப்படி விரியும்? அரச படைகளின் தந்திரோபாய மாற்று மார்க்கம் எவ்வாறு அமையும்? - இவை போன்ற கேள்விகளுக்கான மேலோட்டமான பதிப்களை இந்தத் தொடரில் வாசகர்கள் அறியலாம்.*

**நா**ட்டில் நீடிக்கும் மென் தீவிர யுத்தம் இப்போது மெல்ல மெல்ல தீவிர யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கை 'சுட்ட மண் ஒட்டவே ஒட்டாது' என்பது போல சிதறடிக்கப்பட்டு விட்டது. புரிந்துணர்வுக்கும், விட்டுக்கொடுப்புக்கும், நல்லிணக்கத்துக்கும் இனிமேல் வாய்ப்பு கிஞ்சித்தும் கிடையாது என்பது ஓரளவு தெளிவாகி வருகின்றது. நேரடி யுத்தம் என்பதைத் தவிர, சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதும் உறுதியாகி வருகின்றது.

இரு தரப்புகளுமே இந்நிலைமையை நன்கு புரிந்து - உணர்ந்து - கொண்டுள்ளன. ஆனாலும் சர்வதேசத்தை இந்த நிலையில் சும்மா ஏன் பகைத்துக் கொள்வான் என்பதற்காக இரு தரப்புக்களுமே வார்த்தை ஜால அறிக்கைகள், அறிவிப்புகளோடு காலத்தை நகர்த்தி சமாளிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றன.

நாளை அல்லது விரைவில் யுத்தம் என்பதும் அதற்கு மாற்று இல்லை என்பதும் விடுதலைப் புலிகளுக்கு நன்கு தெரியும். அதுதான் அவர்களின் நிகழ்ச்சி நிரலும் கூட.

அதே சமயம், அத்தகைய பெரும் யுத்தம் ஒன்றைத் தொடங்குவதற்கு மேலும் கால அவகாசம் வழங்குவது இலங்கை அரசுத்தரப்புக்கு வாய்ப்பை - சமாதான சந்தர்ப்பத்தை - அளிப்பதாக இருக்கும் என்பதும் புலிகளுக்குத் தெரிந்ததுதான்.

யுத்த முனைப் போடு பதவிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனது அரசின் யுத்த தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு இன்னும் சொற்ப கால அவகாசம் தேவை. இராணுவக் கட்டமைப்பைச் சீராக்க வேண்டும்; மனோபலம் குன்றி, குழம்பியிருக்கும் படையணிகளை உஷார்ப்படுத்தி, தைரியப்படுத்தி, ஒழுங்குபடுத்த வேண்டும்; படைகளுக்கு அவசரமும், அவசியமுமானவை என்று கணிக்கப்பட்டு வெளிநாடுகளில் 'ஓடர்' கொடுக்கப்பட்ட ஆயுத தளபாடங்கள் வந்து சேர வேண்டும்; யுத்தம் ஒன்று ஆரம்பித்தால் பெரும் அளவில் பாதிக்கப்படப்போகின்ற பொருளாதாரத்தினால் எழும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் எதிர்கொள்வதற்குமான ஆயத்த ஒழுங்குகளைச் செய்தாக வேண்டும். வடமுனையில் முக்கிய கேந்திர மையமாகத் திகழும் பலாலி விமானத் தளத்தில் அரைகுறையில் நிற்கும் ஒடுபாதை சீரமைப்புப் பணியைப் பூர்த்தி செய்து, பெரிய விமானங்கள் அங்கு தரையிறங்கக் கூடிய வசதியை உறுதிப்படுத்த வேண்டும். வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் ஆயுத தளபாடங்களைப் பாதுகாப்பாக யுத்த முனைப் பிரதேசங்களுக்கு நகர்த்த வேண்டும்.

இவை எல்லாவற்றுக்குமாக அரசுத் தரப்புக்குத் தேவைப்படுவது கால அவகாசம்.

அத்தோடு இன்னொரு விடயமும் உண்டு. அடுத்த ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கான போட்டிக்களத்தில் மும்முரமாக நிற்கும் தரப்புகளில் இலங்கையும் ஒன்று. இன்னும் இரண்டொரு மாதங்களில் அடுத்த ஐ.நா.செயலாளர் நாயகம் யார் என்பது முடிவாகிவிடும். ஆசிய நாடு ஒன்றுக்கே இம்முறை இந்தப் பதவி என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் போன்றன இதுவிடயத்தில் முட்டி மோதிப் போட்டி போடுகின்றன. அவற்றின் இழுபறியைத் தவிர்ப்பதற்காக இலங்கை போன்ற மூன்றாவது சிறிய நாடு ஒன்றுக்கு அந்தப் பதவியைக் கொடுத்துச் சமாளிக்கலாம் என்ற கருத்து நிலைப்பாடும் இராஜதந்திர மட்டங்களில் மேலோங்கி வருவதாக இந்தப் பதவிக்கான பிரசார முயற்சியில் மும்முரமாகக் குதித்திருக்கும் இலங்கைத் தரப்பினர் கருதுகின்றனர். இந்த நிலையில் இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம் பெரிய எடுப்பில் வெடிக்குமானால் அது சர்வதேச ரீதியில் இலங்கையின் அந்தஸ்தை சீர்குலைத்து, ஐ.நா.செயலாளர் நாயகம் பதவி என்ற கனவைத் தகர்த்து விடும் என்பதும் தெளிவு. ஆகவே ஐ.நா.செயலாளர் நாயகம் பதவிக்கான தெரிவு முடியும் வரையாவது - இன்னும் இரண்டொரு மாதங்களுக்கு - யுத்தம் மூளாமல்

(16 ஆம் பக்கம் பார்க்க)



யுத்தத்தைத் துணிவோடு எதிர்கொள்ளலாம். யுத்தநிறுத்தத்தை மகிழ்வோடு எதிர்கொண்டு அனுபவிக்கலாம். ஆனால் முழு அளவில் யுத்தமும் இல்லாமல், யுத்த நிறுத்தமும் இல்லாமல் இரண்டும் கெட்டான் நிலையை எதிர்கொள்வது அரசபடையினர், போராளிகள் போன்றோருக்கு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கும் கூட மிகவும் கஷ்டமானதே.

எதற்காக அயலவன் திடீர் திடீரென படுகொலை செய்யப்படுகின்றான் என்ற காரணமும் புரியாமல், அர்த்தமும் தெரியாமல், மரணங்களுக்கு மத்தியில் வாழ்வது என்பது பெரும் நரகவேதனை.

மரணங்கள் மலிந்த யுத்த பூமியில் வாழ்கிறோம் என்ற உணர்வோடு சாவுகளை எதிர்கொள்வது ஒரு விடயம். எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து 2001 வரை அதை எதிர்கொண்டு அனுபவித்துச் சலித்த பட்டறிவு தமிழர்களுக்குத் தாராளமாகவே உண்டு.

ஆனால் போரும் இல்லாமல், சமாதானமும் சாத்தியப்படாமல், ஓர் இக்கட்டான நிலையில், எந்த நேரத்தில், எந்த இடத்தில், எந்த ரூபத்தில், எவரை, எவ்வாறு சாவு வந்து அணைக்கும் என்ற மரண பீதி - சாவுக்கிலேசம்- இராணுவச் செயற்பாடுகள் மூலம் திணிக்கப்படும்போது அதை எதிர்கொள்வது துன்பியல் மிகுந்ததாக இருக்கின்றது. அதைத்தான் இப்போது தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கின்றது தமிழர் தாயகம்.

1977 இல் ஆவணி அமளி - இனக்கலவரம் - முடிந்த கையோடு இலங்கைத் தீவின் அப்போதைய தலைவர் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, அப்போது தமிழர்களின் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த அமிர்தலிங்கத்தைப் பார்த்து "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" - என்று சூளுரைத்துப் பிரகடனம் செய்தார்.

போரைப் போராகவும், சமாதானத்தை சமாதானமாகவும் எதிர்கொண்டு சிங்கள தலைமைக்கு யதார்த்தத்தை தெளிவுபடுத்திக் காட்டிப் புரிய வைத்துவிட்டது தமிழினம்.

இப்போது போருமில்லாமல் சமாதானமுமில்லாமல் புதிய நெருக்கடிப் போக்கொன்றைத் தமிழர்கள் மீது திணித்துள்ளது தென்னிலங்கை. ஒரு வகையில் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட உளவியல் யுத்தம்தான் இது.

போரை - அல்லது உறுதியான சமாதானத்தை - இருதரப்பும் திடசங்கற்பத்தோடு தீர்மானிக்கும் வரை இந்த நெருக்கடியை எதிர்கொள்வது தமிழர்களுக்கு தவிர்க்கவே முடியாததாகும்.

# இயல்பு வாழ்வா? இறுதித் தீர்வா?

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு-நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு-நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டப்போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பகிரங்கமாகக் கூறிக்கொண்டிருக்கின் றார்.

'பிரிக்க முடியாத இலங்கை' என்ற அடிப் படையில் அந்தத் தீர்வு அமையும் என்றும் அவர் கூறுகின்றார்.

இந்தத் தீர்வைக் காண்பதற்கான யோசனை களைத் தயாரிக்க நிபுணர்குழு ஒன்றையும் நியமித்துள்ளோம். அந்தக் குழு யோசனையைக் கண்டறிந்து முன்வைக்கும். அந்த யோசனை விடுதலைப் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப்படும். புலிகளும் நாங்களும் சேர்ந்து அந்த யோசனை தொடர்பாக ஆராய்ந்து தீர்வைக் காண்போம் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு ஒருதலைப் பட்சமாக முன்னெடுத் துள்ள இச்செயற்பாடு சாத்தியமாகுமா என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.



1985 ஆம் ஆண்டில் திம்புவில் தொடங்கிய சமாதானப்பேச்சுகள் இன்று நோர்வே வரை நீண்டு தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்மக்கள் விரும்புகிற-கேட்கின்ற-தீர்வை வழங்க சிங்களதேசம் பின்னடித்துக் கொண்டிருப்பதே இறுதித்தீர்வை எட்டமுடியா மைக்குக் காரணம் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் இன்னும் உணரவில்லை என் பதுதான் வேடிக்கையான விடயம்.

தமிழர் தரப்பு என்ன கேட்கின்றது என் பதைத் தெற்குத் தலைமைகள் இன்னமும் புரிந்து கொள்ளவில்லை.

தமிழர் தாயகப் பகுதியில் சுயநிர்ணய உரிமையுடன் தமிழ்மக்கள் வாழக்கூடிய தீர் வையே அவர்கள் விரும்புகிறார்கள்.

தமிழீழத் தீர்வாக இருக்கலாம். உள்ளக சமஷ்டித் தீர்வாக இருக்கலாம். அந்தத் தீர்வு தமிழ்மக்கள் தமது தாயகப் பிரதேசத்தில் தம் மையே தாங்கள் ஆளும் தீர்வாக அமைய வேண்டும் என்பதுதான் அவர்கள் அபிலாஷை.

இத்தகைய தீர்வைத் தெற்குத் தலைமைகள் ஒருபோதும் வழங்கமாட்டா என்பதை உணர்ந்து தான், தமிழர் தரப்பு இன்று ஆயுதப்போராட் டத்தை முன்னெடுத்து நிற்கின்றது. தமக்கென நடைமுறை அரசு ஒன்றை ஸ்தாபிக்கும் வகை யில் தமது கட்டுமானங்களைத் தமிழர் தரப்பு அமைத்துக்கொண்டிருக்கின்றது.

தமக்கென இராணுவப் படை, கடற்படை, விமானப்படை, [illegible] என படைக்கட்டு [illegible]

நீதிநிர்வாகத்துறை, நிதித்துறை, நிர்வாகத் துறை, [illegible] சுகாதாரத்துறை என நிர்வாகம் சார்ந்த கட்டுமானங்களையும், தமிழர் தரப்பு அமைத்துள்ளது.

இதற்குப் புறம்பாகத் தமக்கென வானொலி, தொலைக்காட்சி, ஊடகவியல் கல்லூரி என ஊடகத் துறைக் கட்டுமானங்களையும் தமிழர் தரப்பு உருவாக்கியுள்ளது.

நிழல் அரசு ஒன்றை ஸ்தாபிக்கும் பணியில் தமிழர் தரப்பு தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மஹிந்தர் அரசு இறுதிக்கட்டத் தீர்வாக முன்வைக்கும் யோசனை, தமிழர் தரப்பின் நிழல் அரசை -கட்டுமானங்களை அங்கீகரிக்கக் கூடியதாக அமையவேண்டும். இல்லையெல், அந்தத் தீர்வு நடைமுறைச் சாத்தியமற்றுப் போகும் நிலையே ஏற்படும்.

கடந்தகாலங்களில் தமிழ்த்தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் எல்லாம் கிழித்து எறியப்பட்ட நிலைதான் மஹிந்தரின் யோசனைக்கும் ஏற்படும்.

தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான தீர்வாக அது அமையுமா? அமையாதா? என்ற கேள்விகளுக்கு அப்பால், அந்தத் தீர்வை நடைமுறைப்படுத்தும் சக்தி இன்றைய அரசுக்கு இருக்குமா? என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

பேரினவாதச் சக்திகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்றவற்றை பங்காளியாகக் கொண்டு இயங்கும் அரசால் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தீர்வை முன்வைக்கமுடியாது. பேரினவாதச் சக்திகளை உதறித்தள்ளிவிட்டு தீர்வை அரசால் முன்வைக்க முடியாது.

அந்தச் சக்திகளுடன் ஆலோசனை நடத்தி தீர்வை அரசு முன்வைக்குமானால் தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய தீர்வாக அது அமையமாட்டாது.

இறுதித் தீர்வுக்கான யோசனைகளை முன் வைக்கப்போவதாக கூறிக் காலத்தை இழுத்தடிக் காமல் யதார்த்த நிலையை உணர்ந்து அரசு செயற் பட முன்வரவேண்டும்.



2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி யுத்தநிறுத்த உடன்படிக்கை நடை முறைக்கு வந்து. சமாதான சூழல் உருவான போது தமிழர் தரப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தது.

1995 ஆம் ஆண்டு சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்த போதும் முன்வைத்த அதே நிலைப்பாட் டைத்தான் 2002 ஆம் ஆண்டும் தமிழர் தரப்பு முன்வைத்தது.

[illegible] வடக்கு - கிழக்கு மக்களின் இயல்பு வாழ்வே முக்கிய பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அதேநேரம் இறுதித் தீர்வு பற்றியும் பேசுவோம் என தமது தரப்பின் நிலைப்பாட்டை தமிழர் தரப்பு முன்வைத்தது.

சந்திரிகா அரசுடன் நடந்த மூன்று சுற்றுப் பேச்சுகளிலும் முக்கிய இடம் பிடித்தது மக்களின் இயல்பு வாழ்வு தொடர்பான விடயம் தான். மக்களின் இயல்பு வாழ்வைச் சீராக்கக்கூடிய செயற்பாட்டை சந்திரிகா அரசு முன்னெடுக்காத தால் அந்தப் பேச்சுகள் தோல்வியில் முடிந்தன. அதன்பின் தொடர்ந்த யுத்தம் ரணில் ஆட்சிக்கு வந்தவுடன் நின்றது.

ரணில் ஆட்சிக்கு வந்தவுடன் கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கை காரணமாக உரு வான சமாதான சூழலில் நடந்த ஆறுகட்டப் பேச்சுகளிலும் முக்கிய இடம் பிடித்தது, மக்களின் இயல்புவாழ்வு விடயம்தான்.

இயல்பு வாழ்வுக்கு முக்கிய தடையாக இருக் கும் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயத்துக்குத் தீர்வுகாண ரணில் அரசால் முடி யாது போனமையே பேச்சுகள் தோல்வியில் முடிய முக்கிய காரணமாக இருந்தது.

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர் வீடு களிலும் அவலவாழ்வு வாழும் மக்களின் வாழ்க்கை சீராகாமல் எப்படி இறுதித்தீர்வை நடைமுறைப்படுத்தமுடியும் என தமிழர் தரப்பு பேச்சுகளில் வலியுறுத்தியது.

தமிழர் தரப்பின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட ரணில் அரசு, வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை நிறுவ முன் வந்தது. அதற்கான வரைவு ஒன்றையும் தமிழர் தரப்புக்கு வழங்கியது.

அந்த வரைவின் அடிப்படையில் தமிழர் தரப்பு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற வரைவை முன்வைத்தது.

தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடு தலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல்குழு வெளிநாட்டுக்குச் சென்றது. ஜெனிவாவில் தங்களது உயர்மட்ட சட்டத்துறை நிபுணர்களு டன் கலந்துரையாடியது.

சர்வதேச மட்டத்தில் யுத்தம் முடிவுக்கு வந்த நாடுகளில் யுத்தத்திற்குப் பின்னரான இடைக் காலச் செயற்பாடுகளுக்கு அமைக்கப்பட்ட நிர் வாகக் கட்டமைப்புகளை விரிவாக ஆராய்ந்து அதனடிப்படையில் வரைவு ஒன்று தயாரிக்கப் பட்டது.

அந்த வரைவை ரணில் அரசுக்கு தமிழர் தரப்பு சமர்ப்பித்தது. அந்த வரைவு குறித்து இரு தரப்புகளும் கலந்துரையாடி இணக்கப்பாடு ஒன்று எட்ட நோர்வே ஆயத்தங்களைச் செய்தது.

இந்நிலையில், ஜனாதிபதியாக இருந்த சந் திரிகா, ரணில் அரசின் சில அமைச்சுகளை தம் வசப்படுத்தியதன் எதிரொலியாக எழுந்த அரசி யல் குழப்பங்கள் தமிழர் தரப்பின் வரைவைக் கிடப்பில் போடவைத்தன.

அத்துடன், முடிவுக்கு வந்த பேச்சுகள் மீள ஆரம்பிக்க மூன்று வருடங்கள் காத்திருக்கவேண் டிய நிலை ஏற்பட்டது.

கடந்தவருடம் நவம்பர் மாதத்தில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வ தேசத்தின் அழுத்தம் காரணமாக மீளவும் பேச்சு களை ஆரம்பிக்க செயற்பாடுகளை [illegible] டுத் தார்.

அதன் தொடர்ச்சியாக கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம், 23ஆம் திகதிகளில் ஜெனிவாவில் பேச்சுகள் நடந்தன.

அந்தப் பேச்சுகளிலும் மக்களின் இயல்பு வாழ்வைச் சீராக்குவது தொடர்பாகவே தமிழர் தரப்பு கருத்துகளை வலியுறுத்தியது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் சீராக- செம் மையாக-நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களின் இயல்பு வாழ்வைச் சீராக்கவேண்டும் என தமிழர் தரப்பு வலியுறுத்தியது.

தமிழர் தரப்பின் இந்த நிலைப்பாட்டை அரசு ஏற்றுக்கொண்டது. அதன் அடிப்படையில் இணக்கப்பாடுகள் காணப்பட்டன. இரு தரப்பு களும் இணைந்து கூட்டறிக்கையையும் விடுத்தன.

பேச்சுகள் நடந்து ஐந்து மாதங்களான போதும், அங்கு கண்ட இணக்கப்பாட்டை நடை முறைப்படுத்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மக்களின் இயல்பு வாழ்வை சீராக்குவதற் குப் பதிலாக மக்களின் அன்றாட வாழ்வையே சீர்கெடச்செய்யும் செயற்பாடுகளே முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இராணுவ நெருக்குவாரங்கள் தீவிரமாக்கப் பட்டு கொலைகள், கைதுகள், காணாமற்போதல் போன்ற செயற்பாடுகள் அரங்கேறிக்கொண்டி ருக்கின்றன. அதன்மூலம் மக்கள் நிம்மதி யற்ற-அச்சமான-வாழ்வை வாழவேண்டிய நிலை யில் உள்ளனர்.

மக்களின் அன்றாட வாழ்வைச் சீராக்கி அவர்களின் இயல்பு வாழ்வைக் கட்டி எழுப்பக் கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண் டும். இதுவே இன்று அவசர -அவசிய - தேவை யாக உள்ளது.

இதைவிடுத்து நிரந்தரத் தீர்வுக்கான யோசனை களைத் தயாரிப்பதால் பயன் ஏற்படப்போவ தில்லை. மக்கள் எதிர்பார்ப்பது நிரந்தரத் தீர்வை அல்ல. நிரந்தர இயல்பு வாழ்க்கையையே.

நிரந்தரத் தீர்வுக்கான யோசனையைத் தயாரிக்கும் பணிக்குச் சமாந்தரமாக மக்களின் நிம்மதியான வாழ்வுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அப்போதுதான், நிரந்தரத் தீர்வால் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனங்களில் ஏற்படும். இந்த யதார்த்த நிலையை உணர்ந்து

-[illegible]-

மஹிந்தர் அரசு காய்நகர்த்தலில் [illegible] டால் மட்டுமே அவரால் மக்களின் மனங்களை வெல்லமுடியும்.

இல்லாவிட்டால் கடந்தகால ஒப்பந்தங்கள் போன்று அவரின் யோசனைகளும் கிழித்தெறி யப்படும் நிலை உருவாகும். நாடு ஒரு பாரிய யுத்தத்தில் மூழ்கும்.

இறுதியோசனையைத் தயாரிக்கும் விடயத் தில் காட்டும் ஆர்வத்தை மக்களின் இயல்பு வாழ்வைச் சீராக்கும் விடயத்திலும் மஹிந்தர் காட்டப் போகின்றாரா? அல்லது சர்வதேசத்தை ஏமாற்ற, உருப்படியில்லாத-தமிழர் தரப்பு ஏற் காத தீர்வை முன்வைக்கப் போகின்றாரா? பொ றுத்திருந்து பார்ப்போம்.

# முஸ்லிம் சமூகத்தின் சாபக்கேடு

இலங்கையில் புரையோடிப் [illegible]யுள்ள இனப்பிரச்சினைக்கு அமைதி [illegible]யில் அரசியல் தீர்வு ஒன்றைக்காண [illegible]ண்டியதன் அவசியம் உணரப்பட்[illegible]ருக்கும் இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை



உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நகர்வுகள் எவையும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை.

ரணில் விக்கிரம சிங்கவின் இருவருட கால ஆட்சியில் காணப்பட்ட சமாதானச்சூழல் அவர் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் சந்திரிக்கா அம்மையாரின் அந்திமகால ஆட்சியில் சீர்குலைந்ததோடு, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து அந்நிலைமை மேலும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக கடந்த சில மாதங்களாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற வன்முறைகள் [illegible]கடனப்படுத்தப்படாத போர் ஒன்று

> “இன்று முஸ்லிம் கட்சிகளின் அதிகரிப்பே முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் சாபக் கேட்டை ஏற்படுத்தியுள்ளது. தமது அரசியல் காய் நகர்த்தல்களுக்காக சமூகத்தின் பெயரால் கட்சிகளை உருவாக்கிக் கொண்டு தமக்கான அரசியல் பயணத்தை தொடர்கின்றனர். ஆனால் இவர்களின் செயற்பாடுகளினால் முஸ்லிம் சமூகம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கிறது.”

[illegible] பெறுவதையே எடுத்துக் காட்டுகின்றன. அரச படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் நடத்தும் கொரில்லாத் தாக்குதல்கள் நாட்டை அதிரச் செய்துள்ளன. கொழும்பு மற்றும் அனுராதபுர குண்டுத் தாக்குதல்கள் அரசை நிலை குலைய வைத்துள்ளன.

அதனால் இதய சுத்தியுடன் இல்லாவிட்டாலும் பெயரளவிலாவது [illegible] முயற்சிகளை மேற்கொள்வதற்கு சிங்களத் தேசம் [illegible] வருகின்றது. அதற்கமைவாக [illegible] [illegible]

ஒரேயொரு முஸ்லிம் பிரதிநிதியாக பிரபல ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

சர்வகட்சி ஆலோசனை சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், நுஆ ஆகிய நான்கு முஸ்லிம் கட்சிகளின் சார்பில் தலா ஒருவர் வீதம் நான்கு அரசியல் வாதிகள் இடம் பெற்றுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி எம்.பி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட், தேசிய காங்கிரஸ் சார்பில் அதன் பிரதித் தலைவர் டாக்டர் ஏ.உதுமாலெப்பை, நுஆ சார்பில் அதன் பிரதித் தலைவர் சட்டத்தரணி எம்.எம்.அபுல்கலாம் ஆகியோர் அவ்வக்கட்சிகளின் தலைவர்களால் சிபார்சு செய்யப்பட்டு ஜனாதிபதியின் ஆலோசனை சபையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆனால் முஸ்லிம் கட்சிகளின் பணிகள் இந்த மட்டத்தில் முடிந்து விடுமா? அல்லது இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் சமூகத்திற்கான இலக்கை அடைந்து கொள்வதற்கேற்ற பங்களிப்பை இக்கட்சிகள் மேற்கொள்ளுமா? என்பதே சமூக ஆர்வலர்களின் கேள்வியாகும்.

ஏனெனில், முஸ்லிம் சமூகத்தில் இன்று பல்வேறு கட்சிகள் இயங்கி வருகின்றன. அவை தங்களிடையே போட்டி அரசியலையே மேற்கொண்டிருக்கின்றன. தத்தம் பதவிகளைத் தக்க வைத்துக்கொண்டு சுகபோகங்களை அனுபவித்துக் கொள்வதிலேயே முஸ்லிம் தலைமைகள் கரிசனை காட்டி வருகின்றன.

**கருத்தொருமிப்பு இல்லை**

இப்போதைய முஸ்லிம் தலைவர்கள் சமூக நலன்களில் அக்கறை காட்டுவதாக இல்லை. குறைந்தபட்சம் சமூகம் சார்ந்த விடயங்களில் கருத்தொருமைப்பாடன் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்குக் கூட அவர்கள் முன்வருவதாக இல்லை. குறிப்பாக இனப்பிரச்சினை விடயத்தில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்துக் கட்சி முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒரு மேசையில் அமர்ந்து கலந்துரையாடுவதற்குக் கூடத் தயாரில்லை.

[illegible] வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் [illegible] [illegible]

இவ்வடிப்படையில் [illegible] [illegible]

இன்று முஸ்லிம் கட்சிகளின் அதிகரிப்பே முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் சாபக்கேட்டை ஏற்படுத்தியுள்ளது. தமது அரசியல் காய் நகர்த்தல்களுக்காக சமூகத்தின் பெயரால் கட்சிகளை உருவாக்கிக் கொண்டு தமக்கான அரசியல் பயணத்தை தொடர்கின்றனர். ஆனால் இவர்களின் செயற்பாடுகளினால் முஸ்லிம் சமூகம் அதல பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கிறது.

**கட்சிகள் அதிகரிப்பு!**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலும் அதிலிருந்து பிரிந்து சென்றவர்களால் உருவாக்கப்பட்ட கட்சிகளான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் நுஆ என்பனவும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றன.

அதேவேளை, நுஆ, ஸ்ரீலங்கா முஸ்லிம் மக்கள் கூட்டணி, வடக்கு-கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி போன்றவை தேர்தல் ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட

**அஸ்லம் எஸ்.மௌலானா**

அரசியல் கட்சிகளாக இயங்கி வருகின்றன.

இவை தவிர ஐக்கிய முஸ்லிம் காங்கிரஸ், அஷ்ரப்காங்கிரஸ், தேசிய முஸ்லிம் காங்கிரஸ், தென்கிழக்குத் தேசியவாதிகள் முன்னணி, கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி, முற்போக்கு முஸ்லிம் முன்னணி உட்பட மற்றும் பல கட்சிகளும் இயங்கி வருகின்றன.

போதாக்குறைக்கு கண்ணியமிக்க உலமாக்களின் பெயரிலும் ஒரு கட்சி செயற்பட்டு வருகின்றது. நாட்டில் பல்லாயிரக்கணக்கான உலமாக்கள் இருக்கும்போது ஓரிரு மௌலவிகள் சேர்ந்து ‘உலமாக்களின் ஐக்கிய முஸ்லிம்கட்சி’ எனும் பெயரில் இயங்கி வருவதானது இஸ்லாமிய மார்க்க ரீதியான விமர்சனங்களுக்கு இடமளித்திருக்கிறது.

எவ்வாறாயினும் இவ்வளவு முஸ்லிம் கட்சிகளும் சமூகத்தின் உரிமைகளை வென்று தருவதற்கு முன்னிற்குமாயின் அதனை



விட வேறு எந்தப்பேறும் முஸ்லிம் சமூகத்திற்குத் தேவைப்படாது. ஆனால், நிலைவரம் தலைகீழாகவே இருக்கிறது. அதிகரித்த முஸ்லிம் கட்சிகளினால் நற்பேறு என்பதை விட சாபக்கேட்டையே சமூகம் எதிர்நோக்கியிருக்கிறது.

**ஒத்தூதும் தலைவர்கள்**

முஸ்லிம்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதில் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆக்கபூர்மான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவில்லை எனவும் அவர் பதவிக்கும், பணத்திற்கும் சோரம் போய்விட்டார் எனவும் குற்றஞ்சாட்டிக் கொண்டு கட்சியை விட்டு வெளியேறி சமூகத்தைக் கூறுபோட்ட மாற்று முஸ்லிம் தலைவர்கள் இப்போது

(15ஆம் பக்கம் பார்க்க)


# பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவு [illegible] மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்பமான நோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இல்லாமைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்மீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறு வது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) [illegible] மூலிகை மருந்துகளின் [illegible] அனுப்பிவைப்போம்.

இப்பொழுது [illegible]

**கொழும்பில்...**

2006 [illegible] 23 - 30 [illegible]

New [illegible] Building

[illegible] Bankshall Street, Colombo - 11.

[illegible] 2368427

Hot Line: 0777 569205

**வவுனியாவில்...**

2006 [illegible] 08 - 09

[illegible] 024 2222074

Hot Line: 0777 569205

**யாழ்ப்பாணத்தில்...**

2006 [illegible]

Hot Line: 0777 569205

[illegible]

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 54/5, [illegible] Road Batticaloa, Srilanka. Resident Tel No.065 2224410, Hot Line: 0777 569205.

சுடர்ஒளி

ஜூலை 23 - 29 , 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

# காலம் பதில் சொல்லும்

''நான் பதவி ஏற்றவுடன் நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சகல ஜனநாயகக் கட்சிகளுடனும் பிரிக்கப் படாத நாடு, பெரும்பான்மையோர் இணக் கப்பாடு, கௌரவமான சமாதானம் என்ற கொள்கை அடிப்படையில் பேச்சுவார்த்தை யைத் தொடங்குவேன்.

''நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறாத அரசியல் கட்சிகளுடனும் கூட நான் இத்தகைய கலந்துரையாடல்களை மேற் கொள்ளத் தொடங்குவேன். நான் விசேட மாக மகாசங்கத்தினருடனும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ், சிங்கள, முஸ் லிம் அமைப்புக்களுடனும் கலந்துரை யாடல் செய்வேன். அத்தகைய உரையாடல் களை நான் மூன்று மாதங்களில் நிறைவு செய்வேன்''

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் இவை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள் கைகளை உதறித்தள்ளிவிட்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது மஹிந்த சிந் தனையை முன்வைத்து மஹிந்தர் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

மஹிந்தர் ஜனாதிபதியாகி தற்பொழுது எட்ட மாதங்கள் கழிந்துவிட்டன.

சர்வகட்சி மாநாடு, சர்வகட்சி ஆலோச னைச் சபை என்று இப்போது தான் மஹிந்தர் ஏதோ பேசி வருகிறார். அதுவும் தீர்வுத் திட் டம் ஒன்றை முன்வைக்குமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க, அதனைச் சமா ளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதுதான் சர்வகட்சி ஆலோசனைச் சபை. தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறி காலம் கடத்தும் கபட நோக்கம் கொண் டது இது.

நிம்புப் பேச்சு தொடக்கம் இதுவரை அரசாங்கத்தினால் இலங்கை இனப்பிரச் சினைக்கு தீர்வுத்திட்டம் ஒன்றை முன் வைக்க முடியாத நிலைமையே இருந்து வருகிறது. சர்வகட்சி ஆலோசனைச் சபை யும் இதனைத்தான் செய்யப் போகிறது.

சர்வகட்சி ஆலோசனைச் சபை தனது தீர்வுத் திட்டத்தை கையளிப்பதற்கு கால வரையறை எதுவும் வழங்கப்படாததில் இருந்தே அரசாங்கத்தின் கபடத்தனம் புலனாகிறது.

சர்வகட்சி ஆலோசனைச் சபையின் முத லாவது கூட்டம் சமீபத்தில் நடைபெற்ற போது, தீர்வுக்கான வரையறைகளை உரு வாக்கும் முயற்சி விரைவானதாகவும் சாத்தி யமானதாகவும் இருக்க வேண்டும் என்று மஹிந்தர் கூறி இருந்தார்.

ஆனால் இதற்கான கால வரையறை வழங்கப்படாதது, இழுத்தடிப்பு நோக்கத்தை வெளிக்காட்டுகிறது. அத்துடன் சர்வகட்சி ஆலோசனைச் சபை தனது தீர்வுத் திட் டத்தை தயாரித்தாலும் மேசைக்கு புலிகளைக் கொண்டு செல்வதற்குக் கூட இது உதவப் போவதில்லை. தென்னிலங்கைப் பேரின வாதப் போக்கையே இது பிரதிபலிக்கப் போகிறது.

பேச்சு வார்த்தையை இழுத்தடிப்பது மூலம் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் என்று மஹிந்தர் நினைக்கிறார்.

2002 பெப்ரவரி போர் நிறுத்த ஒப்பந் தத்தின் பின்னர் புலிகள் அமைப்பில் இருந்து கருணா குழு பிரிந்து சென்றமை, ஸ்ரீலங்கா படைத்தரப்பின் ஆழ ஊடுருவும் பிரிவினர் நடத்திய தாக்குதல்களில் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் சிலர் உயிரிழந்தமை, சர்வதேச சமூகத்தின் நெருக்குவாரங்கள் புலிகள் மீது அதிகரித்து வந்தமை ஆகியவை மஹிந் தருக்கு உற்சாகம் அளித்திருக்கக் கூடும்.

யுத்தமும் இல்லாத, சமாதானமும் இல்லாத தற்போதைய நிலைமை உண்மையில் புலிகளுக்கு ஒரு நெருக்கடியான காலம் தான். ஆனால் இத்தகைய நிலைமை தொடர்ந்து நீடிக்கப் போவதில்லை என்பதை கள நிலைமைகள் காட்டுகின்றன. யுத்தம் ஒன்றை எதிர்நோக்கும் நிலையில் அரசாங் கம் இல்லை என்பது நன்கு தெரிகிறது.

அரசாங்கம் யுத்ததுக்குத் தயார் இல்லை அதே நேரம் சமாதானப் பேச்சுக்கும் தயார் இல்லை. தமிழ மக்களுக்கு உரிமை எதுவும் கொடாது அவர்களை அடக்கி, ஒடுக்கி வாழவே விரும்புகிறது. காலம் இதற்கு விரைவில் சிங்கள தேசம் பதில் சொல்லும்.

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசின் வியூகம்

மட்டக்களப்பு வாகனேரியில் கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய இராணுவத் தினர் பன்னிரண்டு பேர் தாம் நடத்திய பதிலடித் தாக்குதலில் உயிரிழந்திருப் பதாகவும் தமது தரப்பில் நான்கு போராளிகள் உயிரிழந்தும் ஆறு பேர் படுகாயமடைந்தும் உள்ளனர் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர். இதை இராணுவத்தரப்பும் உறுதி செய்திருந்தது.

### ஜே.வி.பியின் உரிமை மீறல் மனுக்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை முறியடித்து இனப்பிரச்சினைக்குத் தான் விரும்பும் தீர்வொன்றை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிட நினைக்கும் மஹிந்தரின் சிந்தனைக்கு மற்றொரு சான்றாக இந்தத்

''இலங்கையில் சட்டரீதியான அரச படைகளை விடுத்து மூன்றாவது படை ஒன்று இயங்க முடியாது. சட்ட ரீதியற்ற அந்தப்படைக்கு எமது நாட்டில் இடம் இல்லை.

இந்த நாடு பிரிக்கப்படாத இறைமையுள்ள நாடு. இங்கு எல்லைக் கிராமங்கள் இல்லை. எந்த ஒரு நாடும் பிரிந்தால்தான் எல்லைக் கிராமங்கள் இருக்கும். ஆனால் இலங்கை இன்றும் பிளவு படவில்லை.

சட்டரீதியான எமது படையினருக்கு நவீன ஆயுதங்களை வழங்கி பலப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதனை தற்போது செய்து கொண்டுவருகிறோம்'' இவ்வாறு அவர் தொடர்ந்து கூறியிருக்கிறார்.

* ஜே.வி.பியின் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்.

இனப் பிரச்சினை விடயத்தில் அரசாங்கம் கொண்டிருக்கும் நிலைப்பாடு என்னவென்று அமைச்சர் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார். அவர் இது விடயமாக மூன்று விடயங்களை முன்வைக்கின்றார்.

1. தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர்

2. இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் அவர்களின் பங்களிப்பு வேண்டியதில்லை

3. தமிழ்மக்கள் மத்தியிலுள்ள கட்சிகளின் ஊடாக பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும்.

இங்கே ஒரே ஒரு விடயத்தை மட்டும் அமைச்சருக்குத் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஸ்ரீ லங்காவில் இறுதியாக இடம் பெற்ற பொதுத்தேர்தலில் தமது ஏக பிரதிநிதிகள் யாரென்பதை தமிழ்மக்கள் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்திய


தாக்குதல் விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் நடந்தேறியுள்ளது.

மஹிந்தர் மட்டுமன்றி அவர் சார்ந்துள்ள பேரின வாத சக்திகளும், ஏன் அவரது அமைச்சர்களும் கூட, விடுதலைப் புலிகளையும் தமிழ்மக்க

* பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்கவின் உரை

இவை இரண்டும் விடுதலைபுலிகளின் உரிமைப் போராட்டத்தை முறியடித்து அவர்களின் அடிப்படை அபிலாஷைக ளுக்கு முரணான தீர்வொன்றை திணிக்க

நிலையில்தான் அப்போதைய ரணிலின் அரசாங்கம் தற்போதைய அமைதி முயற்சிகளுக்கு அத்திவாரமாக உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்டது.







தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் எல்லை போடுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் வி. உருத்திர குமார் கூறியிருக்கிறார்.

தீர்வு ஐக்கிய இலங்கைக்குள்ளேயே அமைய வேண்டும் எனக் கூறுவதன் மூலம் சர்வதேச சமூகமும் சமாதானத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது என்பதுதான் அவரது நிலைப்பாடு.

சுதந்திரமான ஒரு நாட்டை உருவாக்குதல் மூலமும் சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப்படலாம் என்ற சுய நிர்ணய உரிமை விதிக்கு 'ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு' என்ற நிலைப்பாடு முரணானது மட்டுமல்லாமல் உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள தேசியப் பிணக்குகளின் விடயத்தில் சர்வதேச சமூகம் கையாண்டுவரும் தற்போதைய நடைமுறைகளுக்கும் இது முற்றும் மாறுபட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ளுக்கான அவர்களது போராட்டத்தையும் முறியடிக்கும் திட்டங்களையே முனைப்புடன் முன்னெடுத்து வருகின்றனர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை எதிர்த்து மூன்று அடிப்படை உரிமை மீறல்களை ஜே.வி.பி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. தமிழர் தாயகமான வடக்கு கிழக்குக்கு அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்கான ஆரவாரங்களில் மஹிந்தர் தன்னை ஈடுபடுத்தியுள்ள அதே சமயம் அவரின் நேச அணியினரான ஜே.வி.பியினர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவெனில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் ஆதரித்து வாதிடுவதற்கு ஜே.வி.பி சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகளில் இருவர் ஜனாதிபதி நியமித்துள்ள புத்திஜீவிகள் குழுவில் அங்கத்துவம் பெற்றிருப்பதே. இவர்களில் ஒருவர் புத்திஜீவிகள் குழுவின் தலைவரான எச்.எல்.டி.சில்வா. மற்றவர் சட்டத்தரணி கோமின் சில்வா ஆவார்.

### படையினருக்கு நவீன ஆயுதங்கள் வேண்டும்

இவ்வாறு வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கான சட்ட நடவடிக்கையை ஜே.வி.பி முன்னெடுக்க ''விடுதலைப் புலிகளின் இலக்குகளைத் தாக்கி அழிப்பதற்கு எமது இராணுவம் தயாராக உள்ளது. படைகளுக்கு நவீன ஆயுதங்களை வழங்கி அவர்களை மேலும் பலப்படுத்த வேண்டும்'' என்று போர் முழக்கம் செய்கின்றார் இந் நாட்டின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா.

விரும்பும் தென்னிலங் கையின் திட்டத்தை நிருபிப்பதற்கு போதுமான சந்தர்ப்ப சாட்சியங்களாக அமைந்துள்ளன.

### அமைச்சரவை பேச்சாளர் என்ன சொல்கிறார்

அதேசமயம் அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்பு பற்றிய சிந்தனையை உள்ளவாறே வெளிப்படுத்தியுள்ளார் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா.

''இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி எல்.ரி.ரி.யினர் வெளியி டும் விமர்சனங்களை கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு கிடையாது. அவர்கள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர்.

தமிழர்களைப் பிரதிநித்துவப் படுத்துவதற்கு தமிழ் மக்கள் மத்தியில் பல கட்சிகள் உள்ளன. அந்தக் கட்சிகளுடன் ஆலோசித்து தமிழ் மக்களின் பிரச்சினைக் கான தீர்வை அரசு முன்வைக்கும்'' என்று அமைச்சர் யாப்பா கூறியுள்ளார்.

இவரே அமைச்சரவைப் பேச்சாளராவார். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அமைச்சரவை பேச்சாளரின் கருத்தையே அரசின் கருத்தாகக் கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது.

இவரது இந்தக் கருத்துகளை கவனத்தில் எடுத்துப் பார்க்கும் போது அரசாங்கத்தின்

**சுபாஷ்**

தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் அனைத்தும் நாம் மற்றொரு பத்தியில் குறிப்பிட்டுள்ளதைப் போல வெறும் ஆரவாரங்களாகவே அமையப் போகின்றன என்பது தெளிவாகின்றது.

இந்த உண்மைக்குப் புறம்பாக தமிழ் மக்களை பிரதிநித்துவப் படுத்தும் மற்றைய கட்சிகளுடன் இணைந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என அமைச்சர் கூறியது வெறும் வாய்வீச் சாகவே இருக்க முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒதுக்கி வைத்துவிட்டு அமைச்சர் டக்ளஸ், ஆனந்த சங்கரியார், வரதர் அணியினர், கருணா அம்மான் போன்றோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலம் விடுதலைப் புலிகளை முறியடித்துவிட லாம் என்றோ அல்லது தமிழ் மக்களின் 50 ஆண்டுகாலப் பிரச்சினைக்கு முடிவு காணலாம் என்றோ அரசு சிந்திப்பதை முட்டாள்தனம் என்றுதான் வர்ணிக்க முடியும்.

புலிகளை ஓரங்கட்டிவிட்டு அறிமுகப் படுத்தப்படும் எந்த ஒரு தீர்வும் தென்னிலங்கையையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்குப் பயன்படலாம். ஆனால் விடுதலைப் புலிகளையோ அல்லது அவர்கள் பின்னால் அணி திரண்டு நிற்கும் மக்களையோ இத்தகைய தீர்வு திருப்திப்படுத்தப் போவதில்லை.

### ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு

தமிழர் தரப்பின் சம்மதமின்றி தான் விரும்பும் தீர்வொன்றை முன்வைப்பதற்கான காய்களை மஹிந்தர் நகர்த்தி வரும் இவ்வேளையில் சர்வதேச சமூகம் பிரச் சினைக்கான தீர்வு தொடர்பாக வரம்புக ளையும் கட்டுப்பாடுகளையும் அறிவித்து வருகின்றது.

* இராணுவத் தீர்வு பிரச்சினைக்குச் சாத்திய மாகாதென்றும்

* பேச்சுவார்த்தை மூலமே தீர்வொன்று எட்டப்பட

வேண்டுமென்றும்

கூறும் அதேநேரம் பிரச்சினைக்கான தீர்வு ஐக்கிய இலங்கைக்குள்ளேயே எட்டப்பட வேண்டும் என்றும் அது


(14 ஆம் பக்கம் [illegible])

# மீண்டும் மீண்டும் இலக்கு வைக்கப்படும் மும்பாய்



இந்தியாவின் மும்பாய் நகர குண்டு வெடிப்புச் செய்திகள் வெளியாகிய மறுநாளிலிருந்து தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று சிறுவன் ஒருவனின் புகைப்படத்தை ஒளிபரப்பியவாறிருந்தது. 12 வயதான அவன் குண்டு வெடிப்பில் சிக்கி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தான். சுய நினைவு இழந்த நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவனது உறவினர்களை மருத்துவமனை வட்டாரங்கள் தேடிக் கொண்டிருந்தன.

ஏறக்குறைய 48 மணித்தியாலங்களின் பின்னர் அயலவர் ஒருவர் தகவல் கொடுத்ததால் அந்தச் சிறுவனின் தந்தையான அம்றித்லால், தொலைக் காட்சியைப் பார்த்தார். அதில் தனது மகனைப் போலவே இருந்த அந்த சிறுவனின் படத்தைக் கண்டதும் அதிர்ந்து போனார்.




எனினும், விடுமுறையைக் கழிக்க உறவினர்களுடன் சுராட் நகருக்குச் சென்றிருந்த தனது மகன் ராகேஷே அவன் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள அவருக்கு அதிக நேரம் செல்லவில்லை.

இப்போது ஒவ்வொரு நிமிடமும் இறைவனைப் பிரார்த்தித்தபடியே சிறுவன் ராகேஷுக்கு அருகில் அவனது தாயும் தந்தையும் இருக்கிறார்கள்.

இப்படி எண்ணற்ற சம்பவங்களால் நிறைந்து கிடக்கிறது மும்பாய்.

தொலைபேசி இணைப்புகள் வேறு குழம்பிப் போயுள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு புறம், தமது உறவினர்களுக்கு என்னவாயிற்றோ என்று அந்தரித்து விசாரிப்பவர்கள் மறுபுறமுமாக அங்கலாய்ப்புகள் நிறைந்த இடமாகி விட்டிருக்கிறது மும்பாய் நகரம்.

குண்டுவெடிப்புகள் தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸாரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுபவர்களுமாக ஒருசாரார் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மும்பாய் நகரத்தில் மட்டுமன்றி டெல்லியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன.

குண்டுகள் வெடித்த சில மணி நேரங்களுக்குள் பாதுகாப்பு கூட்டத்தைக் கூட்டிய பிரதமர் மன்மோகன்சிங், மருத்துவ மனைக்குச் சென்று காயமடைந்தவர்களையும் பார்வையிட்டார்.

இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பாயெங்கும் பயமும், பீதியும் உலாவ, அவ்வப்போது கிளம்பிவரும் வதந்திகளாலும் ஆட்டங்கண்டு கிடக்கின்றது அது.

இந்தியாவின் மிகப் பெரிய உற்பத்தி நிறுவனங்கள் மட்டுமன்றி வெளிநாட்டு பல்தேசிய கம்பனிகளினதும் தலைமை மையமாக மும்பாய் இருக்கின்றது. அது பொலிவூட் திரைப்படங்களின் தயாரிப்பு மையமாகவும் இருப்பது இந்திய பொருளாதாரத்தில் மும்பாயின் பங்கை முதன்மைப்படுத்தி இருக்கின்றது.

உலகில் மிகப் பெறுமதியான சொத்துக்களையுடைய நகரமாகவும் மும்பாய் குறிப்பிடப்படுகின்றது.

எனினும் இங்கு வசிப்பவர்களில் அநேகமான பொதுமக்கள் சேரிப்புறங்களிலுள்ள எளிய சிறிய வீடுகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

ஏறத்தாழ 170 லட்சம் மக்கள் வசிக்கும் இந்த நகருக்கு வெளியிடங்களிலிருந்து ஒவ்வொரு மாதமும் வந்து தங்கிப்போவோரின் தொகையே பல ஆயிரங்களைத் தொட்டு நிற்கின்றது.

நகரின் வர்த்தக வலயங்களிலிருந்து புகையிரதங்களின் முதலாம் வகுப்பு பெட்டிகளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த உயர்மட்ட வர்த்தக அதிகாரிகளை இலக்கு வைத்தே இந்த தாக்குதல்கள் இடம் பெற்றிருக்கின்றன என்று உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நன்கு திட்டமிடப்பட்ட முறையில் கூட்டிணைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதல்கள் மும்பையின் மாதுங்கா, ஹார், மாஹிம், ஜோஹேஸ்வரி, பூரிவாலி, பஹாணய்டர் ஆகிய ஏழு இடங்களில் நேரம் குறித்து நடத்தப்பட்டுள்ளன.

**-லக்ஷ்மன் கந்தையா-**

முதலாவது குண்டு, ஹார் சந்த குருஸ் என்ற இடத்தில் மாலை 6.24 க்கு வெடித்தது. அதிலிருந்து ஒரு சில நிமிட இடைவெளிகளில் மற்றைய குண்டுகளும் வெடித்தன. ஏழாவது குண்டு மாதுங்கா புகையிரத நிலையத்தில் மாலை 6.34 க்கு வெடித்தது.

இவற்றில் இரண்டு, புகையிரதங்கள் ஓடிக் கொண்டிருக்கும் போதும் ஏனையவை புகையிரத நிலையங்களில் வைத்தும் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மும்பாய் நகர புகையிரத வலையமைப்பானது உலகில் சனப்புழக்கம் அதிகமுள்ளதெனக் கணிக்கப்பட்ட புகையிரத சேவைகளில் ஒன்றாகும். நாளாந்தம் சுமார் 60 லட்சத்துக்கு அதிகமானவர்கள் புறநகர்ப் பகுதிகளில் இருந்து நகரின் மத்திக்கு தமது பணிகளுக்காக புகையிரதங்கள் வந்து போகிறார்கள்.

கன்னடம், ஹிந்தி, குஜராத்தி மலையாளம், வங்காளி உருது, தெலுங்கு, தமிழ் உட்பட பல்வேறு மொழிகளைப் பேசும் பல்லின மக்களும் வாழும் கலாசார நகரான மும்பாய் பாரம்பரிய பண்புகளைப் பேணுகின்றது என்பதற்காக மூன்று தடவைகள் யுனெஸ்கோவின் விருதுகளைச் சுவீகரித்திருக்கிறது.

1960களின் பின்னரிலிருந்து 'பம்பாய்' என அழைக்கப்பட்டு வந்த இந்த நகரம் 1995 களில் சிவசேனா கட்சி மகாராஷ்டிராவில் ஆளும் கட்சியாக இருந்த வேளையில், நகரங்களுக்கு தேசியப் பெயர்களை இட வேண்டும் என்ற அக்கட்சியின் கொள்கையின்படி 'மும்பாய்' என மாற்றம் செய்யப்பட்டது.

இயற்கையான துறைமுகம், தொழிற்சாலைகள் என்பன ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய காலத்திலிருந்தே மும்பாய்க்கு பொருளாதார முக்கியத்துவத்தை கொடுத்து வருகின்றன.

இந்தத் தாக்குதல்கள் கூட இந்தியாவின் பொருளாதாரத்தை அச்சுறுத்தும் செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றன. இந்த தாக்கதல்களுக்கும் இந்திய அதிகாரிகள் பாகிஸ்தானின் மீதே குற்றம் சாட்டுகிறார்கள். இந்தியாவில் உள்ள - தடை செய்யப்பட்டுள்ள - இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் உதவி செய்கிறது என்ற குற்றச்சாட்டுகள் நீண்ட காலமாக இருந்து வந்தாலும், இம்முறை 'சிபி' என்ற அகில இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் பாகிஸ்தானின் உதவியுடன் இந்தத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாகக் கூறியுள்ள இந்திய அதிகாரிகள் அந்த அமைப்பைச் சேர்ந்த சுமார் 800 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

பாகிஸ்தானிலும், ஈரானிலும் ஆயுத பயிற்சி பெற்றதாகக் கூறப்படும் முகமட் சமியுதீன், முகமட் பைஜாஸ் ஆகிய இருவரின் புகைப்படங்களை வெளியிட்டுத் தேடி வருகிறது இந்திய பொலிஸ். மும்பையில் ட்ரவல்ஸ் நடத்திவந்த ராகில் என்பவரின் உதவியுடன் திருட்டுத்தனமான கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டு இவ்விருவரும் பங்களாதேஷ் ஊடாக ஈரானுக்கு தப்பியோடி விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் 'சிபி' அமைப்பு இந்த தாக்குதலுக்கும் தமக்கும் எந்த தொடர்பும் இல்லை என கூறிவருகிறது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

**மார்ச் 12, 1993**

நகரின் 13 இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் 257 பேர் கொல்லப்பட்டதுடன் 713 பேர் காயமடைந்தனர். பாதாள உலக ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் தாவூத் இப்ராகிம் இந்த தாக்குதல்களை திட்டமிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

**டிசம்பர் 02, 2002**

ஹார்தபார், சுபூர்பன் புகையிரத நிலையத்தில் குண்டு வெடித்ததில் 2 பேர் கொல்லப்பட்டதுடன் 31 பேர் காயமடைந்தனர்.

**டிசம்பர் 06, 2002**

மும்பை மத்திய புகையிரத நிலையத்தில் உணவு விடுதி ஒன்றின் குளிரூட்டியில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 25 பேர் படுகாயமடைந்தனர்.

**ஜனவரி 27, 2003**


'வேலி பார்லே' புகையிரத நிலையத்தில் அமைந்த வர்த்தக கட்டடத் தொகுதியில் துவிச்சக்கர வண்டியில் வைத்து வெடிக்கச் செய்யப்பட்ட குண்டினால் 30 பேர் காயமடைந்தனர்.

**மார்ச் 13, 2003**

'முலூண்ட்' புகையிரத நிலையத்தினுள் நுழைந்து கொண்டிருந்த 'மகளிர் மட்டும்' புகையிரதம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதுடன் 65 பேர் காயங்களுக்கும் உள்ளாகினர்.

**ஆகஸ்ட் 25, 2003**

மும்பையிலுள்ள இந்தியாவின் நுழைவாயிலுக்கருகிலும் சாவேரி பஜாரிலும் வாடகைக் கார் தரிப்பிடங்களில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து வெடித்ததில் 46 பேர் கொல்லப்பட்டதுடன் 160 இற்கும் அதிகமானோர் காயங்களுக்கும் உள்ளாகினர்.



# சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலில் டட்லி காட்டிய தீவிரம்!

சிங்கள அதிகாரசக்தி நிலை நாட்டப்பட வேண்டியிருந்த துறைகளில் மொழி அம்சம் ஒன்று. நாடுமுழுவதும் சிங்களத்தை அமுல்படுத்தியதால் ஊக்கம் பெற்றிருந்த ஐ.தே.க., அரசு தமிழரசுக் கட்சியும் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டுவிட்டதால் மேலும் பல காரியங்களை செய்யத் தொடங்கியிருந்தது. அதற்கு தமிழரசுக் கட்சியின் மெத்தனப்போக்கு வசதியாகவிருந்தது. ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் என்று தமிழரசுக்கட்சி இலவு காத்த கிளி போல் காத்திருந்ததுதான் மிச்சம். டட்லி சேனநாயக்க அரசாங்கம் அடுத்ததாக துறைமுக நகரமான திருகோணமலை பக்கம் தன் கவனத்தைத் திருப்பியது. திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டமானது கிழக்கு மாகாணத்தில தமிழர்களை ஏமாற்றுவதற்காக ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட தந்திரமிக்க திட்டமாகும்.

திருகோணமலைத் துறைமுகத்தை தேசியமயமாக்கும் திட்டமாகும் அது. திருகோணமலை தேசியமய யோசனை முன்வைக்கப்பட்டபோது, அதனை தனித்து நின்று எதிர்ப்பதும் எதிர்க்கும்படி அமைச்சர் திருச்செல்வத்தை வற்புறுத்துவதும் எனது கடமையாயிற்று. திருச்செல்வம் இந்தப் பிரச்சினையின் மீது பதவியிலிருந்து விலக முன்வருவாரானால், தமிழரசுக்கட்சி தனது ஆதரவை விலக்கிக்கொள்ளும் அபாயம் ஏற்படும். இதனை அரசாங்கம் விரும்பாது. அத்திட்டத்தை முன்னெடுக்கவும் செய்யாது என்று நான் கூறினேன். செல்வநாயகம் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். திருச்செல்வம் பலவிதமான சரியென ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதங்களை முன்வைத்தார். அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் குறைத்தும் அதனை ஏற்றுக் கொண்டுள்ள தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தியும் வாதிட்டார். அமிர்தலிங்கம் செல்வநாயகத்தின் பேச்சாளராக செயற்பட்டார். திட்டத்தினால் ஏற்படக்கூடிய அபாயங்கள் பற்றி அவர் அறியாதவராய் இருக்கவில்லை. ஆனால் அவர் கருத்தின்படி அரசாங்கம் அத்திட்டத்தை நிறைவேற்றுவதில் முனைப்பாக இருந்தது. அதற்கான




எதிர்ப்பை நாம் தொடர்ந்து நடத்தினால் திருச்செல்வம் அமைச்சரவையிலிருந்து விலகவேண்டி ஏற்படும். அதைச் செய்ய விரும்பவில்லை. டட்லி - செல்வா ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அவர் அமைச்சரவையில் தொடர்ந்து இருப்பது அவசியம் என்று அவர் கூறினார்.

இவ்வாறு அமைச்சர் பதவி பெறும் சந்தர்ப்பவாத அரசியல் ஒன்றும் பலிபீடத்தில் காவுகொடுக்கப்பட்ட இன்னொரு பலிக்கடாதான் திருகோணமலையும். இதன் விளைவுகள் மிகப்பயங்கரமானதாகும். சிங்களவர்களுக்கென மேலும் தொகுதி பிரித்தெடுக்கப்பட்டதையடுத்து அப் பகுதியிலிருந்த தமிழ் மக்கள் தொகை பெரும்பாலும் இல்லையென்று ஆகிவிட்டது. டட்லி சேனநாயக்கா அரசின் பதவிக்காலம் இப்பொழுது முடியும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. மொழிச்சட்டத்தை தவிர டட்லி - செல்வா ஒப்பந்தத்தில் வேறு ஒரு அம்சமும் தொடக்கூடப்படவில்லை. இருந்தும் தமிழரசுக்கட்சி காத்துக்கொண்டிருந்தது.

தமிழரசுக்கட்சி இலவுகாத்த கிளியின் நிலையில் இருந்தது என்றால் ஐ.தே.கட்சி காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற முறையில் காரியமாற்றியது.




அடுத்த கட்டமாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் பிரதமர் தன் கவனத்தை செலுத்தலானார். இது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

தனது தரப்பில் எத்தனையோ விடயங்களை முன்னுரிமை கொடுத்து செயற்படுத்த வேண்டியிருந்த நிலையிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சாதனையான சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தைப் பிரதமர் டட்லி சேனநாயக்க இவ்வளவு அவசரப்பட்டு அமுல்படுத்த முனைந்தமைக்கான காரணம் தெரிய வேண்டுமானால் ஒரு விடயத்தை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது, சுதந்திரம் கிடைத்தபின் முதல் சில ஆண்டுகளில் முழு சிங்களச் சக்திகளுக்கும் தலைமை வகித்தவர்களான ஐ.தே. கட்சியினர்தான் தமிழ் - சிங்களப் பிரச்சினை என்ற விருட்சம் தோன்றுவதற்கான நச்சுவிதைகளை விதைத்தவர்கள் என்பதாகும் அது.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த முதல் ஆண்டிலேயே, இலங்கை இந்திய பிரஜாவுரிமைச் சட்டம், இந்திய - பாகிஸ்தானிய குடியிருப்பாளர் பிரஜாவுரிமைச் சட்டம் மற்றும் இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்களை நிறைவேற்றியவர்களும் ஐ.தே.கட்சியினர்தான்.

முன்பு விளக்கப்பட்டதுபோல், சிங்களவரின் தலைமைத்துவத்தை நிலை நிறுத்துவதற்கான முதல் சட்டங்களாக அவை அமைந்தன. அதன் பிறகுவந்த அரசுகள் யாவும் தமிழர்களைக் கொடுமைப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கின. அதன் விளைவால் நாடு பெரும் குழப்பத்தில் வீழ்ந்து இன்னமும் மீளமுடியாமல் தவிக்கின்றது.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஐ.தே.கவிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்திருந்தபோதிலும், ஆரம்பகால ஐ.தே.கவின் அரசியல் சித்தாந்தம் எல்லா அரசாங்கங்களிலும் அப்படியேதான் இருந்து அவர்களுக்கு உத்வேகம் அளித்துவந்தது. எனவே சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் அந்த மூல நோக்கத்தின் அடிப்படையிலிருந்து உருவானதே. ஆக ஒரு ஐ.தே.க. பிரதமமந்திரியானவர் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு சட்டங்கள் உருவாக்கவும் அமுல்நடத்தவும் அவசரப்பட்டார் என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதில் இன்னும் ஆச்சரியப்படவேண்டியது என்னவென்றால் இதன் முக்கியத்துவத்தை தமிழரசுக்கட்சியினர் உணராதிருந்ததுதான்.

இந்த மூன்று சட்டங்களினதும் பிரதான நோக்கம் - முன்பு செல்வநாயகம் உய்த்துணர்ந்து கூறியிருந்தது போல, இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் அழித்தொழிப்பதுதான். அப்பொழுது செல்வநாயகம் விழிப்பாக இருந்ததோடு மட்டுமல்லாமல் உள்நோக்கம் கொண்டவர்களின் ஆலோசனைகளினின்றும் விடுபட்டு நின்றார். இந்தச் சட்டங்களின் ஒட்டுமொத்த முயற்சி என்னவென்றால் தமிழ் மக்களின் குடியுரிமையை முற்று முழுதாகப் பறித்து விடுவது அல்லது சட்டத்தின் முன் அவர்களை சந்தேகத்துக்குரியவர்களாக ஆக்கிவிடுவது.

இச் சட்டங்களால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மலையகத் தமிழ்மக்கள் ஆவர். ஏனென்றால் அவர்களின் அடையாளமும் குடியுரிமையும் பிரிட்டிஷார் இலங்கையில் தேயிலை, இறப்பர் தோட்டங்களை ஆரம்பித்த காலத்திலிருந்துதான் கணக்கில் எடுக்கப்பட்டது. இந்தச் சட்டங்கள் அமுலான கையோடு இந்த மக்கள் தங்கள் குடியுரிமைகளையும் அதனுடன் சேர்ந்த சகல உரிமைகளையும் இழந்தவர்களானார்கள். இரண்டாவது சட்டத்தின்படி அவர்கள் மனுசெய்தால் குடியுரிமை வழங்கப் படுவதான ஒருசலுகை வழங்கப்பட்டிருந்தது. இச்சட்டத்தை முதலில் எதிர்த்த அவர்கள் பின்னர் மனுசெய்தார்கள். பல்லாயிரக்கணக்கானோர் மனு செய்திருந்தபோதிலும் பல்வேறு நிர்வாக மற்றும் நடைமுறை இடர்பாடுகளின் பின் ஒரு சிலருக்கே குடியுரிமை வழங்கப்பட்டது.

## சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம்

இவர்களில் குடியுரிமை வழங்கப்படாதவர்கள் இந்த நாட்டிலேயே வாழ்ந்த போதிலும் நாடற்றவர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அவர்களின் உழைப்பு சுரண்டப்பட்டது. தாங்களே உருவாக்கிக் கொண்ட இந்தப் பிரச்சினையை 'இந்தியத் தமிழர் பிரச்சினை' என்று இலங்கை அரசு அழைக்கலாயிற்று. பிரச்சினையை தாங்களே உருவாக்கிவிட்டு, பதவிக்கு வந்த ஒவ்வொரு இலங்கை அரசுகளும் அதனைத் தீர்த்து வைக்கும் படி இந்தியாவிடம் கையேந்தி நின்றன. இந்த மக்களை இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு இவர்கள் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். ஆனால் இந்திய சட்டங்களும் அரசமைப்புச் சட்டமும் அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கவில்லை. பண்டிட் ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தவரை இலங்கையின் கோரிக்கைக்கு அவர் விட்டுக்கொடுக்கவே இல்லை. அவர்கள் இலங்கைப் பிரஜைகள். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது இலங்கை அரசின் பொறுப்பு என்பதுதான் அவரது நிலைப்பாடாக இருந்தது. ஜவஹர்லால் நேரு 1964ஆம் ஆண்டு மே மாதம் காலமானார். லால் பகதூர் சாஸ்திரி இந்தியப் பிரதமரானார். இலங்கைப் பிரதமராகவிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க காலங்கடத்தாமல் புதிய பிரதமருடன் இந்த விடயத்தை எடுத்துக் கொண்டார்.

1964 ஜூலை மாதம் இரு பிரதமர்களும் புதுடில்லியில் சந்தித்து இந்த மக்கள் தொடர்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற ஒன்றைக் கையெழுத்திட்டனர். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் என்றும் இது அழைக்கப்படுவதுண்டு.

இரு பிரதமர்களும் நடத்தியபேச்சுக்களின்போது இலங்கையில் அவ்வாறு இருந்த நாடற்ற தமிழர்களின் எண்ணிக்கையை உத்தேசமாக 10இலட்சம்பேர் என மதிப்பிட்டு அவர்களில் 5,25,000 பேரையும் அவர்களின் இயற்கையான அதிகரிப்பையும் இந்தியா ஏற்றுக்கொள்வதென்றும், அதேசமயம் 3,25,000 பேரை அவர்களின் இயற்கையான அதிகரிப்போடு இலங்கை தனது குடிமக்களாக ஏற்றுக்கொள்வதென்றும் ஒப்புக்கொண்டார்கள். எஞ்சிய ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேரின் தலைவிதியை பின்னொரு சமயம் தீர்மானிப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டது. இந்த செயற்பாட்டை நிறைவு செய்வதற்கென 15வருட காலவரையறையும் தீர்மானிக்கப்பட்டது. சில வருடங்களின் பின்னர் எஞ்சிய தொகையினரையும் இரண்டாகப் பிரித்து இருநாடுகளும் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

### முன் உதாரணமற்ற ஒப்பந்தம்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட இவ்வாறான சர்வதேச ஒப்பந்தமானது முன் உதாரணமற்ற ஒன்று. இவ்வாறு ஒரு நாட்டிலிருந்து இன்னொருநாட்டுக்கு மக்களை பலவந்தமாக நகர்த்துவதென்பது, ஒருவேளை பிராந்தியங்கள் பிரிக்கப்படும் தறுவாயிலன்றி உலகத்தில் வேறு எங்கும் எப்போதும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இலங்கையில் நிரந்தரமாக வாழ்ந்துவந்த ஒருமக்கள் தொகையை - அவர்களுக்கு மனித உரிமைகளோ உணர்வுகளோ அற்ற ஆடுமாடுகள் போல இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளும் தங்களுக்கிடையில் பங்குபோட்டுக் கொண்டன. அவர்களின் கருத்தைக் கூட அறிவதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை. இந்த மக்களில் பெரும்பாலானவர்கள் கடலைக் கூடப் பார்த்தறியாதவர்கள். இந்தியா எங்கிருக்கிறது என்று கூட அவர்களுக்குத் தெரியாதிருந்தது.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம் பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)



தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக 'சுடர்ஒளி' வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

மத்திய மலைப் பிரதேசத்திலிருந்து தேயிலை இறப்பர் தோட்டங்களிலேயே பிறந்து அங்கேயே வாழ்ந்து, உழைத்து மடிபவர்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இம் மக்களை வேரோடு களைந்துவிட முடிவெடுக்கப்பட்டுவிட்டது. உலகத்தின் முதல் பெண் பிரதமமந்திரியான சிறிமாவோ பண்டாரநாயக்கா இனிமையாகப் பேசி மென்மைப் போக்கான இந்தியாவின் புதிய பிரதமரை இந்த ஒப்பந்தத்துக்குள் சிக்கவைத்து விட்டார். அல்லது வெளிநாடுகளில் வாழ்ந்த இந்திய இனத்தவர்களின் உண்மையான நிலைமையைப்பற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு இந்தியப் பிரதமருக்கு ஏற்படாமல் போய்விட்டது.

(தொடரும்)

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்



எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போது, தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார் கருணாநிதி. ஒரு முறை சட்டசபையில் துரைமுருகன்(தி.மு.க.) நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

சலிப்படைந்த எம்.ஜி.ஆர்., ''ஆண்டவன் வந்தால் கூட உங்கள் பேச்சை நிறுத்த முடியாது போலிருக்கிறதே'' என்றார். உடனே கருணாநிதி எழுந்து, "ஏற்கனவே முதல்வராக நாட்டை ஆண்டவன் என்ற முறையில் சொல்லுகிறேன். தம்பி துரைமுருகா உட்கார்'' என்றார்.

துரைமுருகன் பேச்சை முடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

* * * *

'சுழி' என்ற அழகு தமிழ்ச் சொல் இருக்க, சைபர் (அரபு), 'சீரோ'(ஆங்கிலம்), பூஜ்ஜியம் (வடமொழி) என்று ஏன் சொல்ல வேண்டும்? எழுத வேண்டும்? 'சுழி' என்று சொல்லுவோம்!சுவைத் தமிழை வெல்லுவோம்!

இப்படி ஒரு விளம்பரத்தைத் தமிழில் அச்சடித்து வீட்டுக் கதவுகளிலும், உணவகங்களிலும், ரயில் வண்டிகளிலும் மும்பையில் ஒட்டி உள்ளார்கள், தமிழ் காப்போம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

* * * *

இரண்டு கால்களும் இல்லாத நியூசிலாந்தைச் சேர்ந்த ஒருவர் தனக்குப் பொருத்தப்பட்டுள்ள செயற்கைக் கால்களினால் உலகில் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.



இவருக்கு வயது 47. திருமணமாகி குழந்தைகளும் இருக்கிறார்கள்.

இமய மலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏற வேண்டும் என்பது இவரது தீராத ஆசை. அதற்கு முதல் முயற்சியாக இமயத்தில் உள்ள 'சோஓயு' என்ற சிகரத்தில் (26,906 அடி உயரம்) 2004 இல் ஏறினார்.

எப்படியும் உச்சியில் கொடியேற்றுவது என்ற உறுதியுடன் இருந்தவர் சென்ற மாதம் எவரெஸ்டில் ஏறத் தொடங்கினார். (எவரெஸ்டின் உயரம் 29,029 அடி).

பனியுடன் போராடிக் கொண்டே 39 நாள் மலைமீது ஏறி எவரெஸ்ட் உச்சியை அடைந்து பெரும் புகழையும் ஈட்டிக் கொண்டார் இவர்.

எவரெஸ்ட் உச்சிக்குப் போனதும் நியூசிலாந்தில் இருக்கும் மனைவிக்கு போன் செய்து தனது வெற்றியை அவரோடு மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டார். மனைவி மிகவும் சந்தோஷமடைந்தார். ''அவரது ஆசை நிறைவேறிவிட்டது! இனி அமைதியாக இருப்பார் என்று நினைக் கிறேன்.'' என்று அவர் சொன்னார்.

* * * *

எடுப்பான தோற்றம் இல்லாத பெண்கள் கூட பியூட்டி பார்லருக்குப் போய்வந்தால் எல்லா இளைஞர்களையும் திரும்பிப் பார்க்க வைப்பார்கள். பியூட்டி பார்லர்(Beauty Parllour) பெண்களுக்கு மட்டும் சொந்தமான விஷயமா என்ன? இல்லை.. இல்லை.. என்கிறார் தமிழ் நாட்டில் நாய்களுக்கான பியூட்டி பார்லர் ஒன்றை நடத்தி வரும் மிருக வைத்தியர் டாக்டர் சரவணன்.



நாய்களை அழகுபடுத்துவதை எனது தொழிலின் ஓர் அங்கமாக செய்கிறேன் என்கிறார் அவர். இந்தியாவிலேயே முதன் முறையாக நாய்களுக்கான அழகு சிகிச்சைகளைச் செய்பவர் இவர்தான். பிறந்த நாள் கொண்டாடும் நாய்களுக்கு இங்கு விசேட கவனிப்பு உண்டாம்.

* * * *

ஹொங்கொங்கில் நடைபெற்ற ஆடை அலங்காரப் போட்டி ஒன்றில் அழகி ஒருத்தி போதை தரும் ஆடை அணிந்து வந்து ரசிகர்களை கிறங்கடித்தார்.



படத்தைப் பார்த்து விட்டு உடையில் அப்படி ஒன்றும் கவர்ச்சி தெரியவில்லையே என்கிறீர்களா?

இந்த உடையில் ஆங்காங்கே இருப்பது வைன் நிரம்பிய மதுக்கிண்ணங்கள்.

இப்போது சொல்லுங்கள். இந்த அழகி போதை அழகி தானே?

* * * *

விகடகவி ஏன் அழுதார்?

எகிப்து நாட்டில் ஜாகீர் என்பவர் அரசவை விகடகவியாக விளங்கி வந்தார்.

ஒரு சமயம் அயல்நாட்டைச் சேர்ந்த ஒருவர் புதிதாக கண்ணாடி ஒன்றைக் கொண்டு வந்து மன்னருக்குப் பரிசளித்தார்.

அதுவரையிலும் முகம் பார்க்கும் கண்ணாடியைக் கண்டறியாத மன்னர் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து விட்டு ''எனக்கு இவ்வளவு வயதாகி விட்டதா?'' என்று அழத் தொடங்கினார்.

இதைப் பார்த்த விகடகவி ஜாகீரும் அழுதார். கூடவே அரசவையில் உள்ள மற்றவர்களும் அழுதனர். எல்லோரும் அழுவதைக் கண்ட மன்னர் எரிச்சலடைந் தார். ''எல்லோரும் அழுகையை நிறுத்துங்கள்'' என்றார் கோபமாக.

மன்னரின் கோபத்தைக் கண்டு மக்கள் பயந்து போய் அழுவதை நிறுத்தினார்கள். ஆனால் விகடகவியின் அழுகை மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது.

''இன்னும் எதற்காக நீர் அழுகிறீர்?'' என மன்னர் வினவினார்.

அதற்கு ஜாகீர், ''மன்னா, தாங்கள் தங்கள் முகத்தை ஒரு முறை கண்ணாடியில் பார்த்ததற்கே இவ்வளவு நேரம் அழுதீர்க ளென்றால் தங்கள் முகத்தை தினமும் பார்த்துக் கொண்டிருக்கும் நாங்கள், எவ்வ ளவு காலம் அழ வேண்டும் தெரியுமா?'' என பதிலளித்தார்.

அதைக் கேட்டு அவையில் இருந்த எல்லோருமே பலமாய் சிரித்து விட்டனர்.

* * * *

நம்மிடத்தில் இல்லாதது ஒரே ஒரு 'மை' தான்! நம்மிடத்தில் உண்மை இருக்கின்றது. வாய்மை இருக்கின்றது. இனிமை இருக்கின்றது. தூய்மை இருக்கின்றது. எல்லாமே இருக்கின்றன. ஆனால் ஒற்றுமை என்ற 'மை' தான் எங்களிடையே இல்லை.

* * * *

*பெற்றோர்...*
*காவல் நாய்...*
*பூட்டிய கதவு...*
*இவை*
*அனைத்தையும் தாண்டி...*
*எப்படி*
*கொள்ளையடித்து*
*சென்றாய்*
*என் இதயத்தை...?*



மணமக்களை வாழ்த்துறதுக்கு பலசரக்கு கடைக்காரரை கூப்பிட்டது பிழையாய் போச்சு என்று சொல்லுறியே ஏன்?

''சித்நெறும்பும், சீனிப்பாச்சலும் போல சேர்ந்து வாழுங்க என்று வாழ்த்திட்டு போறார்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 221

சொற்சிலம்பம் 221 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூலை 30 ஆம் திகதி ஆகும். விடைகள் ஆகஸ்ட் 06 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகஸ்ட் 13ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 219க்கான விடைகள் அருகே தரப் பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும்.பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 221

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | | | | ■ |
| 7 | 8 | | | ■ | 9 | | |
| 10 | | | ■ | 11 | | | ■ |
| ■ | | ■ | 12 | | | ■ | 13 |
| 14 | | 15 | | | ■ | 16 | |
| 17 | | | ■ | 18 | 19 | | |
| 20 | | ■ | 21 | | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 219

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தீ | 2 வி | ர | 3 வா | 4 இ | ■ | 5 ஆ | 6 வி |
| 7 பா | டு | ■ | 8 க | ட | த் | த | ல் |
| 9 வ | தி | 10 வி | ட | ம் | ■ | 11 வ | ளை |
| ளி | ■ | 12 நா | ம் | ■ | 13 பி | ன் | ■ |
| ■ | 14 ச | ய | ■ | 15 ச | ரி | ■ | 16 அ |
| 17 ம | ர | க | த | ம் | ■ | 18 ம | ற |
| 19 ந | க | ர் | ■ | 20 பா | 21 நு | க | ம் |
| 22 கு | ம் | ■ | 23 அ | தி | க | ம் | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.221

**இடமிருந்து வலம்**

1. அந்தியேட்டி முதலிய சாவை ஒட்டிய சடங்குகள்.
4. ஒரு நட்சத்திரம்/வீரனைப் போற்றும் பிரபந்தமும் கூட
6. உள்ளிருந்து கேள்வி எழுப்புவது இது.
7. சூரிய சக்தியை உலகில் பதிப்பவை
9. சேறு
10. தலை
11. இணை/ஒன்று சேர்/கல(வி)
12. புசித்த இடம்
14. எழுந்து/சிறிய அளவிடை
15. ஒன்றின் போக்கு / தன்மை - இயல்பு
17. வாய்ப்பான - உதவுகின்ற - ஏற்பாடு.
18. கூறு / சொல்லுதல்
20. இது இரண்டு. உலகின். சகலதும் இந்த இரண்டு வகைக்குள்ளும் அடங்கும் என்கிறது தமிழ்.
21. நல்ல வகையைச் சேர்ந்தவை

**மேலிருந்து கீழ்**

1. காகிதம்
2. முக்கனிகளுள் ஒன்றைத் தருவது.
3. நான்
4. பலகாரம்
5. ரசிப்பவர் இவர்.
8. பெண்ணுக்காக மாப்பிள்ளைத் தரப்புக்கு கொடுப்பது.
11. அழுது, அரற்றல்.
12. பெருக்கல் குறி
13. தாழ்ந்து, அடங்கிப் போகும் பண்பு
14. அந்தரங்கத ஏற்படுத்துவது இது.
15. மறைவில் தீட்டும் திட்டம்.
16. கண்ணுக்குத் தோற்றும் புதன்.
19. (ஒன்று) சேர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 219

1. சி. ஜனகன்,
   இல.43, 'பி' நீர்பாசன விடுதி,
   பூங்கா வீதி, வவுனியா.
2. கு.நிஷாந்தினி,
   பொது வைத்தியசாலை, வவுனியா.
3. யசோதா.செந்தில்ராசன்
   இல,14, கொல்லவிளாங்குளம்,
   வவுனிக்குளம்.

**பாராட்டுப் பெறுவோர்**

1. செல்வராஜா கோகியராஜன்,
   உவர் மலை, திருகோணமலை.
2. நா.சுந்தரலிங்கம்,
   8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு,
   முல்லைத்தீவு.
3. ச.குமாரசாமி,
   இல 300, தேக்கந் தோட்டம்,
   வவுனியா.
4. கே.எம்.எம்.கலீல்,
   இல,21, குளியாப்பிட்டிய வீதி,
   ஹொறம்பாவ.
5. ஆர்.எம்.மஸ்ஊத்,
   மட்/பத்திரிய்யா வித்தியாலயம்,
   காத்தான்குடி.
6. க.சுமதா,
   தண்ணீரூற்று, முள்ளியவளை,
   முல்லைத்தீவு.
7. சி.உமாதிசிவம்,
   அந்தனிஸ் மாவத்தை,
   கெரவப்பிட்டிய, ஹெந்தலை
8. கோ.கலைவாணி,
   டொக்யார்ட் வீதி, திருகோணமலை.
9. பா.நிரூபட்சசதீஸ்,
   மீசாலை கிழக்கு, மீசாலை.
10. செ.சந்தனராசா, சுருவேலடி வீதி,
    கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.



# உடைந்தது உலகக் கிண்ணம்
# அதிர்ச்சியில் இத்தாலி ரசிகர்கள்



உலகமே போற்றப்படும் உதைபந்துக் கிண்ணத்தை இத்தாலி அணி கைப்பற்றியதனால் அணி வீரர்கள் மற்றும் நாட்டு ரசிகர்கள் மகிழ்ச்சியில் இருக்கும் இந்நிலையில் அணிக்குப் பல்வேறு நெருக்கடிகள் ஏற் பட்டுள்ளன.

முதலில் ஜிடேன் - மாட்டராஸி மோதல் முடிவதற்குள், சூதாட்டப் பிரச்சினை பூதாகரமாக வெடித்தது. இந்நிலையில், கிண்ணத்தின் கீழ் ஒரு துண்டும் உடைந்துள்ளது. மேற்குறிப்பிட்ட நெருக்கடிகளை விடவும் இதுவே பெரும் பிரச்சினை என தெரிவிக்கப் படுகிறது.

இப்பிரச்சினைக்கு மூல காரணம் அணித்தலைவர் கானவரோவே எனத் தெரியவருகிறது. இதனால், அவர் மிகுந்த அதிர்ச்சியில் இருக்கிறார் எனவும் தெரியவருகிறது.

ஜேர்மனியில் இடம்பெற்ற 18ஆவது உலகக் கிண்ணப் போட்டியில் 'பெனால்டி சூட்' டில் வைத்து 5:3 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியைத் தோற்கடித்தது.

கிண்ணத்தை வென்றி மகிழ்ச்சியில் இத்தாலி நாடு திரும்பியபோதும், போட்டியின்போது காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள அணிவீரர் கியான்லுகாவை சந்தித்தபின்னரே மகிழ்ச்சியைக் கொண்டாட வீரர்கள் எண்ணினர். இதன்படி, வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில், அதாவது பஸ்ஸில் வைத்து உடைந்திருக்கலாம் என இத்தாலி உதைபந்துச்சபை மற்றும் அந்நாட்டு உதைபந்து விற்பன்னர்கள் தெரிவித்திருந்தனர்.

வதந்தியாகக் காணப்பட்ட இக்கருத்து கடைசியில் உண்மை நிலையாக மாறியது. பஸ்ஸில் நடந்த சம்பவத்தை இத்தாலியின் முன்னணிப் பத்திரிகையான 'இல்மெசாக்ரோ' முதற்பக்கத்தில் படத்துடன் கூடிய செய்தியாக வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

உடைந்த கிண்ணத்தில் பச்சைநிறத் துண்டுப்பகுதியுடன் கானவரோவைப் பார்த்த அந்நாட்டு ரசிகர்கள் கொதித்துப் போயுள்ளனர். விலைமதிக்க இயலாத கிண்ணத்தை அலட்சியமாக வைத்திருந்த அணித்தலைவர் மீது ரசிகர்கள் மிகவும் ஆத்திரத்துடன் உள்ளனர் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக இத்தாலி அணித்தலைர் கானவரோ கூறியதாவது:-

கிண்ணத்தைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் என்ன நடந்ததென்று எனக்கே தெரியாது. கிண்ணத்தைக் கைப்பற்றிய அன்றே நாங்கள் நாடு திரும்பினோம். அன்றைய தினமே கியான்லுகாவை பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றோம்.



இறுதிப் போட்டியில் வென்ற முதல் நாளாததால் கிண்ணத்துடனேயே தூங்கினேன். ஆனால், எப்படி கிண்ணம் உடைந்தது என்று எனக்குத் தெரியாது. என்கையால்தான் உடைந்திருக்கலாம் - என்று தெரிவித்திருக்கிறார் கானவரோ.

இது தொடர்பாக பிபா (சர்வதேச உதைபந்து சம்மேளனம்) தெரிவித்திருப்பதாவது:-

தற்போது சேதமடைந்திருக்கும் கிண்ணம் உண்மையான கிண்ணமல்ல. இத்தாலிக்கு வழங்கப்பட்டது மாதிரிக் கிண்ணம்தான். உண்மையான கிண்ணத்தை வீரர்கள் ஒரு சில நிமிடங்கள்தான் கைகளில் வைத்திருந்தனர் என பிபா தெரிவித்துள்ளது.

14 அங்குலம் உயரம் கொண்ட உலகக் கிண்ணம் 18 கரட் தங்கதினாலானது. இதன் அடிப்பகுதி 'மாலஷைட்' எனும் உலோகத்தினால் ஆக்கப்பட்டுள்ளது. இந்தப் பச்சைநிற 'மாலஷைட்' பகுதிதான் உடைந்துபோயுள்ளது.

---

உலகக் கிண்ணத் தொடரில் சம்பியன் பட்டம் வெல்லும் என எதிர்பார்க்கப்பட்ட பிரேஸில் அணி, இந்த முறை காலிறுதிப் போட்டியிலேயே தொடரை விட்டு வெளியேறி ஏமாற்றம் அளித்தது.

அளிக்கவில்லை. ஜேர்மனி உலகக்கிண்ணத் தொடரில் ரொனால்டினோவின் செயல்பாடுகள் பிரேஸில் ரசிகர்களுக்கு மிகுந்த ஏமாற்றம் அளித்துள்ளது. பத்திரிகைகளும், தொலைகாட்சிகளும்



# ரொனால்டினோ சாதிக்காதது ஏன்?

அதிகம் எதிர்பார்க்கப்பட்ட நட்சத்திர வீரர் ரொனால்டினோ, இத்தொடரில் ஒரு கோல் கூட அடிக்கவில்லை. இதனால் கவலையுற்ற ரொனால்டினோ இணையத்தளம் மூலம் ரசிகர்களுக்கு ஆறுதல் தெரிவித்து வருகிறார்.

ரொனால்டினோவைப் பொறுத் தவரை பந்தை பாஸ் செய்வதில் கில்லாடி. அவரிடத்தில் பந்து வந்து விட்டால் முன்களவீரருக்கு பந்தை பாஸ் செய்து விடுவார். ரொனால்டினோ கோல் எதுவும் அடிக்காததற்கு அவரது இடமும் ஒரு காரணம். பிரேஸிலைப் பொறுத்தவரை நடுக்கள வீரராகத்தான் ரொனால்டினோ செயல்பட்டார். அவரது முக்கியமான வேலை பந்தை கைப்பற்றி முன்கள வீரர்களுக்கு பாஸ் செய்வதுதான். அதை ரொனால்டினோ அருமையாகவே செய்தார். இவர் கொடுத்த திறமையான பாஸ்தான் பிரேஸிலுக்கு இத்தொடரில் பல வெற்றிகளைப் பெற்றுத்தந்தது. அப்படியானால் நடுக்கள வீரர்கள் எவரும் கோல் அடிக்கக்கூடாது என்பதெல்லாம் இல்லை. அவர்களுக்கு கோல் அடிக்க வாய்ப்புகள் மிகவும் குறைவு. ரொனால்டினோவும் பல முறை கோல் அடிக்க முயன்றார். ஆனால் அவரது முயற்சிகள் பலன்

ரொனால்டினோவை பலவாறு விமர்சித்து வருகின்றன. அவரின் உடுவச்சிலைகளும் எரிக்கப்பட்டன.

உலகக்கிண்ணத் தொடரில் பிரேஸில் தோல்வி அடைந்ததால், ரசிகர்களுக்கு இணையதளம் மூலமாக ஆறுதல் தெரிவித்துள்ளார் ரொனால்டினோ. அதில் ரொனால்டினோ கூறியதாவது:-

எனது ரசிகர்களுக்கு முதலாவது வணக்கங்கள். ரசிகர்கள் அளிக்கும் உற்சாகம் தான் ஒரு வீரனுக்கு மகுடம் போன்றது. ஜேர்மனி உலகக்கிண்ணத் தொடரில் பிரேஸில் தோல்வி அடைந்தது பெருத்த ஏமாற்றம் அளித்துள்ளது. எனது செயல்பாடுகள் சிறப்பாக அமையவில்லை. அதற்காக நான் வருந்துகிறேன். இந்த முறை உலகக்கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எனது கனவு கலைந்து விட்டது. அடுத்த உலகக்கிண்ணத்தைக் தொடரில், கட்டாயம் பிரேஸில் சம்பியன் பட்டம் வெல்லும்.

-இவ்வாறு ரொனால்டினோ கூறியுள்ளார்.

**வசந்தி**

---

கிரிக்கெட் மேதை என வர்ணிக்கப்படும் டொன் பிரட்மனைப் பற்றி இம்முறை அலசிப் பார்ப்போம். அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்களில் இவர் சிறப்பான இடத்தைப் பெற்றவர். அக்காலத்தில் சிறிய மைதானங்களாக இருந்த போதும் இவரின் சாதனை மறக்க முடியாதொன்றாகும்.

தென் ஆபிரிக்காவின் டர்பனில் 1944 பெப்ரவரி 27இல் பிறந்தார். கிரிக்கெட் இவரது ரத்தத்திலேயே ஊறியிருந்தது. இவரது சகோதரரைப் போன்று இவரும் கிரிக்கெட்டில் தடம் பதித்தார். பதினொரு வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் முதன் முதலாக சதம் அடித்து தனது திறமையை வெளிப்படுத்தினார். இதைத்தொடர்ந்து ஒரே இன்னிங்ஸில் 10 விக்கெட்டையும் வீழ்த்தினார். தனது 19 ஆவது வயதில் தென் ஆபிரிக்காவிற்காக அறிமுகமானார். முதல் இரண்டு போட்டிகளில் பெரிதாக சாதிக்கவில்லை. மூன்றாம் டெஸ்டில் சதமடித்து உலகிற்கு தனது திறமையை நிரூபித்தார். அடுத்த போட்டியிலும் சதம் இவரது போராட்ட குணத்தை வெளிப்படுத்தியது. இவர் களமிறங்கும் போது தென் ஆபிரிக்க அணி 5 விக்கெட் இழப்புக்கு 80 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தளராமல் துடுப்பெடுத்தாடி 125 ஓட்டங்கள் குவித்தார்.இதைத்தொடர்ந்து அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரிலும் இவரது ஓட்ட வேட்டை தொடர்ந்தது. அத் தொடரில் அவர் 76.71 சராசரியுடன் 537 ஓட்டங்கள் எடுத்தார். டர்பனில் நடந்த இரண்டாவது டெஸ்டில் 43 பவுண்டரிகளுடன் 274 ஓட்டங்கள் எடுத்தார். இதுவே பல ஆண்டுகள் தென் ஆபிரிக்க வீரரின் அதிக பட்ச ஓட்டமாக இருந்தது. இச்சாதனையை 1999 இல் கலீனன் முறியடித்தார்.

இப்படி சர்வதேச அரங்கில் மின்னிக்கொண்டிருந்தவருக்கு பேரிடியாக 1970இல் சர்வதேச கிரிக்கெட் சபையில் (ICC) தென் ஆபிரிக்காவுக்கு தடை விதித்தது. இதனால் அவரது திறமை ஒரு சிறிய வட்டத்திற்குள்ளே அடங்கியது. இதையடுத்த 15 வருடங்கள் உள்ளூர்

# கிரிக்கெட் மாமேதை பிரட்மேன்



சதமடித்து தென் ஆபிரிக்க அணிக்கு புத்துணர்வு தந்தார். இவை இரண்டை காட்டிலும் இவருக்கு புகழ் தேடி தந்தது, இவர் விளையாடிய ஐந்தாவது போட்டிதான். இதிலும் சதமடித்து 21 வயதிற்குள் மூன்று சதங்கள் நிறைவு செய்துள்ள வீரர்கள் பட்டியலில் இணைந்தார்.

டிரென்ட்பிரிட்ஜில் இவர் அடித்த

குரே கிண்ணப் போட்டிகளில் விளையாடினார். தாய்நாட்டுக்கு மட்டுமே விளையாட வேண்டும் என்ற குறிக்கோளுடன் 'கவுன்டி'' வாய்ப்புகளையும் நிராகரித்தார். இவர் தற்போதைய தென் ஆபிரிக்க வீரர் ஷோன் பொலக்கின் நெருங்கிய உறவினர் என்பது சிறப்பம்சம்.

# அறிவியல்

## பூமிக்குத் திரும்புகிறது டிஸ்கவரி விண்வெளி ஓடம்

கடந்த நான்காம் திகதி செவ்வாய்க் கிழமை அமெரிக்க விண் வெளியிலுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவிய டிஸ்கவரி விண்வெளி ஓடம் எந்த விதமான சேதமோ அல்லது கோளாறோ இன்றிப் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்ப விருக்கிறது. (இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் போது டிஸ்கவரி ஓடம் பூமியை வந்தடைந்திருக்கும்.)

விண்வெளியிலுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ள வீரர்களை அனுப்பி வைக்கவும் அங்கிருக்கும் வீரர்களை பூமிக்குத் திரும்ப அழைத்து வருவதற்கும் 'டிஸ்கவரி' விண்வெளி ஓடத்தை அமெரிக்காவின் நாஸா நிலையம் அனுப்பி வைத்தது.

டிஸ்கவரி விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்ததும் விண்வெளி ஓடம் செல்லும் பாதையில் சிறிய அளவிலான எரி நட்சத்திரங்கள் மோதி அதில் சேதம் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய வயிற்றுப் பகுதி உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் சர்வதேச விண்வெளி நிலையம் படம் பிடித்து நாஸாவுக்கு அனுப்பியது.

அந்தப் படங்களைக் கடந்த சில நாட்களாக நாஸா விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். பின்னர் விண்வெளி ஓடத்தில் சேதம் எதுவும் இல்லையென்று உறுதி செய்தனர். இது குறித்த தகவலை டிஸ்கவரி விண்வெளி ஓடத்தின் தளபதி ஸ்டீவன் விண்ட்சேவுக்கு டெக்ஸாஸ் மாகாணம் ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். அப்போது, அவர்கள் டிஸ்கவரி விண்வெளி ஓடம் பூமிக்குள் நுழைவதற்கு 100 சதவிகிதம் தகுதியுடன் உள்ளது என்று அறிவித்தனர். இந்தத் தகவலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த விண்ட்சே அது மிகவும் மகிழ்ச்சியான செய்தி என்று பதிலளித்தார்.


டிஸ்கவரியில் சேதம் எதுவும் இல்லாததால் அதிலுள்ள வீரர்கள் விண்வெளி நடை பயணம் மேற்கொண்டு விண்வெளி ஓடத்தை பழுது பார்க்கும் அவசியம் ஏற்படப் போவதில்லை.

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தில் இருந்து பூமிக்கு திரும்பும் விண்வெளி வீரர்கள் நிலையத்தில் தங்கி ஆய்வு செய்யும் வீரர்களிடம் பிரியாவிடை பெற்று டிஸ்கவரி ஓடத்துக்குள் சனிக்கிழமை வந்தமர்ந்தனர்.

இது இரண்டு நாட்கள் பயணம் செய்து அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள கலைவரால் ஏவு தளத்தை வந்தடையும் எனத் தெரிகிறது.

விடைபெறுவதற்கு முன்னர் 9 வீரர்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

பின்னர் ஆய்வு நிலையத்திலிருந்து டிஸ்கவரி ஓடத்தை விடுவித்துக் கொள்வதற்கு வசதியாக புவிக்குத் திரும்பும் குழுவில் உள்ள 2 வீராங்கனைகள் உள்ளிட்ட ஆறு பேரும் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.



நிலையத்திலிருந்து விடுக்கப்பட்ட பின்னர் விண்கற்களால் ஏதேனும் சேதம் ஏற்பட்டுள்ளதா என்பதை கண்டறிய அவர்கள் விண்வெளி ஓடத்தின் வெப்பந் தாங்கும் ஓடுகளைப் பரிசோதனை செய்வார்கள். முதன் முதலாக இந்த விண்வெளிப் பயணத்தில் தான் மேற்குறிப்பிட்ட பரிசோதனை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

டிஸ்கவரி ஓடத்தின் இடதுபக்க இறக்கை கடந்த 15 ஆம் திகதி சோதிக்கப்பட்டு விட்ட நிலையில் வலதுபக்க இறக்கையின் பாதுகாப்பு மற்றும் ஓடத்தின் முக்குப் புற கலசங்கள் ஆய்வு நிலையத்திலிருந்து பிரிந்த பின்னர் சோதிக்கப்படும். இதுவரை செய்த சோதனைகளின் அடிப்படையில் எல்லாம் சரியாக இயங்குவதாக டிஸ்கவரி விமானி மார்க் கெல்லி ரீ.வி. பேட்டிகளில் தெரிவித்துள்ளார்.

---

## விபத்தை ஏற்படுத்தும் வாகனங்களை துரத்திப் பிடிக்கும் நவீன கருவி

போக்குவரத்து என்றாலே விபத்துக்கள் வாடிக்கை என்ற நிலையாகி விட்டது. எந்த வாகனத்தில் பயணம் செய்தாலும் 100 சதவீத பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையே நிகழ்கிறது. விபத்துக்களை குறைக்க என்னதான் தொழில் நுட்பம் மற்றும் சட்டங்களைப் புகுத்தினாலும் மக்களின் அறியாமை, அலட்சியம், போக்குவரத்து விதிமுறைகளை சரிவர கடைபிடிக்காமை போன்றவற்றால் விபத்துக்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்தே வருகிறது.

சில சமயம் விபத்துக்கள் எதிர்பாராமல் நடப்பதுண்டு. இயற்கையின் சீற்றத்தாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆனால் அலட்சியத்தால்தான் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை மறுக்க முடியாது. இப்படி அலட்சியத்தால் செய்யும் தவறுகள் ஏராளமான உயிர்களையும் உடைமைகளையும் பலி வாங்கி விடும். இத்தனை இழப்புக்களையும் ஏற்படுத்திய ஓட்டுநர்கள், அதிகாரிகள் லாவகமாக தப்பி விடுவதும் உண்டு. சில சமயம் ரேடார்கள், விபத்து தடுப்பு சாதனங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டாலும் குற்றவாளிகள் தப்பித்து விடுகின்றார்கள்.

முன்பெல்லாம் வேகத்தடையை தவிர வேறு எந்த விபத்து தடுப்பு நடவடிக்கையையும் பார்க்க முடியாது. இந்த வேகத்தடைகள் சில சமயம் இரவில் வேகமாக வரும் வாகனங்களை விபத்துக்குள்ளாக்கி விடும். விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட ஏற்பட அதிநவீன கருவிகள்மூலம் போக்குவரத்துக் கட்டுபாட்டு அறைக்கு செய்திகளை உடனுக்குடன் அனுப்பி விபத்து பற்றிய விபரங்களை பதிவு செய்ய முடிகிறது.

நகரங்களிலும் மேலை நாடுகளிலும் தற்போது சாலைகளில் கெமராக்கள்மூலம் வேகமாகச் செல்லும் வாகனங்கள் மற்றும் விபத்து ஏற்படுத்தும் வாகனங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். ஆனாலும் பெரிதாக விபத்துக்களும், போக்குவரத்து குற்றங்களும் குறைந்த பாடில்லை.

இதற்கெல்லாம் முடிவுகட்டும் விதமாக அமெரிக்காவில் வேர்ஜினியாவிலுள்ள 'ஸ்டார்சேஸ்'(Star Chase) என்ற நிறுவனம் ஒரு நூதனமான கருவியைக் கண்டுபிடித்துள்ளது. GPS இன் உதவியை கொண்டு



செயல்படும் இந்தக் கருவி பொலிஸ் துறையின் 90 சதவீத வேலையை சுலபமாக்கி விடுகின்றது. விபத்து மட்டுமல்ல, எந்த குற்றம் செய்துவிட்டு தப்பினாலும் இதே முறைதான் பயன்படுத்தப்படும். இதனால் குற்றவாளிகள் தப்பிச் செல்வது என்பது மிகவும் கடினமாகும்.

இந்த Star Chase நிறுவன கருவியை உபயோகித்தால் விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச்செல்லும் வாகனங்களை சுலபமாக மடக்கி விடலாம் அதுமட்டுமல்ல அந்த வாகனம் எங்கெல்லாம் செல்கின்றது என்பதை கண்காணித்து கட்டுப்பாட்டு அறைக்கு செய்திகளை அனுப்பலாம். முன்பெல்லாம் தப்பிச் செல்லும் வாகனத்தைப் பிடிக்க பொலிஸ் அதிகாரிகள் கட்டுப்பாட்டு அறைக்கு அல்லது அடுத்த காவல் நிலையத்துக்கோ போன் மூலம் தகவலைக் கொடுத்து மடக்கி பிடிப் பதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

இதனால் போக்குவரத்துக்கும் பெருமளவு இடைஞ்சல் ஏற்படுகின்றது. சில நேரங்களில் தப்பியவர்கள் மாற்றுப் பாதைகள் வழியாக வேறு இடத்திற்கு சென்று விடலாம். அல்லது வாகனங்களின் முக்கிய தடயங்களை மாற்றி விட்டு பயணம் செய்தால் பொலிஸ் அதிகாரிகளால் எளிதில் கண்டுபிடிக்க முடியாது.

இம்மாதிரியாகத் தப்பிக்கும் வாகனங்களைத் தொடர்ந்து துரத்திச் செல்லும் பொலிஸ் அதிகாரிகள் Star Chase கருவியை உபயோகித்து முன்செல்லும் காரின் பின்புறத்தில் ஒட்டுகின்ற எலக்ட்ரானிக் ஸ்டிக்கரை அம்பு எய்வது போல அல்லது துப்பாக்கிச் சுடுவது போல எய்து ஒட்டி விடுவார்கள். அதாவது பின்னால் துரத்திவரும் பொலிஸ் அதிகாரி இந்தக் கருவியின் பட்டனை அழுத்தினால் போதும், உடனே குபீரென்று ஒரு எலக்ட்ரானிக் ஸ்டிக்கர் பாய்ந்து செல்லும். இது தப்பிச் செல்லும் காரின் பின்புறம் நன்றாக ஒட்டிக் கொள்ளும். திரைப்படங்களில் கதாநாயகன் பின்னால் துரத்தி வரும் பொலிஸ் துப்பாக்கிக் குண்டு தன் காரில் படாமல் லாவகமாக வளைந்து வளைந்து தப்புவது போன்ற காட்சி எல்லாம் இந்தக் கருவியின் முன் நடக்காது என்றே கூறலாம்.

இது சாதாரண வேலையைச் செய்யவில்லை. இது எலக்ட்ரானிக் ஸ்டிக்கர் என்பதால் தப்பிய வாகனம் வளைவில் செல்கிறதா? இருட்டான பாதையில் செல்கிறதா? எங்கு செல்கிறது போன்ற தகவல்கள் கட்டுப் பாட்டு அறையின் கணினிக்கு சென்று கொண்டேயிருக்கும். கம்பி யில்லா (வயர்லஸ்) நவீன தொலைக்கட்டுப்பாட்டு முறையின் மூலம் தகவல்களைப் பெற முடிவதுடன், நேர விரயமும் தடுக்கப்படுகின்றது.

இந்த ஸ்டிக்கர் GPS ராடார் உதவியுடன் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவலை அனுப்பி விடுகிறது. அதுமட்டுமல்ல கார் எங்கெல்லாம் செல்கிறது என்ற தகவல்களை அனுப்பிக் கொண்டே இருக்கிறது. கண்ட்ரோல் அறையில் இருக்கும் அதிகாரியின் கணினிக்கு இந்தத் தகவல் உடனே சென்று விடுகின்றது. இதனால் இந்தக் கார் எங்கு செல்கிறது என்ற விபரங்களை வைத்து அந்த இடத்திற்கு தகவல் கொடுத்து உடனே மடக்கிப் பிடித்து விடுவார்கள். அப்புறம் என்ன காரில் தப்பியவருக்கு தண்டனைதான்.

ஒருமுறை இந்த ஸ்டிக்கர் ஒட்டிவிட்டால் போதும். ஸ்டார்சேஸ் சர்வரில் GPS ராடார் மூலம் ஒவ்வொரு சில விநாடிகளுக்கொரு முறை தகவல் ஒலியுடன் தப்பிச் சென்ற வாகனத்தைப் பற்றிய விபரங்கள் வந்து கொண்டேயிருக்கும். இது மேலும் பொலிஸ் துறையினரின் பணியை எளிதாக்கி விடுகின்றது.

புதுப்புது ஆராய்ச்சிகள் மூலம் ஏதாவது ஒரு துறை பயனடைந்து கொண்டுதானிருக்கின்றது. இம்மாதிரியான நவீன கருவிகள், அறிவியல் முன்னேற்றங்கள், ஆராய்ச்சிகள் எல்லாம் இயந்திரத்தனமாக, வேகமாக இயங்க ஆரம்பித்து விட்டன. இம்மாதிரியான புதுப்புது ஆராய்ச்சி கருவிகள் மூலம் எதிர்காலத்தில் குற்றங்கள், இடர்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

---

## அறிவியல் துணுக்குகள்

**பென்குவின்**

பென்குவின் ஆர்க்டிக், அண்டார்டிக் குளிர் பிரதேசங்களில் வாழும். பென்குவின் பறவைகளுக்கு உடல் முழுவதும் தடித்த தோல்கள் உள்ளன. இதனால் எவ்வளவு குளிர் அடித்தாலும் அவற்றை பென்குவின் பறவைகளால் தாங்கிக் கொள்ள முடிகின்றது. குளிர் நீரிலும் இவை மின்னல் வேகத்தில் நீந்தும். ஒரு மீட்டர் உயரம் வளரும் பென்குவின் அதிக பட்சம் 35 அடி உயரம் இருக்கும். பெண் பென்குவின் ஒரு வருடத்தில் ஒரு முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும். ஆண் பென்குவின் தான் அடை காக்கும்.

**ஆர்க்டிக் ஓநாய்**

வடக்கு கனடாவில் அதிகம் காணப்படும் இவை கூட்டம் கூட்டமாகத் திரியும். தனியாக மனிதனோ அல்லது வேறு ஏதாவது சிறு விலங்கோ தென்பட்டால் அவ்வளவுதான். தாக்க ஆரம்பித்து விடும்.

இவ்வகை ஓநாய்களுக்கு வாசனை உணர் திறன் ரொம்ப அதிகம். மெல்லிய சத்தத்தையும் துல்லியமாகக் கேட்கும்.

**ஆர்டிக் டேர்ன் பறவை**

இப்பறவை வருடத்துக்கு 13 ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் மேற்கொள்கின்றது. கோடைக் காலத்தை கழிப்பதற்காக இவை ஆர்டிக் பிரதேசத்தில் இருந்து அண்டார்டிக்காவுக்கு குஞ்சுகளுடன் பறந்து செல்கின்றன. தனது வாழ்நாளில் 8 லட்சம் கிலோ மீட்டர் தூரம் பறக்கும். இப்பறவை விமானம் போல மென்மையாகப் பறந்து செல்லும்.

**மூஸ் மான்**

இதை எல்க் என்றும் அழைப்பார்கள். மான் குடும்பத்தைச் சேர்ந்த மூஸின் உடலமைப்பு எருமை மாடு போலவே இருக்கும். இவை இரண்டு மீட்டர் உயரம் வளரும். அதிக பட்சம் 800 கிலோ எடை இருக்கும். இவற்றுக்கு நீச்சல் அத்துப்படி. அதனால் ஏரி, குளங்களை எந்தவித சிரமுமின்றி இதனால் நீந்திக் கடக்க முடிகிறது. சில இடங்களில் கலை மான் கூட்டத்துடன் சேர்ந்து திரியும். இவற்றின் தோல் தடிப்பானதால் கடுங்குளிர் காலத்தில் பாதுகாப்பு கவசமாக திகழ்கின்றது.

**போலார் கரடி**

500 கிலோ எடை வளரும் போலார் கரடிகளுக்கும் உடல் முழுவதும் தடித்த தோல் உண்டு. போலார் கரடிகள் வலிமை வாய்ந்தவையும் கூட. சீல்தான் இவற்றின் முக்கிய உணவு. பனிக்கட்டி துவாரங்களுக்குள் இருந்து சீல்கள் வெளியே வரும் வரை அமைதியாகக் காத்திருக்கின்றன. அதன் பிறகு மின்னல் வேகத்தில் சீல்களைத் தாக்கி இரையாக்கிக் கொள்கின்றன. பனிப் பிரதேசத்தின் 'ராஜா'வும் இதுதான்.

**வால்ரஸ்**

யானையைப் போன்று தந்தங்கள் உடையது வால்ரஸ். இவை ஒரு மீட்டர் நீளம் வரை வளர்கின்றன. இந்த தந்தம் தான் வால்ரஸின் ஆயுதம். 1200 கிலோ எடை வரை இவை வளர்கின்றன. வெள்ளை மற்றும் கில்லர் திமிங்கிலங்களின் விருப்... இரை வால்ரஸ்தான்.

இவற்றின் உட... ...த்த தோல் இருப்பதால் எவ்வளவு கு... ...ற்றாலும் இவை களால் தாங்கிக் கொ... ...டியும். பனிப் பிரதேசங்களில் இ... ...ட்சம் வால்ரஸ்கள் இருக்கி...



# குழந்தைகளின் ஊட்டத் தேவை

**பிறந்த ஒரு வருடம் வரையான குழந்தைகளின் ஊட்டத்தேவையை பற்றி இவ்வாரம் ஆராய்வோம்.**

பின்வரும் அட்டவணையைக் கருத்தில் கொள்க

| | 0-6 மாதம் | 6 மாதம் முதல் 1 வயதுவரை |
|---|---|---|
| உடல் எடை | 5.6 கி.கி | 8.6 கி.கி |
| சக்தி தேவை/கி.கி | 108 கி.கலோரி | 9.8 கி.கலோரி |
| புரதம்/கி.கி | 2.05 கிராம் | 1.65 கிராம் |
| கல்சியம் | 500 மி.கிராம் | 500 மி.கிராம் |
| விட்டமின் ஏ | 350 மைக்ரோ.கிராம் | 350 மைக்ரோ.கிராம் |
| பீற்றா கரோட்டின் | 1200 மை.கிராம் | 1200 மை.கிராம் |
| தயமின்/கி.கி | 55 மை.கிராம் | 50 மை.கிராம் |
| Riboflavin/கி.கி | 65 மை.கிராம் | 60 மை.கிராம் |
| Niecin/கி.கி | 710 மை.கிராம் | 650 மை.கிராம் |
| Pyridoxine | 0.1 மி.கிராம் | 0.4 மி.கிராம் |
| விட்டமின் சி | 25 மி.கிராம் | 25 மி.கிராம் |
| Folic acid | 25 மி.கிராம் | 25 மி.கிராம் |
| விட்டமின் $B_{12}$ | 0.2 மை.கிராம் | 0.2 மை.கிராம் |

இந்தக் காலகட்டத்தில் தாய்ப்பால் ஊட்டலே மிகச்சிறந்ததாகும். பிறந்த முதல் 3 நாட்கள் ஒருவகை மஞ்சள் நிறத் திரவம் தாயின் மார்பகத்திலிருந்து சுரக்கும். இது சாதாரண தாய்ப்பாலிலிருந்து வேறுபட்டதாகும். இது அதிகளவு புரதத்தைக் கொண்டது. லக்டோஸ் செறிவு குறைந்தது. அதிகளவு 2 mc (20 மி.கிராம் கலோரி) கொண்டது. அத்துடன் இதில் அதிக நோய் எதிர்ப்புக் காரணிகள் காணப்படும்.

எனவே பொக்களிப்பான், போலியோ, சின்னமுத்து, களிச்சுரம் போன்ற நோய்களை அண்டவிடாது தடுக்கும். எனவே இதனைத் தவறாது குழந்தைக்கு ஊட்டல் வேண்டும். 3 நாட்களின் பின்பு சாதாரண தாய்ப்பால் சுரக்கும். இது குழந்தைகளுக்கு அவசியமான ஒன்றாகும்.

**இது பின்வரும் நோய் எதிர்க்கும் காரணிகளைக் கொண்டுள்ளது.**

1. Lysozyme
இது பக்றீரியா நோய்க்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டது.
2. Macrophages
இது பக்றீரியாக்களை அழிப்பதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியையும் உருவாக்கும்.
3. Lactoferrin
இது Staphylococcus, E-colo வளர்ச்சியைத் தடுக்கும்.
4. Lactobacillus Bifidus Factor
இது பாலை சமிபாடடையச் செய்யும். நுண்ணங்கியின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.
5. Immunoglobunlines
இது வயிற்றில் தங்கி நுண்ணங்கி வளர்ச்சியைத் தடுக்கும்.
6. Fatty acid and Monoglycerides
இதுபக்றீரியா, வைரஸ் ஆகியவற்றை அழிக்கும்.

**மேல் தரப்பட்ட காரணிகளினால் தாய்ப்பால் ஊட்டும் குழந்தைகளை நோய்கள் இலகுவில் அணுகா.**

சில வேளைகளில் தாய் நோயுற்றாலோ அல்லது மறுதடவை கருத்தரித்தாலோ பாலூட்ட முடியாது போகலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் செயற்கை முறையிலான உணவூட்டல் மேற்கொள்ளப்படலாம். பசுப்பால் இதற்காக உபயோகிக்கப்படலாம். ஆனால் மிகவும் ஐதாக்கப்பட்டு உபயோகிக்கப்படல் வேண்டும். சுவைக்காக சிறிதளவு சீனி சேர்க்கலாம்.

முதல் இருவாரங்கள் தினமும் 15 கிராம் சீனியும் பின்னர் 30 கிராம் சீனியும் பாலில் சேர்க்கலாம். முதல் இரு மாதங்கள் தினமும் 120 மி. லீட்டர் பால் கொடுக்கலாம். 3 மணிநேர இடைவேளையில் சிறிது சிறிதாக பால் கொடுக்க வேண்டும்.




பாலூட்டும் புட்டியை துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

1. நன்கு சுத்தமாக்கப்பட்ட போத்தலினுள் பாலை எடுக்க வேண்டும்.

2. சூப்பியை (Nipple) பொருத்தி பால் வரும் வேகத்தை பரிசோதிக்க வேண்டும். சூப்பியின் துளை பெரிதாக இருந்தால் பால் வேகமாக வந்து குழந்தையை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும்.

3. சூப்பி மூடியினால் சூப்பி மூடப்படவேண்டும்.

4. பின்பு சுத்தமான சுடுநீரினுள் போத்தலை வைத்து 15 நிமிடத்தின் பின்பு வெளியில் எடுத்து நன்கு ஆறவிட வேண்டும்.

பாலூட்டும் போது பால் உடல் வெப்பநிலைக்கு அண்ணளவான சூட்டில் காணப்பட வேண்டும். அளவான சூப்பியை உபயோகிக்க வேண்டும். பெரிய சூப்பி, சிறிய சூப்பி உகந்ததல்ல. பால் புகட்டல் உரிய முறையில் உரிய அளவில் நடைபெறவில்லையெனில் குருதிச்சோகை போன்ற நோய்கள் குழந்தைக்கு ஏற்படலாம்.

குறைமாதக் குழந்தையாக இருந்தால் அதன் ஊட்டத்தேவை பின்வருமாறு அமையும். முதல் வாரம் 60 கலோரி /கிலோ கிராம் தேவைப்படும். அடுத்த வாரம் முதல் 120-150 கலோரி/கிலோகிராம் வரை தேவைப்படும். 100மி.லீ/கிலோகிராம் வரையில் நீர் தேவைப்படும். 50 சதவீத சக்தி காபோவைதரேற்று ஊட்டமாக கொடுக்கப்பட வேண்டும். ஆயினும் லக்ரோஸ் பால் உணவை உடனடியாகக் கொடுக்கக் கூடாது. குளுக்கோஸ் கொடுக்கலாம். 4 கலோரி/ கிலோ கிராம் புரதம் நாளொன்றுக்குத் தேவைப்படும். கொழுப்பை பொறுத்தவரை Mediumchain Triglycerids உகந்தது. இதனை சாதாரண உணவு ஊடாகப் பெற முடியாது. இதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட உணவுப் பொருட்களின் மூலமே பெறலாம்.

**விட்டமின்கள், கனியுப்புகள் பின்வரும் அளவீடுகளில் தேவைப்படும்.**

| | | |
|---|---|---|
| விட்டமின் ஏ (I.U) | 1000 | இரண்டு வாரத்தின் பின் கொடுக்கலாம் |
| விட்டமின் சி (மைக்ரோ.கிராம்) | 35 | இரண்டு வாரத்தின் பின் கொடுக்கலாம் |
| விட்டமின் டி (I.U) | 400 | இரண்டு வாரத்தின் பின் கொடுக்கலாம் |
| Folic acid (மைக்ரோ.கிராம்) | 50 | இரண்டு வாரத்தின் பின் கொடுக்கலாம் |
| விட்டமின் கே (மைக்ரோ.கிராம்) | 0.5-1 | பிறந்தவுடன், பின்னர் ஒவ்வொரு வாரமும் நோய் எதிர்ப்பு கொடுக்கப்படும் குழந்தைகளுக்கு மாத்திரம். |
| விட்டமின் ஈ (I.U) | 15 | 1.5கிலோ கிராமிலும் எடை குறைந்த குழந்தைகளுக்கு 36 வாரங்களுக்கு கொடுக்கலாம். |
| Zink (mg/kg) | 800-1200 | தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கு மேலதிகமாக வழங்க வேண்டும். |
| Iodine (mg/kg) | 4-5 | தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கு மேலதிகமாக வழங்க வேண்டும். |

அடுத்த வாரம் மேலும் இதுபற்றி அறிந்து கொள்வோம்.

தவநாயகம் மகிந்தன் BSc (Nutrition)
ஊட்டவியலாளர்,
வயம்ப பல்கலைக்கழகம்.




## வீதி விபத்துக்களில் உயிரிழப்போர் தொகை சீனாவில் அதிகரிப்பு!

இவ்வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் சீனாவில் வீதி விபத்துக்களில் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர் என சீன போக்குவரத்து நிர்வாகத்துறை இணை இயக்குநர் லாங் ஜின் பியாங் தெரிவித்தார்.

இவ்விபத்து சம்பவங்களால் அரசாங்கத்துக்கு சுமார் 400 கோடி ரூபா வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு விபத்துக்களின் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இவ்வருடத்தில் ஜனவரி முதல் ஜூன் வரையிலான கடந்த ஆறு மாதங்களில் சீனாவில் ஏறத்தாழ இரண்டு லட்சம் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விபத்துக்களில் 41 ஆயிரத்து 933 பேர் உயிரிழந்துள்ளனர். 2 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அதிக சுமை, அதிக வேகம், நெடுஞ்சாலைகளின் விதிமுறைகள் மீறப்படல்ஆகியவையே விபத்துக்கான காரணங்களாகும் என்றும் அவர் விளக்கியுள்ளார்.

## பாக். முன்னாள் பிரதமர்கள் நாடு திரும்புவார்களா?

வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் இருக்கும் பாகிஸ்தானிய முன்னாள் பிரதமர்களான பெனாஸீர் பூட்டோவும், நவாஸ் ஷெரீப்பும் நாடு திரும்புவதற்கும், அடுத்த வருட பொதுத் தேர்தலில் பங்கெடுப்பதற்கும் அனுமதிக்கப்பட வேண்டுமென பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதுவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க வெளி விவகார அமைச்சர் கொண்டலிசாரைஸ், தமது பாகிஸ்தானிய விஜயத்தின் போது, பாகிஸ்தானில் ஜனநாயக ரீதியாகவும் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென கோரியிருந்தார்.

வாக்களிப்பின் அனைத்து அம்சங்களையும் சர்வதேசம் மிக உன்னிப்பாக கவனித்து வருகிறது. வேட்பாளர்களுக்கு சுதந்திரமாக கூட்டங்கள் நடத்துவதற்கும், பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் உரிமை இருக்க வேண்டுமென்றும் ரைஸ் வலியுறுத்தியிருந்தார்.

## அமெரிக்காவை நடுங்க வைத்தது மும்பை ரயில் குண்டு வெடிப்பு

மும்பையில் நடந்த தொடர் ரயில் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நியூயோர்க் நகரின் சுரங்க ரயில்களிலும் குண்டு வெடிக்கப் போவதாக வதந்திகள் பரவியதையடுத்தே இந்தப் பரபரப்பு ஏற்பட்டது.

மும்பையில்இடம்பெற்ற தொடர்குண்டு வெடிப்பில் 200 பேர் வரை உயிரிழந்ததுடன் 700 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். தொடர்ந்து 7 ரயில் நிலையங்களில் குண்டுகள் வெடித்தன. இதனால் பெரும்பாலானோர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

இதனையடுத்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலும் குண்டுவெடிக்கப் போவதாக வதந்திகள் பரவின. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் உஷார்படுத்தப்பட்டனர். சுரங்க ரயில்களில் பாரிய தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும் எவ்வித குண்டுகளும் கைப்பற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பிறகு மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

அத்துடன் மும்பைக் குண்டுத் தாக்குதலுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து உட்பட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

## சேர்சிலின் சுருட்டு ஏலத்தில்

சுருட்டு விற்பனைக்குச் சூடேற்ற சேர்ச்சில் சுருட்டு என்ற பெயருடன் சுருட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டன ஒரு காலத்தில். அவ்வளவுக்கு சேர்ச்சில் பிடித்த சுருட்டு பிரபலமாகி இருந்தது.

அண்மையில் அவர் புகைத்த பாதி சுருட்டு ஒன்று இங்கிலாந்தில் ஏலத்தில் விற்கப்பட்டது. அதை ஒருவர் 365 பவுண்ட்ஸுக்கு வாங்கினார். அதாவது அதன் இந்திய ரூபா பெறுமதி சுமார் 60 ஆயிரம் ரூபா.

1950 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிளக்பூல் என்ற இடத்தில் ஒரு கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக சேர்ச்சில் போயிருந்தார். கூட்டம் தொடங்குவதற்கு முன் அவர் சுருட்டு புகைத்துக்கொண்டிருந்தார். கூட்டம் ஆரம்பமானது. பாதி புகைத்த சுருட்டை அங்கு காவலுக்கு நின்ற பொலிஸ்காரரிடம் கொடுத்தார்.

அந்தப் பொலிஸ்காரர் பத்திரமாக வைத்திருந்த அந்தச் சுருட்டுத்தான் சேர்ச்சிலின் உறவினர்களால் இப்போது ஏலம் விடப்பட்டுள்ளது.

சேர்ச்சில் பாவித்த சுருட்டுப்பெட்டி ஒன்று சுமார் 4 லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனையானது.

## தலாய் லாமாவின் ஐரோப்பியப் பயணம் ரத்து

திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா உடல்நலக் குறைவு காரணமாக தனது ஐரோப்பிய பயணத்தை ரத்துச் செய்துள்ளார்.

புத்தமதத் துறவியான தலாய்லாமா திபெத் நாட்டிலிருந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர். இமாச்சலப்பிரதேசத்தில் தங்கியுள்ள அவர் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக இம்மாதம் 11 ஆம் திகதி முதல் பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிற்கு சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டிருந்தார். அவர் இப்போது கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதால் பயணத்தை ரத்துச்செய்ய வேண்டுமென டாக்டர்கள் கேட்டுக் கொண்டனர். அதையடுத்து தலாய் லாமா தனது ஐரோப்பிய பயணத்தை ரத்துச் செய்திருக்கிறார்.

## சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்ற மலேசியா தயாராகிறது

மலேசியாவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களைக் கண்டுபிடித்து அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப் போவதாக மலேசிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

கட்டட நிர்மாணப் பணிகள், தொழிற்சாலைப் பணிகளில் ஏராளமான வெளிநாட்டவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வேலைகளில் மலேசியாவில் சட்ட விரோதமாகக் குடியேறிய சுமார் 15 லட்சம் பேர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2005 ஆம் ஆண்டு இவ்வாறு சட்ட விரோதமாக குடியேற முயன்ற சுமார் 5 லட்சம் பேரை மலேசிய அரசு நாட்டைவிட்டு வெளியேற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சட்டவிரோத குடியேற்ற வாசிகளே தமது நாட்டினுள் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களுக்குக் காரணம் எனக் கூறியுள்ள மலேசிய அரசாங்கம், இவர்களை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப் போவதாக தெரிவித்துள்ளது.



# தமிழ்ச் சங்கத்தில் தவிலடி

''படித்ததில் பிடித்தது நிகழ்ச்சி வெள்ளிக்கிழமைகளில் தமிழ்சங்கத்தில் அரங்கேற்றப்படுகின்றது.''

''ஆமா! அதுக்கென்ன இப்பிடி தமிழ்சங்கத்தில் ஒரு தவிலடின்னு குண்டைத் தூக்கிப் போடுறீர்.''

''புரியலியா?''

''உம் புரியரது, புரியரது ஓர் எழுத்தாளனை கூப்பிட்டு வைச்சு, அவன் என்ன கண்றாவியை புத்தகமாகப் போட்டிருந்தாலும், ஆசாமி பசையான ஆளாக இருந்தால், இல்லே ஊடக உலகு தொடர்புள்ளவனாக இருந்தால், புகழோ புகழுன்னு புகழ்ந்து ஆளை திக்குமுக்காட வைக்கிறதும், பாவம் ஓர் அப்ராணியாக இருந்துட்டா என்னென்னவோ வெளங்காத இஷங்களால் உண்டு இல்லேன்னு டண்ணி எழுத்துலகிலிருந்து ஆளை ஓடச் செய்வது என்பதற்குத்தானே 'தமிழ்ச் சங்கத்தில் ஒரு தவிலடி' என்று நாமகரணம் சூடியிருக்கிறீர்.''

''அடப்பாவி மனுஷா! உன் கற்பனைக்கு ஓர் அளவில்லையா? விக்கிரமாதித்தன் மகாராஜாவின் பஞ்ச கல்யாணியைப்போல சுற்றிச் சுழன்று காடு மேடெல்லாம் ஓடி மறுபடியும் வேதாளம் பல்லிளிக்கும் முருங்கை மரத்தடிக்கே வந்திட்டீர். கதையை கேளும். படித்ததில் பிடித்தது தமிழ் சங்கத்தில் புதிய நிகழ்ச்சி. சங்கத்தின் துணைத்தலைவர், அதான் நம்ம சூரியனை தம் கணீர் குரலால் நாடு பூரா சுற்றி வரச் செய்பாரே, அவருடைய தேப்பனார் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் ஆரம்பித்து வைச்சார். இப்ப எட்டு நிகழ்ச்சிகள் முடிந்து நெட்டி முறித்து நிற்கின்றன. நாம் வாசித்தவைகள் என்னவாக இருந்தாலும் சபையில் கூடியிருப்போருடன் பகிர்ந்து விரிந்து கூடிக் குலவுவதற்கு பெயர்தான் 'படித்ததில் பிடித்தது' நிகழ்ச்சி.''

''அடிசக்கை!''

''பாரதிதாசன் கவிதைகளை இரகுபதி எடுத்துக்கொண்டார். கவிஞர்களான தயானந்தா, திருக்குமரன், கதிர்காமன், சடகோபன், கலைஞர் சோக்கெல்லோ சண்முகம், சட்டத்தரணி சோ. தேவராஜா எல்லோரும் தொடர்ந்து, பிடித்ததை பகிர்ந்து கூடிக்குலாவினார்கள்.''


''அட நல்ல கச்சேரிதான் பின்ன என்னைய்யா 'தவிலடி'ன்னு கையை பின்னி தலையை சொரியவைக்கிறீர். ஆமா! அது என்ன நமுட்டு சிரிப்பு வேண்டிக் கெடக்கு?''

''சோழியன் குடுமி சும்மா ஆடுமா? கேளும் கேளும் முழுசா விவரத்தை கேளும் அப்ப இல்ல விசயம் என்னேன்னு புரியும்.

ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா...! இரகுபதி சோகமா ஆரம்பிச்சாரு 'போச்சுடா! இதென்ன வாழ்க்கை மாயம்னு சொல்ர புலம்பலாச்சே' தலையை சொரிஞ்சுகிட்டு வெளிக்கு ஐய் ஜம்ப் போட்டு 'எஸ்கேப்' ஆயிடலாமோன்னு கண்ணை உருட்டுன நேரத்துலே

'விழியால் காதல் கதை பேசி மலர்க் கையால் சந்தனம் பூசி...'

கவிஞர் சுரதாவின் காதல் மயமான பாடல். அட, நம்ம இரகுபதி தான் இளமைத்துள்ளலோடு பாடுராரு. அமரராகி விட்ட கவிஞர் சுரதாவின் கவிதைகளோடு இரகுபதிக்கு ரொம்ப தான் தோஸ்த்து. நயமிக்க அக்கவிதைகளில் தமக்குப் பிடித்தவற்றை சபையோர் காதில் ஒழுகச் செய்தார். படே கில்லாடி மனுஷன் இந்த வயதிலும் காதல் பாட்டுகளை நன்னாகவே ஞாபகம் வைச்சிருக்கார்.



தயாரிப்பு:
கே. விஜயன்

கவிதை நயத்துக்கு இளையத்தம்பி தயானந்தாவுக்கு ஈடு தேடி பிடிக்க வேண்டும். அழகாகச் சொன்னார். சபையோர் முகங்களில் புன்னகையை இழையோடச் செய்தார்.

கவிதையோடு கதை சொல்வதில் திருக்குமரன் வல்லவர். 'இதுவும் கடந்து போகும்' என்றதன் ஆங்கில வரிகளை நெஞ்சில் ஆழமாக பொதைச்சிட்டார்.

'நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்தே நிலவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை கோலம் முழுவதும் காட்டிவிட்டால் சாமமா இவ்வுலகம், உயிர் காதல் கொள்கையிலே!

கலைஞர் சோக்கல்லோ பாரதிதாசனில் சொக்கிப்போன கவிதை. அவரும் கிறங்கிப்போய் எம்மையும் மயங்க கவிதைகளின் சொற்களுக்குள் நயம் தேடினார் கதிர்காமன். 'படித்தேன்' என்பதற்கு ஒரு+படி+தேன் என்றாரே பார்க்கலாம்.

ஒரு கவிஞருக்கு தான் படித்ததில் எதுவும் பிடிக்கவில்லையோ தெரியவில்லை. நான் பேசியவைகளில் தனக்கு பிடித்ததிற்கு தாவிவிட்டார்.

சொக்கல்லோ பேசியபோது 'ஏனைய்யா சும்மா வெளிநாட்டுக் கவிஞர்களின் கவிதைகளில் நயம் தேடி காலத்தைக் கரைக்கிறீர்கள். நம்ம கலைஞர்கள் குறித்து கொஞ்சம் கவனம் செலுத்துங்கள் என்று ஒரு கிரனைட்டை! தூக்கி எறிந்தார்.

கவிஞர் அதை பிடித்துக்கொண்டார். அங்கிருந்து தனது தவிலடியைத் தொடங்கினார். இந்த சபையில் இதற்கு முன்னே நம் கலைஞர்கள் குறித்து ஓர் உரை நிகழ்த்தி இருக்கிறார். அந்த கச்சேரிக்குப் பிறகு நாட்டில் பெரிய மாற்றம் வந்துவிட்டதாம். விபவி போன்ற நிறுவனங்கள் தமிழ் எழுத்தாளர்கள், சில்லையூர் செல்வராசன் போன்ற கவிஞர்கள் பற்றியெல்லாம் கருத்தரங்குகள் வைக்கின்றார்கள். உதய தரிசனம் போன்ற நிகழ்ச்சிகளில் தான் கலந்து கொண்ட போது தன்னைக் கண்டதும் மிகவும் பயபக்தியோடு இலங்கை கலைஞர்களின் இசைத்தட்டுகளை எடுத்துக் கொண்டு வந்தார்கள்....!

கவிஞரின் தவிலடி இப்படி முழங்கியது

''அம்மாடி இது முழுப்பூசனிக்காயை சோத்துல அமுக்குன கதையா இல்ல இருக்கு''

நம்ம இலக்கியத்தை நம்ம கலைஞர்களை முத்திரை பதித்து வைக்க விபவி, தமிழ்ச்சங்கம், தேசிய இலக்கிய பேரவை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் – இப்புடி பல பேர் சளைக்காமல் போராடிக்கிட்டு வர்ராங்க. கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் வைச்சு தொகுதி தொகுதியாக புத்தகம் போட்டிருக்காங்க. நம்ம கவிஞரு இதை இன்னும் தெரிஞ்சுக்காம நல்ல காலம் வருகிது நல்ல காலம் வருகிதுன்னு குடுகுடுப்பைகாரனாகி மந்திரத்தால மாங்காய்ப் பறிச்சிட்ட மாதிரி ஒரு சொல்லாலே சாதிச்சிட்டதாக டம டம டமன்னு வெளுக்குராரே!''

அடிசக்கைன்னானாம். இதைப்போய்தான் தவிலடின்னு மொழங்கினீரோ!''

''பின்னே! வரலாறு தெரியனும். அதை மதிக்கனும். தமது பங்களிப்பையும் வழங்கனும், இடையோர் இதில் கவனம் செலுத்தனும. சாதனைங்கிறது பஜனை மாதிரி கூட்டு முயற்சி.''

''அப்பிடிப்போடு ராசா!''

# குருஜிக்கு கிளைமோர் வைத்த சர்தாஜி

தமிழ்ப்பத்திரிகை உலகில் பத்தி எழுத்துக்கள் என்பவை வெறும் ஆவணப்படுத்தல் எழுத்துக்களாகவே உள்ளன. புலனாய்வு, சிண்டு முடிச்சு, தீப்பொறிகளாக பிரச்சினைகளைக் கிளப்பும் எழுத்துக்கள் மிகக் குறைவு. அரசியலாகட்டும், இலக்கியமாகட்டும் அத்தகைய துணிச்சலான எழுத்துக்களை எழுதுபவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இதற்கு பல காரணங்கள் உள்ளன என்பது உண்மையான போதும், இந்தியாவில் பல எழுத்தாளர்கள் இருந்தார்கள், இப்பொழுதும் இருக்கிறார்கள். அந்த வரிசையில் குஷ்வந்த் சிங் சர்தார்ஜி புகழ் பெற்ற ஒரு பத்திரிகையாளர். பத்திரிகை உலகில் பல கலக்கல்களை ஏற்படுத்தியிருக்கும் சர்தாஜி நல்ல கவிஞரும் கூட. 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஒப் இந்தியா' என்ற ஆங்கில பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த இவர் நிறையவே எழுதியுள்ளார். அரசியல், இலக்கியம் என பல துறைகளிலும் தனது 'சிண்டு முடிச்சு' கட்டுரைகளினால் எழுத்துக்களினால் நாரதகலகம் உண்டு பண்ணி பல விவகாரங்களில் மாட்டுப்பட்டு சிலந்தி வலையில் சிக்கிய பூச்சியாக படாதபாடு பட்டிருக்கிறார்.

ஒரு முறை சத்ரபதி சிவாஜி பற்றி இவர் கிளப்பிவிட்ட புயலினால் கழுத்து கொய்யப்படாமல் நூலிழையில் உயிர் தப்பினார்.

சத்ரபதி சிவாஜி செருப்புகழுக்குரிய மன்னர். மகாராஷ்டிர மக்களால் தெய்வமாக வணங்கப்படுபவர். இது போதாது என்ற நிலையில் 'சிவாஜி சேனா' என்ற பேரமைப்பு இயக்கம் [illegible]

[illegible]

பண்பாடும். அதுவும் வேண்டும்.

சர்தாஜியின் கட்டுரைகள் எவ்வளவுக்கு எவ்வளவு பிரசித்தமானவையோ அதே அளவுக்கு இவரைப் பற்றியதொரு இமேஜையும் வாசகர்களிடையே ஏற்படுத்திஇருந்தன. மது, மங்கை என்ற விவகாரங்களில் ஆசாமி எப்படிப்பட்டவராகவிருப்பார் என்ற இமேஜே அது.

கலையுணர்வு மிக்க வங்காளியுடன் ஒரு முறை மோதப்போய் பெரிய எதிர்ப்பை சம்பாதித்தும் கொண்டார். இந்தியாவின் புரட்சிகரமான கலைமலர்கள் பூக்கும் மாநிலங்களில் மேற்கு வங்கம் பிரதான இடம் வகிக்கின்றது. கலை இலக்கியத்துக்காக நோபல் பரிசினை சுவீகரித்துக் கொண்ட குருஜி இரவீந்திர நாத் தாகூர் முதல் நவீன சினிமாவின் அதியற்புத சிருஷ்டியாளன் என புகழ்பெற்ற சத்தியஜித்ராய் வரை இந்த மேற்கு வங்க அன்னை பெற்றெடுத்த அரும்புதல்வர்களே.

குருஜி இரவீந்திர நாத் தாகூரின் கலை இலக்கிய படைப்புகளின் மீது வங்காளிகள் அபரிதமான பக்தி வைத்துள்ளனர். இத்தகைய கலையுணர்வுள்ள மக்களின் பத்தியின் மீது தாக்கமானதொரு காரியத்தை ஏற்படுத்தும் விதமாக குஷ்வந்த் சிங் சர்தாஜி பெரும் குண்டொன்றை தூக்கிப் போட்டு விட்டார்.

வங்காளம் மட்டுமல்ல முழு இந்தியாவுமே கதிகலங்கிவிட்டது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள கலை இலக்கியவாதிகளெல்லாம் வெலவெலத்துப் போனார்கள் என்றால் மிகையில்லை.

அட சரிதான் இந்த சர்தாஜி, அந்த குருஜியைப் பற்றி அப்படி என்னதான் சொல்லிவிட்டார் என்ற பரபரப்பு ஏற்படுவது இயல்பு.

நோபல் பரிசு பெற்ற இரவீந்திர நாத் தாகூரொன்றும் எல்லோரும் தலையில் வைத்து கூத்தாடும் அளவிற்கு அப்படியொன்றும் தரமான படைப்பாளி அல்ல என்பதே அந்த விசயம்.

[illegible]

[illegible] இந்த வரிகள் வந்திருந்தால் அது பலரின் கண்ணில் படாமலே போயிருக்கும். ஏதோ அசட்டுப்பிசத்து என்று கூட சொல்லிவிடலாம். இது அப்படி அல்லவே.

மேற்கு வங்கத்தின் வட - கிழக்குப் பிராந்திய பத்திரிகையொன்று இலக்கிய பயிலரங்கொன்றினை நடத்தியது. இதில் சர்தாஜியும் கலந்து கொண்டார். அங்கே தான் இந்த குண்டை தூக்கிப்போட்டார்.

இந்த பயிலரங்கில் தாகூரின் கலை இலக்கிய படைப்புகள் குறித்து விமர்சனம் இடம் பெற்றது. அங்கு குஷ்வந்த்சிங்கும் பேசினார். கீதாஞ்சலி வங்கத்திற்கு மட்டுமல்ல, முழு இந்தியாவுக்கும், முழு ஆசியாவுக்குமே பெருமை தேடித்தந்ததாக மற்றவர்களெல்லாம் புகழ்ந்து தள்ளிக்கொண்டிருக்க, இவர் எழுந்து கீதாஞ்சலியை படைத்த பிரம்மனான தாகூரை கன்னா பின்னாவென விளாசித்தள்ளினார். அவர் ஒரு தரமான படைப்பாளியே அல்ல வென முழங்கினார்.

மறுநாள் 'த ஷில்லாங் டைம்ஸ்' என்ற புகழ்மிக்க பத்திரிகை தன் முன்பக்கச் செய்தியாக, கொட்டை எழுத்துக்களில் குஷ்வந்த் சிங் சர்தார்ஜி, குருஜி தாகூரை விளாசித்தள்ளினார் என்று பிரசுரித்துவிட்டது. தொடர்ந்து கல்கத்தா பத்திரிகைகளெல்லாம் போர்க்களத்தில் குதித்தன. சர்தார்ஜிக்கு எதிரான சமர்க்களம் உருவாகிவிட்டது. எல்லாப் பத்திரிகைகளிலுமே அது முன்பக்கச் செய்தி, பிரச்சினைக்குரிய செய்தியாகிவிட்டது.

பத்திரிகைகளில் சடசடத்த தீப்பிழம்பு மாநில சட்டப்பேரவைக்குள்ளும் காரசாரமான விவாதமாக கிளர்ந்தது. சகல கட்சிகளும் ஒருமித்த குரலில் ஆக்ரோஷமாகக் கத்தி குஷ்வந்த் சிங்கின் சிண்டை ஒரு பிடி பிடித்து குலுக்கி விளாசித்தள்ளினார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியுள்ளரான ஜோதி முகர்ஜி தீப்பொறிப் பேச்சாளர், 'அனலைக் கக்குபவர்' என்று புகழ் கொண்டவர். அவர் கக்கித் தீர்த்த தீப்பிழம்பில் குஷ்வந்த் சிங் வெந்து குளிர்காயாமல் போனது பெரிய அதிசயம். 'இந்த விவகாரத்தை நான் சும்மா விட்டுப்போவதில்லை. நாடாளுமன்றம் வரை கொண்டு போவேன்' என முகர்ஜி அலறினார். குஷ்வந்த்சிங் அச்சப்படவில்லை. மனம் தளரவில்லை. அவருக்கு தனது விமர்சனத்தின் மீது ஆணித்தரமான நம்பிக்கை.

'நான் ஒரு பத்திரிகையாளன், நூலாசிரியன், கவிஞன் இன்னொரு படைப்பாளியின் ஆக்கங்கள் குறித்து விமர்சிக்க எனக்கு அருகதையுண்டு. அதனை எந்த கொம்பனும் தடை செய்ய முடியாது.' என முஷ்டியை மடக்கி அவரும் கருத்துச் சமர்க்களத்தில் குதித்தார். விமர்சனத்தால் படைப்பாளி ஒடுங்கிப்போகமாட்டான் அவன் மென்மேலும் கூர்மை பெறுவான் இது சர்தாஜியின் கருத்து.

தாகூரின் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எனக்கு ஏமாற்றமளிக்கின்றன. அவருடைய படைப்புகளுக்கு தாகூரே தந்த ஆங்கில மொழி பெயர்ப்புகளை என்னால் இரசிக்க முடியவில்லை என்றார் சர்தார்ஜி.

முதுகெலும்புள்ள ஒரு பத்திரிகையாளன் புராணத்தில் வரும் நக்கீரனாகவே இருக்கிறான். விருது பெறும் நமது பத்திரிகையின் எழுத்தாளர்களில் எத்தனைபேர் இப்படி இருக்கிறார்கள்.

-கே.வி-

## சுவைத்தேன் ரசித்தேன்

நாதஸ்வர மேதை இராசரத்தினம் பிள்ளை குறித்து கவிஞர் கண்ணதாசன் இயற்றிய பாடல் இது -

இராசரத்தினம் பிள்ளை என்றாலே [illegible]

[illegible]

கண்ணதாசன்

[illegible]

[illegible]

கண்ணதாசன்

# தரிசனம்

## மண்டபம் அகதிகள் முகாம் சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

இராமேஸ்வரத்தில் இலங்கை அகதிகள் தங்கியுள்ள மண்டபம் அகதி முகாமை சீரமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன. இப்பணிகளை அமைச்சர் சு.ப. தங்கவேலன் மாவட்ட ஆட்சியருடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

மண்டபம் அகதிகள் முகாமுக்கு அகதிகள் வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து அவர்களின் குறைகளைக் கேட்டறியும்படி முதல் அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டதால் கடந்த மாதம் 16 ஆம் திகதி அமைச்சர்கள் சு.ப. தங்கவேலன், பெரிய கருப்பன் ஆகியோர் இது குறித்து முதல் அமைச்சரிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர். மண்டபம் முகாம் சீரமைப்பு பணிகளுக்காக 35 லட்சம் ருபா தேவை என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து முகாம் சீரமைப்புக்காக உடனடியாக 27 லட்சம் ருபாவை அனுமதித்த முதல் அமைச்சர் அதில் முதற்கட்டமாக 15 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

இதன்படி மண்டபம் முகாமில் கழிப்பறை, மின்வசதி, குடிநீர் வசதி, பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல் போன்ற பணிகள் தொடங்கியுள்ளன. இந்தப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அமைச்சர் சு.ப. தங்கவேலன் மண்டபம் முகாம் வந்திருந்தார். பணிகளை நேரில் பார்வையிட்ட அவர், பணிகளை தரமாகவும் விரைவாகவும் மேற்கொள்ள உத்தரவிட்டார்.

## இந்திய அரசு நினைத்தால் இலங்கைப் பிரச்சினைக்கு மூன்று நாட்களில் தீர்வு கிடைக்கும்

இந்தியாவுக்கு எதிராக விடுதலைப் புலிகள் எப்போதும் செயல்பட்டது கிடையாது என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் கூறினார்.

அண்மையில் இடம்பெற்ற ஈழத்தமிழர் பாகாப்புக்கான பொதுக் கூட்டம் சென்னை மைலாப்பூரில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திருமாவளவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

''இந்திய அரசு நினைத்தால் 3 நாட்களில் இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். சிங்கள ஆட்சியாளர்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். இந்தியாவின் கடல் எல்லையையும்,இலங்கையின் திருகோணமலைப் பகுதியை அமெரிக்கா போன்ற நாடுகள் ஆக்கிரமித்து விடாமலும் பாதுகாப்பது விடுதலைப் புலிகள்தான். இந்த உண்மையை இந்திய அரசுக்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். ஈழ விடுதலை கிடைக்கும் வரை ஈழ மக்களுக்கு ஆதரவாக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு இருக்கும்'' என்றார்.

## ஈழத்தமிழர்களுக்காக என்றும் குரல் கொடுப்பேன் - வை.கோ.

'விடுதலைப்புலிகளுக்கு எனது ஆதரவு என்றென்றும் உண்டு' என்று ம.தி.மு.க பிரமுகரின் இல்ல நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் வை.கோ. கூறினார்.

சென்னையை அடுத்துள்ள புழலில் உள்ள ம.தி.மு.க. பிரமுகர் சி.டி.ராஜுவின் புதிய இல்லத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. பேசியதாவது:-

''இலங்கைப் பிரச்சினைக்கு தமிழீழம் தான் தீர்வு. எந்தப் பாதிப்பு வந்தாலும் நான் எனது கொள்கையிலிருந்து என்னை மாற்றிக் கொள்ள மாட்டேன். நான் ஈழத்துக்குச் சென்று வந்தபோது, மரணத்தை மிக அருகில் சந்தித்தேன். என்னுடன் வந்தவர்கள்என்னைக் காப்பாற்ற பலியானார்கள். அன்று நான் இறந்திருந்தால் கூட ஈழத் தமிழர்களுக்கான எனது அர்ப்பணிப்பாக அதை ஏற்றுக் கொண்டிருப்பேன்.

ஈழத் தமிழர்களுக்காக அன்றும் குரல் கொடுத்தேன் இன்றும் குரல் கொடுக்கிறேன். என்றும் குரல் கொடுப்பேன். விடுதலைப் புலிகளுக்கு எனது ஆதரவு என்றென்றும் உண்டு.'' என்றார்.

## முதல்வர் கருணாநிதிக்கு தொல்காப்பியர் விருது

முதல்வர் கருணாநிதிக்கு தொல்காப்பியர் விருது வழங்க சென்னை நுங்கம்பாக்கம் மகாலிங்கபுரத்தில் உள்ள 'ஆழ்வார்கள் ஆய்வு மையம்' முடிவு செய்துள்ளது.

விருதாக 1 லட்சம் ருபா வழங்கப்பட இருக்கிறது. இத்தகவலை அம்மையத்தின் தலைவரான முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன், நிறுவன செயலாளரான மக்களவை முன்னாள் உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் ஆகியோர் தெரிவித்தனர்.

மையத்தின் விருதைப் பெறுவோரைத் தேர்வு செய்வதற்கான கூட்டம் சென்னையில் நடைபெற்றது. கூட்டம் முடிந்த பின் வெளியிடப்பட்ட அறிவிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது:

'65 ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தை இலக்கியமாகப் படைத்துக் கொண்டிருப்பவர் கருணாநிதி. 65 ஆண்டுகளுக்கு மேல் பத்திரிகையாளராக, பத்திரிகை ஆசிரியராக உள்ளார். 'குறளோவியம்' சங்கத் தமிழ் உள்ளிட்ட அவரது படைப்புகள் புகழ்பெற்றவை.

சாதாரண மக்களும் தொல்காப்பியத்தை அறியும் வகையில் தொல்காப்பிய பூங்காவை எழுதியுள்ளார். மிகச் சிறந்த இலக்கிய படைப்பாளராகத் திகழும் அவருக்கு தொல்காப்பியர் விருதை வழங்க முடிவு செய்துள்ளோம்.

முதல்வரைச் சந்தித்து விருது வழங்கும் விழாவுக்கான திகதியை முடிவு செய்வோம்.'

## 'தி.மு.க.அரசின் கைப்பொம்மையே ஆளுநர்' - ஜெயலலிதா

''அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட கேபிள் தொலைக்காட்சி சட்டமூலத்துக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. இந்த விஷயத்தில் தி.மு.க. அரசின் கைப்பொம்மையாக ஆளுநர் செயற்படுகிறார்'' என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

''விரும்பும் டி.வி. அலைவரிசையில் சென்னை மக்கள் டி.வி. பார்ப்பதற்கு வசதியில்லை. இதன் மூலம் சென்னை மக்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டுதான் கேபிள் டிவி சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. ஆனால் முதல்வர் கருணாநிதியோ மக்கள் தவறுக்கு எதிராக குடும்ப நலனை மட்டுமே கருத்தில் கொண்டு சட்டமூலத்தை திரும்பப் பெற்றார்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மூப்பனார் வாழ்க்கை திரைப்படமாகின்றது

காமராஜ் திரைப்படத்தைத் தயாரித்த ரமணா கம்யூனிகேஷன், காங்கிரஸ் தலைவர் ஜி.கே. மூப்பனாரின் வாழ்வையும் அவரது அரசியல் செயல்பாடுகளையும் திரைப்படமாகத் தயாரிக்க உள்ளது.

பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த மூப்பனார் தியாகத்தை வலியுறுத்தும் காந்தியக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு காங்கிரஸ் கட்சியில் உறுப்பினரானது முதல் இந்திய தேசத்தின் ஒட்டு மொத்த கவனத்தையும் கவர்ந்த தருணம் வரையிலான அனைத்துச் சம்பவங்களும் இந்தத் திரைப்படத்தில் பதிவு செய்யப்பட உள்ளன.

தமிழக திரையுலகின் முன்னணி கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் ஒத்துழைப்போடு தயாராகும் மூப்பனாரின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தின் படப்பிடிப்புகள் இம்மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

## முருகன்-நளினி பற்றி இந்தியப் பிரதமருக்கு வை.கோ. கடிதம்

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளான முருகன்-நளினி ஆகியோரின் மகள் அரித்திரா இந்தியா வருவதற்கான விசாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மன் மோகன் சிங்குக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வை.கோ. கடந்த 12 ஆம் திகதி புதன் கிழமை பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறையில் இருக்கும் முருகன்-நளினி ஆகியோர் இலங்கையில் உள்ள தங்கள் மகள் அரித்திராவை (வயது 15) பார்க்க விரும்புகின்றனர். அதற்காக அரித்திராவுக்கு விஸா வழங்க வலியுறுத்தி இருவரும் கடந்த ஜூன் 26 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அரித்திரா இந்தியாவில் கல்வி கற்கவும் விசா அனுமதி கோருகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் இவ்விடயத்தில் பிரதமர் தலையிட்டு அரித்திராவுக்கு விஸா வழங்குமாறு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு உத்தரவிட வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு நியாயம் வழங்கும் வகையில் இந்த நடவடிக்கையை பிரதமர் எடுக்க வேண்டும் என வை.கோ. தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈழ அகதிகள் மண்டபம் முகாமிலிருந்து விழுப்புரத்துக்கு மாற்றம்

மண்டபம் அகதி முகாமிலிருந்து விழுப்புரம் மாவட்ட அகதிகள் முகாமுக்கு 198 ஈழத் தமிழ் அகதிகள் கடந்த 1[illegible] ஆம் திகதி வியாழக்கிழமை மாற்றப்பட்டனர்.

இராமேஸ்வரத்துக்கு வரும் அகதிகள் அனைவரும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள அகதிகள் தமிழகத்திலுள்ள ஏனைய முகாம்களில் உறவினர்கள் இருந்தால் அந்த முகாம்களுக்குச் செல்ல விரும்புகின்றனர்.

இந்நிலையில் மண்டபம் முகாமில் உள்ள அகதிகள் பலரின் விருப்பப்படி அகதிகள் மறுவாழ்வு ஆட்சியர் எல். பால்ராஜ், 57 குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆண்கள், 65 பெண்கள், 35 ஆண் குழந்தைகள், 23 பெண் குழந்தைகள் என 198 அகதிகளை விழுப்புரம் மாவட்டம் கீழ்புத்துப்பட்டி அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

## அகதிப் பெண்ணுக்கு பொலிஸார் எச்சரிக்கை

தான் தங்கியிருந்த அகதி முகாம் பெயர்ப்பட்டியலில் தனது பெயர் விடுபட்டதால் புதிதாக தனது பெயரை பதிந்து கொள்வதற்காக, இலங்கையிலிருந்து கடந்த 12 ஆம் திகதியே வந்ததாகக் கூறி, பொலிஸாரை ஏமாற்ற முயன்ற அகதிப் பெண் ஒருவரை இராமேஸ்வரம் பொலிஸார் எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளனர்.

இலங்கையிலிருந்து படகில் அகதியாக வந்ததாகக் கூறி தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்துக்கு தனியாக வந்த பெண் ஒருவரை பொலிஸார் விசாரித்துள்ளனர். அப்போது தனது பெயர் புஷ்பவதி என்றும் தன்னுடன் படகில் வந்த நான்கு இளைஞர்கள் தனுஷ்கோடி வந்ததும் தப்பிச் சென்றதாகவும் கூறியுள்ளார். இதனால் குழப்பம் அடைந்த புலனாய்வுத்துறைப் பொலிஸார் தப்பிச் சென்றவர்கள் யார் என்பது குறித்து அந்தப் பெண்ணிடம் தொடர்ந்து விசாரணை செய்தனர்.

அப்போது முன்னுக்குப் பின் முரணாக பதில் கூறிய அந்தப் பெண், திருப்பூர் அகதிகள் முகாமில் தங்கியிருந்த நிலையில் பெயர் பதிவு செய்வதற்காக பொலிஸாரை ஏமாற்ற முயன்றது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து அந்தப் பெண்ணை எச்சரிக்கை செய்த பொலிஸார் அவரை திருப்பூருக்கு அனுப்பி வைத்தனர்.

## சரத்குமார் போட்டியின்றித் தெரிவு

நடிகர் சங்கத் தலைவராக நடிகர் சரத்குமார் போட்டியின்றி தெரிவாகியுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட நடிகர் நாஸர் தனது மனுவை வாபஸ் பெற்றதால் சரத்குமார் நடிகர் சங்கத் தலைவராக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் நடிகர் சங்கத் தலைவர் பதவிக்கு சரத்குமார் போட்டி மனு தாக்கல் செய்திருந்தார். இந்த நிலையில் நடிகர் நாஸர், தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்காக மனு தாக்கல் செய்தார். இதனால் நடிகர் சங்கத் தேர்தல் பரபரப்பானது. இந்நிலையில் கடந்த 13 ஆம் திகதி நாஸர் தனது மனுவை வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

## சிவாஜி சிலையில் சர்ச்சை

சென்னை கடற்கரை வீதியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சிலை வைக்கும் இடம் குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு உயர்நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

சிவாஜி கணேசனின் சிலை, காந்தி சிலையை மறைக்கும் வகையில் இருப்பதாகவும் போக்குவரத்துக்கு இது இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்படுவதாகவும் கூறி, இந்திய விடுதலைப் போராட்டத் தியாகி பி.என். சீனிவாசன் வழக்குத் தொடர்ந்தார்.

சிவாஜி கணேசனின் சிலையை வேறு இடத்தில் வைக்க முடியுமா என்று அரசிடம் ஆலோசனை நடத்தி கருத்து தெரிவிக்குமாறு சட்டத்தரணிக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## விடுதலை....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோடிகாட்டி நிற்கிறது.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்று சர்வதேச சமூகம் எல்லை போடுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் வி. உருத்திர குமார் கூறியிருக்கிறார்.

தீர்வு ஐக்கிய இலங்கைக்குள்ளேயே அமைய வேண்டும் எனக் கூறுவதன் மூலம் சர்வதேச சமூகமும் சமாதானத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது என்பது நான் அவரது நிலைப்பாடு.

சுதந்திரமான ஒரு நாட்டை உருவாக்குதல் உட்பட சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப் படலாம் என்ற சுயநிர்ணய உரிமை விதிக்கு 'ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு' என்ற நிலைப்பாடு முரணானது மட்டுமல்லாமல் உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள தேசியப் பிணக்குகளின் விடயத்தில் சர்வதேச சமூகம் கையாண்டுவரும் தற்போதைய நடைமுறைகளுக்கும் இது முற்றும் மாறுபட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

உருத்திரகுமாரின் கருத்துக்கள் சர்வதேசமே என நிறுவும் வகையில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்களும் அமைந்துள்ளன.

''உதவி வழங்கும் சர்வதேச நாடுகள் ஸ்ரீலங்கா அரசின் தூண்டுதல் காரணமாக அரசியல் தீர்வுக்கான வரம்புகளை திணிக்கத் துணிந்தமை இந்தத் தலையிடானது எமது அரசியல் தகமையையும் தலைவிதியையும் நாமே தீர்மானித்துக் கொள்ளும் சமதர்மமான உரிமையைப் பாதித்தது.'' இவ்வாறு தெரிவிக்கும் மதியுரைஞர் சர்வதேசத்தின் தலையீடு நெருக்குவாரங்களின் மூலம் புலிகளைக் கட்டுப்படுத்தி அமுக்கும் ஸ்ரீலங்கா அரசின் அந்தரங்கத் திட்டமும் அமைதி முயற்சிகள் நடைமுறையற்றுப் போவதற்குக் காரணமாக அமைந்தது என்றும் சொல்கிறார்.

இவற்றையெல்லாம் அலசிப் பார்க்கும் போது உரிமைபெற்ற சுதந்திர மக்களாக தமிழ் மக்கள் வாழ்ந்து விடக்கூடாது என்ற [illegible] பேரினவாதச் சிந்தனையும் இன்றைய [illegible] வகையில் [illegible] சர்வதேச சமூகத்தின் வல்லாதிக்க சிந்தனையும் அமைதித் தீர்வைக் காண்பதற்கான தடைக்கற்களாக என்றுமே இருக்கப் போகின்றன என்ற உண்மை புலனாகின்றது.

### இந்தியமுன்மாதிரி பயன் தருமா?

இந்தப் பின்னணியில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்திய முன் மாதிரியைப் பின்பற்றி நாட்டின் இறைமைக்குப் பாதிப்பில்லாத வகையில் தீர்வு யோசனையைத் தயாரிப்பதில் கவனஞ் செலுத்துமாறு தான் நியமித்துள்ள பத்தி ஜீவிகள் குழுவுக்கு மஹிந்தர் ஆலோசனை வழங்கி உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமன்றி தென்னிலங்கை மக்களின் ஆதரவு பெறாத எந்த தீர்வுத் திட்டத்தையும் தாம் முன்வைக்கப் போவதில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் மஹிந்தரின் இந்த அறிவிப்புக் குறித்து இப்படிக் கேட்கிறார்கள்.

ஒற்றையாட்சி முறைக்கு அப்பால் நகர முடியாது என்று அடம்பிடிக்கும் பேரினவாதிகள் இந்திய முறையிலான அதிகாரப்பரவலை ஏற்றுக்கொள்வார்களா? இந்த பேரினவாத சக்திகளைப் புறக்கணித்து இந்திய மாதிரியிலான தீர்வொன்றை அரசு முன்வைப்பினும் தென்னிலங்கை அந்தத் தீர்வுக்கு பூரண ஆதரவு வழங்குமா? என்பதே அவர்களது கேள்வியாகும்.

இதற்கான பதில் நிச்சயம் ''இல்லை'' என்பதே. அதனால்தான் எட்டுத்தமிழ் மக்கள் அமைதி முயற்சியொன்று இடம்பெறுவதாகஎண்ண வேண்டியதில்லை என்று நினைக்கிறார்கள். அவர்களின் எண்ணம் சரியானதே.

# மீண்டும்...

(7 ஆம் பக்கம் பார்க்க)

அதுமட்டுமன்றி பாகிஸ்தானின் தலைவர்களும் இந்த தாக்குதல் பயங்கரவாதத்தின் இழிவான செயல்களில் ஒன்று" எனக் கூறி கண்டித்துள்ளனர்.

சுமார் 300 பேர்வரை கொல்லப்பட்டும் 700பேர் வரையில் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படும் இந்த தொடர் குண்டு வெடிப்புகள் மும்பாய் மக்களை உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கும் நோக்கத்தைக் கொண்டே நடத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அங்கு அடிக்கடி பரவும் வதந்திகளை நம்ப வேண்டாமென்றும் அதேவேளை அமைதியாக இருக்கும் படியும் பிரதமர் மன்மோகன் சிங் பொதுமக்களுக்கு கூறியுள்ளார்.

இந்தியா தற்போது பொருளாதார அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி வருகிறது. வருடத்திற்கு 9 வீத வளர்ச்சியை காண வேண்டும் என்ற இலக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆட்சியில் வர்த்தக நகரான மும்பாயில் எதிர்நோக்கியுள்ள இந்த அச்சுறுத்தல் சாதாரணமாக நோக்கப்படக் கூடிய ஒன்று அல்ல. பொதுமக்கள் உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபட்டு தொழில்களுக்கு செல்லவும், இயல்பு நிலைக்கு திரும்புவதற்கும் தேவையான சிகிச்சை முறைகளை பல்வேறு தொண்டர் அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன. அதிகமான கிரிக்கெட் நட்சத்திரங்களினதும், திரைப்பட நடிகர்களினதும் தாயகமான மும்பையின் மீள் சுழற்சிக்கு அவர்களும் துணைசெய்து வருகின்றார்கள்.

எப்படியும் தமது மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய பாரிய பொறுப்பு பொலிஸாருக்கும் பாதுகாப்புத்துறைக்குமுண்டு.

இந்த நிலையில் இந்தியாவின் வர்த்தமையமாகவும் பாதாள உலக கோஷ்டியின் கேந்திர நிலையமாகவும் மும்பாய் இருந்து வருவதாலேயே அது மீண்டும் மீண்டும் இலக்குவைக்கப்படுவது சாத்தியமாகிறது என ஆய்வாளர்கள் கருத்து கூறுகின்றனர்.

எது எப்படியிருப்பினும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு பயங்கரவாதம் ஒரு தடையாகவே இருந்து வருகிறது. வர்த்தக நகரங்கள் மீதான தாக்குதல்கள் இந்தியாவில் வெளிநாட்டு முதலீடுகளை குறைத்து நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சி காண செய்வதை இலக்காக கொண்டிருப்பதால் உடனடியான தீர்வொன்றை சாத்தியமான முறையில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளதாகவே கருதமுடியும்.

# முஸ்லிம்...

(7 ஆம் பக்கம் பார்க்க)

...என்னதான் ...கொண்டிருக்கிறார்கள்.

அமைச்சுப் பதவிகளை வகித்துக்கொண்டு பேரினவாத அரசுக்கு சேவகம் செய்யும் அடிமைகளாகவே முஸ்லிம் தலைவர்கள் இருக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமைவிட ஒருபடி மேலே சென்று சிங்கள தேசத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் ஏனைய முஸ்லிம் தலைவர்கள் சமூகத்தின் அடிப்படை நலன்களில் கூட அக்கறையுடன் செயற்படுவதாக இல்லை.

பொதுவாக சகல முஸ்லிம் கட்சிகளும் ஆட்சியாளர்களுக்கு வால் பிடித்துக்கொண்டு சொகுசுகளை அனுபவிப்பதிலேயே முண்டியடித்துக் கொண்டிருக்கின்றன.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், நுஆ ஆகிய மூன்று கட்சிகளைச் சேர்ந்த எட்டு எம்.பிக்கள் அமைச்சர்களாக பதவி வகிக்கின்றனர். பாராளுமன்றத்தில் இடம் பெற்றிராத சில முஸ்லிம் கட்சிகளின் முக்கியஸ்தர்களுக்கு அரசில் உயர் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆக மொத்தத்தில் முஸ்லிம் கட்சிகளின் இப்போதைய நிலை விருப்பியோ, விரும்பாமலோ - சரியோ, பிழையோ அரசின் நடவடிக்கைகள் அனைத்திற்கும் ஒத்து ஊத வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் தற்போது அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முயற்சிக்கான முன்னோடி நடவடிக்கைகள் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்ற வகையில் அமையாவிட்டாலும் அரசில் ஒட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் எவ்வாறான அனுகுமுறைகளைக் கைக்கொள்ளப் போகின்றனர் என்பதே முஸ்லிம்கள் மத்தியில் எழுந்திருக்கும் அச்சமாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்டிருக்கும் 'உள்ளகத் தேசியத் தீர்வு' எனும் திட்டத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பான அபிலாஷைகளை உள்ளடக்குவதற்கு முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான முயற்சிகளை முன்னெடுப்பது அவசியமாகும். இதுவே வாக்களித்த முஸ்லிம்களின் ஒரே எதிர்பார்ப்பாகும்.

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 24-07-2006 முதல் 30-07-2006வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலன் தர வாய்ப்புக் குறைவு. மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் பலன் குறையலாம். தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். (2,7) உரிய சுக்கிரன் 3இல் இருப்பது விசேஷம். கையில் பணம் உண்டு. திருமண பலன் உண்டு. பகை விலகும். (3,6) உரிய புதன் நல்ல பலன் தர மாட்டார். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். 4இல் சூரியன் சனி சேர்க்கை நல்ல பலனைத தராது. தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினையுண்டு. (9,12) உரிய குரு 7இல் இருப்பது விசேஷம். பிதா நலம். அதிர்ஷ்டம் உண்டு. சயன சுகம் உண்டு. ஆலய வழிபாடு அமையும். (10,11) உரிய சனி 4 இல் நல்ல பலன் தராது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். பொதுவாழ்வில் மதிப்புக் குறைய வாய்ப்பு உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. எதிர்பார்ப்புக்கள் எதிர்காலத் திட்டங்கள் காலதாமதமாகலாம்

**இடபம்:கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 2இல் இருப்பது சிறப்பானது. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். (2,5) உரிய புதன் இரண்டில் நல்ல பலன் தர வாய்ப்புக் குறைவு. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. 4க்குரிய சூரியன் 3 இல் இருப்பது விசேஷம். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அர்த்தம் இருக்கும். (7,12) உரிய செவ்வாய் 4 இல் நல்ல பலன் தர மாட்டார். சயன சுகம் குறையலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (8,11) உரிய குரு 6இல் இருப்பது தீங்கானது. முதலீடுகளால் லாபம் குறையலாம். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (9,10) உரிய சனி 3 இல் இருப்பது விசேஷம். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும். பிதா நலம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக பக்தி வளரும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ராசியில் நல்ல பலன் தராது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை வரலாம். தாய்க்கு நலமில்லை. இரண்டில் சூரியன்,சனி சேர்க்கையால் கையில்பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது விசேஷம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். சயன சுகம் உண்டு. (6,11) உரிய செவ்வாய் 3 இல் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (7,10) உரிய குரு 5இல் இருப்பது சிறப்பானது. திருமண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் புகழ் நிலைக்கும். பகை விலகும். (8,9) உரிய சனி இரண்டில் நல்ல பலன் தராது. பிதாவுக்குக் கூடாது. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசி நாதன் சந்திரன் கடகம் முதல் கன்னி வரை சஞ்சாரம் செய்வார். வார முற்பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. இரண்டுக்குரிய சூரியன் ராசியில் நல்ல பலன் தர மாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. (3, 12) உரிய புதன் 12 இல் நல்ல பலன் தர மாட்டார். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். சயனசுகம் இருக்காது. தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய சுக்கிரன் 12 இல் நல்ல பலன் தருவார். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி நிலவும். நண்பர்களால் உதவி கிடைக்கும். (5,10) உரிய செவ்வாய் இரண்டில் நல்ல பலனை தர மாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் பிரச்சினை வரலாம். மனதில் நல்ல எண்ணம் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7இல் உள்ள சனி ராசியில் இருப்பது நல்ல பலன் தராது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசி நாதன் சூரியன் 12 இல் நல்ல பலன் தரமாட்டார்.மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலன் இல்லை. தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். வீண் அலைச்சல் இருக்கும்.(2,11) உரிய புதன் 11 இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல காலம்.(3,10) உரிய சுக்கிரன் 11 இல் இருப்பது விசேஷம். உறவினர் மற்றும் அயலவர் உதவுவர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் அமைதி இருக்கும். (4,9) உரிய செவ்வாய் ராசியில் நல்ல பலன் தர வாய்ப்புக் குறைவு. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. (5,8) உரிய குரு 3இல் இருப்பது பாதகமானது. முதலீடுகளால் லாபம் குறையலாம். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,7) உரிய சனி 12இல் நல்ல பலன் தர மாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 10இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் புகழ் கிடைக்கும். (2,9) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலன் தர வாய்ப்புக் குறைவு. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இல்லை. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய செவ்வாய் 12இல் நல்ல பலன் தர வாய்ப்பு குறைவு. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். தாய் நலம். நல்ல குடியிருப்பு அமையும். (5,6) உரிய சனி 11 இல் இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். 12க்குரிய சூரியன் 11இல் இருப்பதால் சயன சுகம் உண்டு.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். முதலீடுகளால் லாபம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 11இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். (3,6) உரிய குரு ராசியில் இருப்பது பாதகமானது. உடல் ஆரோக்கியம் பாதிக்க லாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உறவினர் மற்றும் அயலவர் உதவர். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,5) உரிய சனி 10 இல் நல்ல பலன் தர மாட்டார். தனிப்பட்ட வாழ்வில் பிரச்சினை உண்டு. குடியிருக்கும் இடத்தில் அமைதி இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (9,12) உரிய புதன் 9இல் நல்ல பலன் தரமாட்டார். சயனசுகம் இல்லை. பிதாவுக்கு நலமில்லை. 10இல் சூரியன் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 10இல் சனி இருப் பது நல்லதல்ல.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 10இல் நல்ல பலன் தரவாய்ப்பு குறைவு.மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலனைத் தராது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (2,5) உரிய குரு 12 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது.(3,4) உரிய சனி 9இல் நல்ல பலனைத் தராது. உறவினர் மற்றும் அயலவர் உதவார். தகவல் தொடர்பு பாதிக்கலாம்.தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. (7,12) உரிய சுக்கிரன் 8 இல் நல்லபலன் தருவார். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். சயன சுகம் உண்டு. (8,11) உரிய புதன் 8 இல் நல்ல பலன் தருவார். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. முதலீடுகளால் லாபம் உண்டு. 10க்குரிய சூரியன் 9இல் நல்ல பலன் தர மாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொதுவாழ்வில் அமைதி இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11 இல் இருப்பது சிறப்பானது. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்ல பலன் உண்டு. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய் நலம். நல்ல குடியிருப்பு அமையும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (2,3) உரிய சனி 8 இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவா உதவார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (5,12) உரிய செவ்வாய் 9 இல் நல்ல பலன் தர மாட்டாது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் 7 இல் நல்ல பலன் தர மாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (7,10) உரிய புதன் 7இல் நல்ல பலன் தர மாட்டார். திருமண வாய்ப்பு குறைவு. பகைவரால் தொல்லையுண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் பிரச்சினை வரலாம். 9க்குரிய சூரியன் 8இல் இருப்பது நல்ல பலனைத் தராது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் நல்ல பலன் தர மாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 10 இல் இருப்பது நல்ல பலன் தர வாய்ப்புக் குறைவு. உறவினர் மற்றும் அயலவா உதவி செய்யார் . தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய செவ்வாய் 8 இல் இருப்பது நல்ல பலனைத் தராது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது.நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (5,10) உரிய சுக்கிரன் 6 இல் நல்ல பலன் தராது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் அமைதி இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,9) உரிய புதன் 6இல் நல்ல பலன் தருவார். பிதா நலம்.உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். 7இல் சூரியன், சனி சேர்க்கை திருமண வாய்ப்பைப் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி, 6 இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத் தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 9 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 7 இல் நல்ல பலன் தர வாய்ப்பு குறைவு. தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் பிரச்சினை உண்டு. உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,9) உரிய சுக்கிரன் 5 இல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். நல்ல இருப்பிடம் அமையும். (5,8) உரிய புதன் 5 இல் நல்ல பலன் தர மாட்டார். மன அமைதி இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. முதலீடுகளால் லாபம் குறையலாம். 7க்குரிய சூரியன் 5 இல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். 6 இல் சூரியன், சனி இருப்பது உடல் ஆரோக்கியம் உண்டு.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | புதன் சுக்கிரன் |
| | செவ்வாய் மகம் கேது<br>சுக்கிரன் திருவாதிரை ராகு<br>புதன் புனர்பூசம் குரு<br>சூரியன் பூசம் சனி<br>குரு சுவாதி ராகு<br>சனி பூசம் சனி | | சூரியன் சனி |
| | | | செவ் |
| | | குரு | கேது |

ஆடி 08முதல் ஆடி 14வரை

சந்திரன் கடகம் முதல் கன்னி வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8 இல் இருப்பது பாதகமானது. இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். பொது வாழ்வில் பிரச்சினை வரலாம் . (2,9) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய சுக்கிரன் 4இல் நல்ல பலன் தருவார். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். (4,7) உரிய புதன் 4 இல்இருப்பது விசேஷம். தாய் நலம். நல்ல குடியிருப்பு அமையும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும்.5க்குரிய சூரியன் 5 இல் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். (11,12) உரிய சனி 5இல் நல்ல பலன் தர மாட்டார்.சயன சுகம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை.

# அரசியல் அதிர்வுகள்

-போஸ்-

## பொதுத்தேர்தல் வேண்டாம்

நாட்டில் இப்போது பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவது தற்கொலைக்குச் சமமானதென ஜனாதிபதி கருதுகிறாராம். அதனால் தனது அரசாங்கத்தைப் பலப் படுத்துவதற்கு ஐ. தே. கட்சி, ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவற்றை அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என விரும்பும் அவர் அதற்கான தனது முயற்சிகளை இன்னும் கைவிட்டுவிடவில்லையாம்.

பொருளாதார மற்றும் சமாதான முன்னெடுப்புகளில் அரசாங்கம் பலத்த சவால்களை எதிர்நோக்குவதாலும், அரசாங்கத்தில் இணைந்துகொள்ள ஜே. வி. பி. மறுத்து விட்டதாலும் ஜனாதிபதி மனமுடைந்து போயுள்ளாராம்.

அரசுடன் இணைவதற்கு விரும்பும் ஐ. தே. கட்சி உறுப்பினர்களையும் மற்றும் இ. தொ. கா, ஸ்ரீ.ல. மு. காங்கிரஸ் கட்சிகளையும் அரசுடன் இணைத்துக் கொண்டுவிட்டால் சர்வகட்சி மாநாட்டில் கருத்தொரு மைப்பாட்டை ஏற்படுத்துவது சுலபமாகிவிடும் என்றும் இப்போது பெருகிவரும் அரசாங்கத்துக்கு எதிரான உணர் வுகளை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம் என்றும் ஜனாதிபதி தனக்கு நெருக்கமானவர்களுக்குச் சொல்லி யிருக்கிறாராம்.

## மனித உரிமை மீறல்கள்

வடக்கு - கிழக்கில் மனித உரிமை மீறல்களை கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கு அரசு மேற் கொண்டுவரும் நடவடிக்கைகள்பற்றி ராஜதந்திரிகளுக்கு விளக்குவதற்கு கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் ஏற்பாட்டில் கூட்ட மொன்று இடம்பெற்றதாம்.

இந்தக் கூட்டத்தில் முப்படையைச் சேர்ந்த அதிகாரி களுடன் பொலிஸ் அதிகாரிகள், இராஜதந்திரிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டார்களாம்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பொலிஸ் அதிகாரி யொருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கத்தை கொலைசெய்த குற்றவாளிகள் மிக விரைவில் கைதுசெய்யப்பட்டு விடுவார்கள் என்று அறிவித்தாராம்.

கொலையாளிகளில் இருவர் இராணுவத்தைவிட்டுத் தப்பியோடியவர்களாம். மட்டக்களப்பில் சோதனைச் சாவடியொன்றில் இவர்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்ட போது தாம் இராணுவத்தில் பணியாற்றியவர்கள் என்று கூறியதும் அவர்கள் தப்பிச்செல்ல அனுமதிக்கப்பட்டார் களாம். இந்த இருவரையும் கைதுசெய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனராம்.

இதுபோன்று பேசாலை தேவாலயத்தில் இடம்பெற்ற கொலைகளில் கடற்படை யினர் சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலைசெய்யப் பட்டமை தொடர்பில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் பற்றிய அறிக்கையில் (*University Teachers Human Rights Report*) கூறப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ள தாகவும் இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணை களில் விரைவில் திருப்பம் ஏற்படும் என்றும் இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதாம்.

## அமைச்சரவை மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு

அமைச்சரவைக்குள் கிளம்பியுள்ள பலமான எதிர்ப்புகளை அடுத்தே அமைச்சரவை மறுசீரமைப்பு பிற்போடப்பட்டுள்ளதாம்.

எதிர்க்கட்சிகளிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள விரும்புவோரை கவர்ந்திழுக்கும் வகையிலேயே அமைச்சரவையை மறுசீரமைக்க திட்டமிட்டிருந்தாராம் மஹிந்தர். ஆனால், மங்கள சமரவீரவும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் அமைச்சரவையை மாற்றி யமைப்பதற்கு தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகி றார்களாம்.

இது விடயத்தில் தனது அதிருப்தியை தெரிவிப் பதற்காக அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே கடந்தவாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்று வதைத் தவிர்த்துக்கொண்டாராம். ஆனால் அதைத் தொடர்ந்து நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட் டத்தில் அவர் கலந்துகொண்டாராம்.

திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கம் செயற்படவேண்டுமென்றும் அவ்வாறு இல்லாமல் மந்திரிசபையை மறுசீரமைப்பதன்மூலம் மட்டும் பலன் எதுவும் கிடைக்கப்போவதில்லை எனவும் அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே ஜனாதிபதியிடம் கூறியிருக் கிறாராம்.

இவ்வாறு தனது அமைச்சரவையில் காணப்படும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் மந்திரிசபையை மறுசீர மைப்பது மற்றும் ஐ. தே. க, ஸ்ரீ.ல. மு.காங்கிரஸ் மற்றும் இ. தொ. கா. அங்கத்தவர்களை அரசாங்கத்துடன் இணைத் துக்கொள்வது என்ற தனது திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்றே ஜனாதிபதி தீர்மானித்து இருக்கிறாராம்.

## சந்திரிகா நாடு திரும்புகிறார்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா விரைவில் நாடு திரும்ப இருக்கிறாராம். நாட்டில் இல்லாதபோதும் மஹிந்தரின் நிர்வாகத்தில் அதிருப்தி அடைந்துள்ள கணிசமான நாடாளுமன்ற உறுப் பினர்களுடன் தொடர்ந்து தனது தொடர்புகளைப் பேணி வருகிறாராம் அவர்.

திரைமறைவில் இருந்தாவது தமக்கு சரியான தலை மைத்துவத்தை வழங்கவேண்டும் என்று இந்த அதிருப்திக் குழுவினர் சந்திரிக்காவை கேட்டுள்ளார்களாம்.

அவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளதற்கு மத்தியில் சந்திரிக்கா நாடு திரும்புவதற்கு முடிவு செய்துள்ளாராம்.

அவரை எதிர்நோக்கியுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலைத் தொடர்ந்து அவருக்கு அதியுச்ச பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று அண்மையில் தயாரிக்கப்பட்ட புல னாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

## ஜி. எல். பீரிஸ்- ரணில் லடாய்

ஐ. தே. கட்சியிலிருந்து பேராசிரியர் ஜீ. எல். பீரிஸும் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ள இருக்கிறாராம். இந்தி யாவுக்குச் செல்லும் ஐ. தே. கட்சியின் தூதுக்குழுவில் இணைந்துகொள்ளுமாறு ரணில் விடுத்த அழைப்பையும் நிராகரித்து விட்டாராம் பீரிஸ். அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண் எதிர்க்கட்சித் த லைவருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் மிலிந்த மொர கொட கலந்துகொண்டமை பேராசிரியரை சினம்கொள்ள வைத்துவிட்டதாம். ஐ. தே. கட்சியின் சிரேஷ்ட உறுப் பினரான தன்னை ஒதுக்கிவிட்டு மிலிந்த மொரகொடவை குறிப்பிட்ட பேச்சில் இணைத்துக்கொண்டமை குறித்து தமது கடும் அதிருப்தியை ரணிலிடம் தெரிவித்துமி கொண்டாராம் பீரிஸ். முன்னாள் மகாவலி அமைச்சரின் மகனும் அரசாங்கத்தில் இணைவது உறுதியாகி விட்டதாம். இவருக்கு மங்கள சமரவீரவின் அமைச்சுப் பொறுப்புகள் சில வழங்கப்படவுள்ளதாம். இது மங் களமானவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளதாம். அதே வேளை, தனது கட்சி உறுப்பினர்களை மஹிந்தர் தனது பக்கத்துக்கு இழுத்தெடுப்பதுபற்றி ஐ. தே. கட்சித் தலைவரும் கொதிப்படைந்துள்ளாராம்.

## பிரபாகரன் பற்றி இன்ரர் போல்

இன்ரர்போல் எனச் சுருக்கமாக அழைக்கப்படும் சர்வ தேச பொலிஸ் துறை அண்மையில் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைதுசெய்வது சம்பந் தமான நடவடிக்கையை எடுக்கும் வகையில் 'சிவப்பு அறி விப்பு' எனப்படும் முக்கியமான அறிவிப்பை வெளி யிட்டுள்ளதாம்.

உலகின் முக்கிய 7 நாடுகளுக்கு பிரபாகரனைக் கைது செய்வது சம்பந்தமான இந்த அவசர அறிவிப்பு விடுக்கப் பட்டுள்ளதாம்.

இந்தியா, பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன், சிங்கப்பூர், நியூசிலாந்து, கனடா ஆகிய 7 நாடுகளின் அரசாங்கங்களை விடுதலைப்புலிகளின் தலைவரைக் கைது செய்வது தொடர்பில் அவதானமாகச் செயற்படுமாறு குறிப்பிட்டு சிவப்பு அறிவிப்பினூடாக இன்ரர்போல் கேட்டுள்ளதாம்.

---

# யுத்தத்தை..

( 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக்கொள்வது இலங்கைத் தரப்புக்கு மிகமிக அவசியமானதாக இருக்கின்றது.

மறுபுறத்தில், இத்தகைய யுத்தத்தைத் தாமதித்தால் அரசுத் தரப்பு இராணுவ ரீதியில் தன்னை வலுப்படுத்தி, ஸ்திரப்படுத்திக் கொண்டு விடும். பின்னர் மூளக் கூடிய பெரும் யுத்தத்தின்போது சர்வதேசத் தையுமே ஒன்று திரட்டிப் புலிகளுக்கு எதிராக நிறுத்துவதற்கு சந்தர்ப்பம் தரக்கூடிய ஐ.நா.செயலாளர் நாயகம் பதவி இலங்கை அரசின் ஆளுக்குக் கிடைக்கும் சாத்தியமும் - யுத்தத்தை தாமதிப்பதால் அதிகரிக்கும்.

ஈழத்தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகளை அடைவதற்கு யுத்தத்தை தவிர வேறு வழியில்லை என்ற இப்போதைய நிலைமையில் அதுதான் யதார்த்தம் என்பது புலிகளுக்கு நன்கு புரிந்தவிடயம். அப்படியிருந்தும் யுத்தத் தெரிவை எடுத்த எடுப்பில் பின்பற்றாமல் - அதுதான் ஒரே வழி என்பதைத் தெரிந்திருந்தும் - அதைத் தாமதமாக்கி வருகின்றது புலிகளின் தலைமை.

புலிகளின் பிரதேசத்துக்குள் இதுவரை இரகசியமாக ஊடுருவி, மறைந்திருந்து தாக்குதல் நடத்தி வந்த அரசபடைகள், இப்போது பகிரங்கமாக [illegible]

[illegible]

யுத்தம் தாமதம் [illegible] சாதகமானது [illegible] புலிகள் [illegible]

யுத்தத்தை ஆரம்பிப்ப[illegible] ரீதியில் தமக்கு எதிர்[illegible]

பாதிப்பையும், பின்னடைவையும் தந்து விடும் என்று கருதி அதைத் தவிர்த்து, தாமதிக்கச் செய்கிறார்களா புலிகள் என்று ஒரு கேள்வி எழுகின்றது.

இன்று, நாளை, இல்லாவிட்டால் விரைவில், பெரும் யுத்தம் வெடிப்பது தவிர்க்க முடியாதது என்றாகிவிட்டது. எப்போது யுத்தம் வெடித்தாலும் இந்த சர்வதேச நிலைப்பாடு என்ற சிக்கலுக்கு முகம் கொடுத்துதான் ஆக வேண்டும் என்ற யதார்த்தம் புலிகளின் தலைமைக்கும் தெரியாததல்ல. புலிகளின் போக்கின் நீதிக்கு - நியதிக்கு - தப்பான விளக்கங்கள், வியாக் கியானங்கள், அர்த்தங்கள் கற்பித்துக் கொண்டு, சர்வதேசத்தின் பெயரால் முன் வைக்கப்படும் நியாயங்களை - தத்துவ உபதேசங்களை - புலிகள் அதிகம் பொருட் படுத்துவதில்லை என்பது நமது அனுபவப் பாடம்.

ஆகவே, சர்வதேச நிலைப்பாட்டுக்கு அஞ்சி - அல்லது அதற்கு மதிப்புக் கொடுத்து - அதன் காரணமாக யுத்தத்தை புலிகள் தள்ளிப்போட்டு வருகின்றனர் என்று கருதுவதில் அர்த்தமில்லை.

எனவே, யுத்தம் ஒன்றே வழி என்பது புரிந்த பின்னரும் அதைப் புலிகள் தாமதித்து வருவது எதற்காக?

முழு அளவில் யுத்தம் ஒன்று மீண்டும் வெடிக்குமானால் இலங்கைத் தீவில் நான்கு முனைகளிலும் புதிய சமர்க்களங்கள் திறக்கப்படும்.

ஒன்று - வடமுனை.

இரண்டாவது - வன்னி முனை.

மூன்றாவது - திருகோணமலை.

நான்காவது - [illegible]

[illegible]

# சாத்தான்....

(2ஆம் பக்கத்தொடர்ச்சி)

பதில் அடங்கியுள்ளது.

தமிழ்த்தரப்பும் சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கும் சமஷ்டித் தீர்வு பற்றிய வழிகாட்டுதல் எதையும் தமது உரையில் தொட்டுக் காட்டத் தவறிய அவர் சிங்களத்தின் அதிகார அடக்குமுறை தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதையே தமது உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்ற ஆர்வம் - விருப்பம், மஹிந்தருக்கு இருக்குமானால் அத்தகைய தீர்வின் வெளித்தோற்ற வரையறைகளையாவது அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், அந்த விடயத்தை அப்படியே விட்டுவிட்டு -

* எந்தத் தீர்வும் நாட்டின் ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகிய விடயங்களை கேள்விக்கு உட்படுத்தாத வரையில்-
* தமிழரின் பங்களிப்பின்றி அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்பு முறை ஒரு சில மாற்றங்களுடன் தொடரக் கூடிய முறையில் - ஒன்றுபட்ட பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்றே அவர் கூறுகிறார்.

அதனால்தான் இத்தகைய தீர்வை, தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தமிழ்த் தேசம் அடித்துக் கூறுகிறது.

## இழுத்தடிப்பு

அப்படியானால் தீர்வு?

தீர்வென்ற பெயரில் வெறும் இழுத் தடிப்புகள் தான் தொடரப் போகின்றன.

"சர்வகட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவுக்கோ அல்லது நிபுணர்கள் குழுவுக்கோ இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை முன் வைப்பதற்கு கால வரையறை எதுவும் விதிக்கப்படவில்லை.

இந்தக் குழுக்களை நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்பவில்லையாதலால், அவற்றுக்குக் கால எல்லை எதனையும் விதிப்பதை அவர் தவிர்த்துக்கொண்டார்" என்று [illegible]

[illegible]

மீண்டும் யுத்த முனைக்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

முனைகளில் யுத்தத்தின் போக்கு தமக்கு சாதகமாக இருக்கும் என்று புலிகளின் தலைமை அதீத நம்பிக்கை கொண்டிருக் கிறது. போரியல் ரீதியில் அந்த எதிர்பார்ப்பு நியாயமானதே என்பதுதான் இராணுவ ஆய்வாளர்களின் கருத்தும் கூட.

மற்றைய ஒரேயொரு முனையில்தான் பின்னடைவுகளை - விரும்பாத பெறு பேறுகளை - எதிர்கொள்ள வேண்டி நேரலாம் என்று புலிகள் மதிப்பீடு செய்கின்றார்கள்.

அத்தகைய விளைவுகளை எதிர் கொண்டாலும், [illegible]

[illegible]

(அடுத்த வாரத்தில்)


[illegible]

# தந்தையின் இருதய நோய் தனயனுக்கு வருமா?

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

**கே- எனக்கு வயது 40. ஆண். கடந்த சில மாதங்களாக நடந்தால் கொஞ்ச நேரத்தில் களைப்பாக இருக்கின்றது. அப்படி இருக்கும் போது ஓய்வு எடுத்தபின் கொஞ்சத் தூரம் இன்னும் நடக்க முடிகின்றது. எனக்கு வேறு நோய்கள் ஏதும் இல்லை. எனது தந்தை இருதய நோயால் 50 வயதில் மரணமடைந்தார். இது என்ன நோய்? இருதய நோய் எனக்கும் வருமா?**

பதில்- நீங்கள் உங்கள் உடல் வாகு மற்றும் இரத்த அழுத்தம் பற்றிய விவரங்களை தர வில்லை. உங்களுக்கு வேறு நோய்கள் ஏதுவும் இல்லை என்கின்றீர்கள். ஆனால் - வேறு ஏதும் நோய்கள் இருக்கின்றனவா என்று பரிசோதனை செய்து கண்டறிந்து சொல்கின்றீர்களா அல்லது நீங்களாகவே எண்ணிச் சமாதானம் அடைந்துள்ளீர்களா?



நடக்கும் போது உங்களுக்கு ஏற்படும் களைப்பு - இருதய நோயாலும் ஏற்படக் கூடியது. இருதயத் தசைகளுக்கு ஒட்சிசனையும் போஷாக்கையும் எடுத்துச் செல்கின்ற CORONARY ARTERES என்கின்ற இரத்த குழாய்களில் கொழுப்பு - கொலஸ்திரோல் செறிவுகளினால் அடைப்பு ஏற்படும் போது இயங்குகின்ற இருதய தசைகள் ஒட்சிசன் கிடைக்காமல் ISHAEMIA என்கின்ற நிலையை அடைந்து இயங்க மறுக்கும். முக்கியமாக நாம் இருதயத்தை வேகமாக இயங்க வைக்கும் - வேலைகள், நடத்தல், படிகள் ஏறுதல் போன்ற காரியங்களை செய்யும்போது இந்த நிலை ஏற்பட்டு களைப்பு இருதய நோவு என்பன ஏற்படலாம். இதனை ISHAEMIC HEART DISEASE அல்லது ANGINA என்று சொல்வார்கள்.

மேலும் உங்கள் தந்தையாருக்கு இருதய நோய் இருந்தபடியால் உங்களுக்கு இருதய நோய் ஏற்படும் சந்தர்ப்பமும் அதிகம். நடக்கும் போது ஏற்படும் களைப்புக்கு - இருதய நோய் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இரத்த சத்து (HAEMOGLOBIN) குறைவு, தைராய்ட் சுரப்பு கோளாறு. அதிகரித்த எடை, இருதய தசைகளின் வீக்கம் என்பவை கூட உங்கள் களைப்புக்கு காரணமாக இருக்கலாம்.

நீங்கள் முதலில் ஒரு பொது மருத்துவ விசேட நிபுணர் (PHYSICIAN) ஒருவரை கலந்தாலோசித்து உங்கள் குணம், குறிகள், இருதயம் சம்பந்தப்பட்டனவா என்பதை அறிந்து அதன் பின் இருதய நோய் நிபுணரின் [redacted] ஆலோசனை பெற வேண்டும். இருதய நோய் இல்லாவிடில் உங்கள் மருத்துவ நிபுணரே உங்கள் சிகிச்சையை கையேற்பார்.

**கே - ஆண் வயது 20. தொடை இடுக்குகளில் அரிப்பாக இருக்கிறது. சிகிச்சை கூறவும்.**

பதில் - உங்களுக்கு ஏற்பட்டுள்ளது RING WORM OF THE GROINS என்கின்ற பங்கசு தொற்று. அடிக்கடி வியர்வை ஏற்படுகின்ற உடற் பகுதிகளில் இப்படியான பங்கசு தொற்று ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். இதற்கு முதலில் PERSONAL HYGEINE என்கின்ற சுய சுகாதார முறைகளை கைக்கொள்ள வேண்டும். தினமும் குளித்தல் (தினமும் இரு தடவைகளாவது குளித்தல் விரும்பத்தக்கது) உள்ளாடைகளை நன்றாகத் துவைத்து நல்ல வெய்யிலில் உலர்த்தல் என்பவை முக்கியமான சுகாதார வாழ்க்கை முறைகள்.

இப்பொழுது நல்ல வீரியமுள்ள பங்கசு கொல்லிகள் மருத்துவத் துறையில் கிடைக்கின்றன. முக்கியமாக வெளிப்பூச்சு மருந்துகளுடன் உட்கொள்ள வேண்டிய மருந்துகளையும் சேர்த்து உபயோகிக்க வேண்டும். இந்த பங்கசு தொற்று சருமத்தின் கீழும் தனது வேர்களை கொண்டிருப்பதால் முதற் தடவை தொற்று மாறியது போன்று தோற்றம் அளித்தாலும் - தொடர்ந்து உள்ளே எடுக்கும் மருந்தை ஒரு மாதமாவது உபயோகிப்பது விரும்பத்தக்கது.

**கே-ஆண் வயது 20. தினமும் காலைக்கடன் முடித்த பின்னர் கூட - அடிக்கடி மலம் கழிக்க வேண்டியுள்ளது. வாயுப் பிரச்சினையும் உள்ளது. பரிகாரம் கூறவும்.**

பதில்- காலையில் மட்டும்தான் இந்த பிரச்சினையா அல்லது தொடர்ந்து பகல் நேரம் முழுவதும் இந்தப் பிரச்சினையா என்பது பற்றி நீங்கள் குறிப்பிடவில்லை. என்றாலும் அடிக்கடி மலம் கழிப்பது என்பது பரிசோதிக்கப்பட வேண்டிய விடயம். முதலில் நீங்கள் மலப்பரிசோதனை ஒன்று செய்ய வேண்டும். குடலில் - WORMS என்கின்ற ஒட்டுப்புழுக்கள், அல்லது அமீபா தொற்றுக்கள் இருந்தாலும் இப்படி நேர்வதுண்டு. அதுதவிர காரசாரமான வாசனைத்திரவியங்கள், வினாகிரி சேர்த்த உணவு வகைகள் உண்போருக்கு வாயுக் குழப்பமும் அதனால் அடிக்கடி மலம் கழிக்கும் வழக்கமும் ஏற்படலாம். இதுதவிர ஒரு சிலருக்கு NERVOUS STOMACH அல்லது IRRITABLE BOWEL SYNDROME மனோநிலை சம்பந்தப்பட்ட நோய் ஏற்படுவதுண்டு. அநேகமாக வாழ்க்கையை பதற்றம், எதிர்பார்ப்புக்கள் போன்ற இறுக்க நிலைகளில் வாழ்பவர்களுக்கு இந்த அடிக்கடி மலம் கழிக்கும் நிலை ஏற்படலாம். இப்படியானவர்கள் மன இறுக்க நிலை தளர்த்தும் மருந்துகளை எடுப்பதன் மூலம் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும்.

மேலும் தொடர்ந்து இப்படியான நிலை இருக்குமானால் ஒரு சத்திர சிகிச்சை வைத்தியரின் ஆலோசனையுடன் COLONOSCOPY என்கின்ற மல வாசல் மூலம் குழாய் செலுத்தி குடல் சோதிக்கின்ற பரிசோதனை மற்றும் BARIUM ENEMA என்கின்ற மலக்குடல் பெருங்குடல் என்கின்ற உறுப்புகளை எக்ஸ்றே படம் எடுக்கும் பரிசோதனையையும் செய்வித்து கொள்வது விரும்பத்தக்கது.

**கே - பெண் வயது 28. எனக்கு கை கால்களில் நடுக்கம் ஏற்படுகின்றது. மற்றவர்களுக்கு தெரிகின்ற வகையில் நடுக்கம் வருவதில்லை. ஆனால் பதற்றமான சூழ்நிலையில் நடுக்கம் அதிகம். எழுத முடியாத அளவு, அதாவது மற்றவர் முன்னிலையில் கையொப்பம் இட முடியாதளவு நடுக்கம் ஏற்படுகிறது. பரிகாரம் கூறவும்.**

பதில் - நரம்பு மண்டலங்களின் கட்டுப்பாடில்லாத கை விரல்களில் அசைவுகளை TREMORS அல்லது நடுக்கம் என்பர். எல்லோருக்கும் இந்தவகை நடுக்கம் இருக்கத்தான் செய்கின்றது. மிகமிக குறைந்த அளவிலும் வித்தியாசமான தசை இறுக்கங்களின் காரணமாகவும் இது எல்லோருக்கும் இருக்கத்தான் செய்கின்றது. உதாரணமாக கைகளை நன்றாக முன்னால் நீட்டிச் சிறிது நேரம் அப்படியே வைத்திருங்கள். ஒரு சில நிமிடங்களில் கைவிரல்கள் மெதுவாக நடுங்குவதை உணர்வீர்கள். இந்த நடுக்கம் கையெழுத்துப் போடுவதற்கே கஷ்டம் தரக்கூடிய நிலையில் ஒரு தேநீர் கோப்பையை கையில் எடுத்து குடிக்க முடியாத நிலையில் இருக்குமானால் இது ஒரு நோயாக கருதப்படுகின்றது. மன இறுக்கம், (STRESS), எதிர்பார்ப்பு (ANXIETY) தசைச் சோர்வு (FATIGUE) போன்றவை ஏற்படும் போது கைவிரல்கள் நடுங்க ஆரம்பிக்கும். இது தவிர மதுபானம் அதிகமாக உபயோகிப்பவர்கள், தைராய்ட் சுரப்பி பிரச்சினை உள்ளவர்கள், அதிகளவில் கோப்பி தேநீர் அருந்துபவர்களுக்கு கூட கைவிரல்களில் நடுக்கம் ஏற்படலாம். எழுத வேண்டும் அல்லது விரல்களைக் கொண்டு ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணி - அந்தச் செயலை செய்ய ஆரம்பிக்கும் போது கைவிரல்களில் நடுக்கம் ஏற்பட்டால் அதனை INTENTION TREMOR என்பார்கள்.

மூளையின் ஒரு பகுதியான CEREBELLUM அல்லது இந்தப்பகுதியின் தொடர்புகள் பாதிக்கப்பட்டால் இவ்வகை நடுக்கம் ஏற்படும். MULTIPLE SCLEROSIS போன்ற நோய்களின் நிமித்தம் குடிப்பழக்கம், அதிகளவு தூக்கமாத்திரை பழக்கம் என்பவற்றால் இவ்வகை நடுக்கம் ஏற்படுகின்றது. தகுந்த நரம்பியல் நிபுணரின் ஆலோசனைகளை பெற்றுதீவிர சிகிச்சை பெறுவதன் மூலம் இவ்வகை நடுக்கத்தை ஓரளவு குறைக்க முடியும்.

**கே- வயது 20 பெண் எந்த நேரமும் தும்மல் வருகின்றது. ஆரம்பத்தில் தூசியின் ஒவ்வாமையால் தான் தும்மல் வருவதாக எண்ணினேன். ஆனால் இப்பொழுது இரவு பகல் பாராது எந்த நேரமும் தும்மல் வருகின்றது. இது ஏதாவது நோயின் ஆரம்பமா பரிகாரம் கூறவும்.**

பதில் - மூக்குத் துவாரத்துக் கூடாக பார்க்கும் போது TURBINATOR என்றொரு சவ்வு இருப்பது தெரிய வரும். இந்தச் சவ்வு நாம் சுவாசிக்கும் காற்றை எமது உடல் வெப்பநிலைக்கு உயர்த்த உதவுவதாக சில வைத்தியர்கள் நம்புகின்றார்கள். ஆனால் ஒரு சிலருக்கு இந்தச் சவ்வு கொஞ்சம் அதிகம் வளர்ந்திருப்பதால் காற்று அதன் மேலாக போகும் போது அந்தச் சவ்வின் மேற்பரப்பில் உள்ள உணர்வு நரம்புகள் தூண்டப்பட்டு தும்மலை உருவாக்கும். காலம் செல்லச் செல்ல இந்தச் சவ்வு மேலும் வளர்ந்து சாதாரண சுவாசத்தை தடை செய்யும் அளவுக்கு பெரிதாகலாம்.

ஒவ்வாமை உங்கள் தும்மலுக்கு காரணமாக இல்லாத பட்சத்தில் இந்தச் சவ்வு தும்மலுக்கு காரணமாக இருக்கலாம். எனவே ENT SPECIALIST என்கின்ற காது மூக்கு தொண்டை நோய் வைத்திய நிபுணரின் ஆலோசனையைப் பெறவும்.

**கே - எனது மகளுக்கு தலையில் பேன் தொற்று உண்டு. எத்தனை முறை பலவகை மருந்துகள் வைத்தாலும் திரும்பத்திரும்ப தலையில் பேன் வருகின்றது. பரிகாரம் கூறவும்.**

பதில் - பேன் தொல்லை என்பது ஒரு சிக்கலான பிரச்சினை. மனிதரின் தலையில் மட்டும் தான் HEAD LICE என்கின்ற இந்த தலைப்பேன் - PEDICULUS HUMANUS CAPTIS என்கின்ற ஒட்டுண்ணியால் ஏற்படுகின்றது.

மனித இரத்தத்தை மட்டுமே நம்பி வாழும் இந்த பேன் - மனித இரத்த உணவு கிடைக்காவிடில், பட்டினி கிடந்தே 24 மணிநேரத்தில் இறந்து போகும். தலைமயிரில் 'ஈர்' என்கின்ற முட்டைகளை இட்டு ஒரு வாரத்தில் அவை பொரித்து அடுத்த ஒரு வாரத்தில் புதிதாக பொரித்து வந்த பெண் பேன்கள் முட்டையிட தொடங்குவதால் தான் பேன் பிரச்சினை பெரிதாக உள்ளது. முப்பது நாள் வாழ்நாள் உள்ள இந்த பேன்கள் கிட்டதட்ட 100 முட்டைகளையாவது தமது வாழ்நாள் காலத்தில் இடுவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இனி உங்கள் விஷயத்தைக் கவனிப்போம். பேன்களுக்கு நிறைய மருந்துகள் உள்ளன. கைமருந்துகள் கூட இருக்கின்றன. ஆனால் நான் முன்னர் இந்த பேன்கள் பற்றி கூறிய விஷயங்களை கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் சிகிச்சையையும் ஆரம்பிக்க வேண்டும். பேன் மருந்து வைத்து, வளர்ந்த பேன்களை கொன்ற பின்னர் தலை மயிரில் 'ஈர்'கள் இல்லாதவாறு பராமரித்துக்கொள்ள வேண்டும். 'ஈர்' கோதி கொண்டு ஈர்களை வாரி முட்டைகள் பெரிதாகாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் - ஒரு வாரம் கழித்து இன்னொரு தடவை பேன் மருந்து வைத்து புதிதாக வளர்ந்துள்ள பேன்களை கொல்ல வேண்டும்.



இவ்வாறு மூன்று வாரம் சிகிச்சை பெறவேண்டும். அத்துடன் ஒரு சிலருக்கு தலையில் பேன் இருந்தாலும் அவற்றினால் பிரச்சினை வெளியில் தெரிவதில்லை. எனவே வீட்டில் உள்ள மற்றைய அங்கத்தினரும் பேனுக்கு சிகிச்சை பெறவேண்டும்

முக்கியமாக பேன் தொற்று உள்ள மகளோடு படுக்கையில் தூங்குகின்ற தாய், தகப்பன், சகோதரர்கள் இந்த சிகிச்சை முறையை கட்டாயம் கைக்கொள்ள வேண்டும். இப்படி சரியான முறையில் பேன் சிகிச்சையை கைக்கொண்டால் நிச்சயம் இந்த தொல்லையில் இருந்து விடுதலைப் பெறுவீர்கள்.

## அரசு-இ.தொ.கா. இடையே இழுபறி தொடர்கிறது...!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணைவது குறித்த பேச்சுக்கள் இன்னும் இழுபறி நிலையிலேயே இருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முத்து சிவலிங்கம் எம்.பி. கடந்த வாரம் பிரதி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்வதாக இருந்தது. அதுவும் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து அழைப்பு வருமென முத்து சிவலிங்கம் எம்.பி. எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இருந்தும் தமக்கு வழங்கப்படவுள்ள பிரதி அமைச்சர் பதவி என்னவென்பது அவருக்கே தெரியாமலிருந்தது.

ஜனாதிபதியின் சகோதரரும் அவரது சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ இ.தொ.க. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டு வந்தார்.

இ.தொ.கா., அரசாங்கு ஆதரவளிப்பதில் எது வித பிரச்சினையும் இருக்கவில்லை. சில முக்கிய உறுப்பினர்கள் அரசுடன் இணைவதை விரும்பாவிட்டாலும் தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் முடிவை வேண்டாவெறுப்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அதே வேளை, இ.தொ.கா.வுக்குள் யாருக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்குவது என்பது குறித்தும் குத்துவெட்டுக்கள் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இ.தொ.கா. வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சையும் சுகாதார போஷாக்கு நலன்புரி பிரதி அமைச்சுப் பொறுப்பையும் தரும்படி கோரிக்கை விடுத்திருந்தது எனவும் இந்த அமைச்சுக்களை வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே இழுபறி நிலை தொடர்வதாகவும் கூறப்படுகின்றது.

வடிவேல் சுரேஷ் இ.தொ.கா.விலிருந்து ஆரம்பத்திலேயே விலகி அரசுடன் இணைந்தார். அவருக்கு சுகாதார போஷாக்கு நலன்புரி பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. [illegible] வடிவேல் சுரேஷ் அரசுடன் இணைவதற்கு சூத்திரதாரியாகவிருந்தார். [illegible] நலன்புரி பிரதி அமைச்சுப் பொறுப்பை இ.தொ.கா. கோருகின்றதென இ.தொ.கா. விலுள்ள அதிருப்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.


அரசுக்கும் இ.தொ.கா.வுக்குமிடையில் அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பான இழுபறி முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. மேலும் இ.தொ.காவிலுள்ள இவர் ஆடி மாதத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பது நல்லதல்லவென இப்போது சாக்குபோக்கு கூறிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் அமைச்சர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகிறது என ஜே.வி.பி. போர்க்கொடி தூக்கியுள்ளது. இந்நிலை நீடிக்குமானால் இ.தொ.கா.வுக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் கிடைக்காமலும் போகலாமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.




# மீதியை அனுப்பிவையுங்கள்

அரச பாடசாலை ஒன்றிற்கு வருகை தந்திருந்த இன்ஸ்பெக்டர், ஆறாம் வகுப்பு மாணவர்களிடம் "இராமாயணம் படித்திருக்கிறீர்கள்தானே, சிவதனுசை முறித்தது யார்?" என்று கேட்டார்.



அதற்கொரு மாணவன், "சார் அதை யார் முறித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் முறிக்கவில்லை." என்று பதிலளித்தான்.

அதிர்ச்சியுற்ற இன்ஸ்பெக்டர், ஆசிரியரைப் பார்த்து "இதுதான் நீங்கள் பாடம் சொல்லிக் கொடுக்கிற இலட்சணமா?" என்று கேட்டார்.

"அந்தப் பையன் பொல்லாதவன். அவன்தான் அதனை உடைத்திருப்பான். அவன் உண்மையை ஒத்துக்கொள்ளமாட்டான்." என்றார் ஆசிரியர்.

இதனை அடுத்து இன்ஸ்பெக்டர் தலைமை ஆசிரியிடம் சென்று நடந்தவற்றை எல்லாம் விவரமாகக் கூறினார்.

அதைக் கேட்டு பதற்றமடையாமல் "இந்தச் சின்ன விஷயத்தை ஏன் பெரிது படுத்துகின்றீர்கள்? உடைந்தது உடைந்ததுதான். அடுத்தமுறை மானியத்தொகை அனுப்பும்போது ஒரு புதிய வில்லின் விலையை கழித்துக்கொண்டு மீதியை எமக்கு அனுப்பிவைத்தால் போதும்" என்றார்.

## எலெக்ரிக் கார்



சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் நடந்த கண்காட்சியில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த எலெக்ரிக் கார் இது. இதனை ஒருவர் பார்வையிடுகிறார்.

## தண்ணீருக்குள் இசை...!



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் தண்ணீருக்கடியில் நடைபெற்ற இசை நிகழ்வு ஒன்றின்போது இசைக் கலைஞர் ஒருவர் 'கிற்றார்' வாசிக்கின்றார்.

## சகதியில் குளிக்கும் போட்டி



அமெரிக்காவின் டப்ளின் நகரில் நடந்த 'ரெட் றெக்' விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட ஒருவர், சகதியில் குதித்து போட்டியை ஆரம்பித்து வைக்கின்றார்.

## த.த்.து.வ.ம்

**பணம்:**
இது உன்னிடம் அதிகமாக இருந்தால் நீ உன்னை மறந்து விடுவாய். ஆனால், இது உன்னிடம் இல்லாவிட்டால் மற்றவர்கள் உன்னை மறந்துவிடுவார்கள்.

**ஆயிரம்:**
என்னதான் ஆயிரமாக இருந்தாலும் ஆயிரத்து ஒன்றை விட குறைவுதான்.

**இதயம்:**
நீ உறங்கும்போது இது விழித்திருக்கும். ஆனால், இது உறங்கினால் உன்னால் விழிக்க முடியாது.

**ரெயிலர்:**
இவர் கையை, கழுத்தை வெட்டினாலும் - இதற்காகக் கைது செய்யப்படுவதில்லை.

**கைகள்:**
இதில் மலர்கள் இருந்தால் நீ செல்லுமிடம் கோயில், இதில் விலங்கிருந்தால் நீ செல்லுமிடம் ஜெயில்.

## குறும்பு




## சிரியுங்கள்



## பொம்மை அலங்காரம்



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் 'ஹெயர் வேல்ட் - 2006' போட்டியில் கலந்து கொண்ட அழகி ஒருத்தி தனது கை நகங்களை அழகிய பொம்மைகளால் அலங்கரித்துள்ளார்.

## ஆபத்தான கட்டம்



**ஒருவர்:** "சார், உங்க அம்மா ஆபத்தான கட்டத்தை தாண்டிட்டாங்க...!"

**மற்றவர்:** "இதை என் மனைவிகிட்ட சொல்லிடாதீங்க...! பின்பு அவளின் நிலைமை ஆபத்தான கட்டத்துக்கு போயிடும்."

# யாழ். கம்பர்மலை வித்தியாலயம் – கொம்மந்தறை
# பழைய மாணவர் சங்கம் – ஐக்கிய இராச்சியம் வழங்கும்

**லண்டன் பூபாள ராகங்கள் – 2006 சிறப்பு மலர் 22 – 07 – 2006**



## வித்தியாலய அதிபர்

கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்படும் கலை, கலாசார, தமிழர் பாரம்பரிய நிகழ்வுகளின் தொகுப்பான 'பூபாள ராகங்கள்' நிகழ்வு இவ்வாண்டும் சிறப்பாக நிகழ்வதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

பாடசாலையின் தேவைகருதி கல்விசார் செயற்பாடுகள், இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு வேண்டப்படும்போது உதவிபுரியும் பழைய மாணவர் சங்கம் இவ்வாண்டு பாடசாலைக்கு பெறுமதி மிக்க காணித்துண்டை, பெருமளவு பணம் கொடுத்து வாங்கித் தந்துள்ளமை போற்றுதற்குரியதாகும்.

யா/கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பணிகள் மேலும் சிறக்க அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு.சுப்பிரமணியஐயர் வரதராசசர்மா (SLPS-I)
அதிபர் கம்பர்மலை வித்தியாலயம்.



## கௌரவ விருந்தினர்

புலம்பெயர்ந்த தமிழ் கலைஞர்கள், இலக்கியவாதிகள் மன்றங்கள்/சங்கங்கள் வைத்துக்கொண்டு கடந்த 25வருடங்களுக்கு மேலாக பல கலைவிழா நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். இது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆனாலும் கலைவிழாவை இப்படித்தான் நடத்த வேண்டும் என்ற ஒரு தரத்தினை தமக்குள் ஏற்படுத்திக்கொண்டு 'பூபாள ராகங்கள்' என்ற பெயரில் வருடாவருடம் கலைவிழா நடத்தி தமிழ் கலை, இலக்கிய, நாடகத்துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளவர்கள் யாழ்.கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர்.

சட்டத் தரணி சி.செல்வராஜா (செல்வராஜா அன்கோ)
(முன்னாள் கவுன்சிலர் நாடாளுமன்ற வேட்பாளர்)



## சிறப்பு விருந்தினர்

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பல கலை நிகழ்ச்சிகளை பல நாடுகளில் நடத்தினாலும் அங்கே அழைக்கப்படுகின்ற கலைஞர்களில் பெரும்பாலானவர்கள் இந்திய மண்ணில் (குறிப்பாக தென்இந்தியாவில்) இருந்து அழைக்கப்பட்டு தங்கம், வைரம், பணநோட்டுக்களால் ஆராதனை செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகின்றார்கள்.

இவற்றிலிருந்து மாறுபட்டு நம்மண்ணின் கல்வி, கலை, கலாசாரம், இலக்கியம், நாடகம் சம்பந்தப்பட்ட கலைஞர்களின் திறமைகளை உலகுக்கு எடுத்துக்காட்ட எங்கள் மண்ணின் கல்விமான்களையும் கலைஞர்களையும் கொண்டே எதுவித சுயநல நோக்குமின்றி அரங்கம் நிறைந்த மக்கள் வெள்ளத்தோடு ஆறு ஆண்டுகள் திறம்பட நடத்தி வெற்றி கண்டுள்ளமையை மனமாரப் பாராட்டுகின்றேன்.

ஈழத்துக் கலைஞன். நாகமுத்து இரகுநாதன்.

## நிகழ்ச்சி நிரல்

தலைவர்: திரு.இ.இரகுநாதன் (தலைவர், ப.மா.ச. (ஐ.இ)
இடம்: Greenford Assembly Hall,
Ruislip Road, Green ford. Middx, UB69QN.
காலம்: 22-07-2006 சனி மாலை 4.30மணி.

**நிகழ்வுகள்**

*** நாட்டியக் கலையரங்கம்**
ஐரோப்பாவின் முன்னணி நடன ஆசிரியை ஸ்ரீமதி.ராகினி ராஜகோபாலின் 'நாட்டியாலயா' நடனப்பள்ளி மாணவிகள்.

*** வழக்காடு மன்றம்**
குற்றவாளிக் கூண்டில் புலம்பெயர்ந்த தமிழர்கள் .

***மலைகள் வழி மறித்தால்.... நாடகம்.**
தமிழ் நாடக உலகில் கடந்த மூன்று தசாப்த காலமாக தொடர்ந்து இயங்கி வரும் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் லண்டன் தமிழ் நாடகப்பள்ளி மாணவர்கள். நெறியாள்கை க.பாலேந்திரா.

*உலகப் புகழ் பெற்ற தமிழ் அறிவிப்பாளர் B.H.அப்துல் ஹமீத் நடத்தும் ரசிகர்களுக்கான போட்டி நிகழ்ச்சி 'தமிழுடன் இரண்டு நிமிடங்கள்'

* ஐரோப்பாவின் முதல் தமிழ் பெண் சுரத்தட்டு வாத்தியக் கலைஞர்கள் துஷி தனு செல்வத்துரை சகோதரிகளும் நண்பர்களும் இணைந்து வழங்கும் 'கானமழை' இன்னிசை நிகழ்வு.

சிறப்புப் பாடகர் ஈழத்துசௌந்தர்ராஜன் என்.ரகுநாதன்.

நிகழ்ச்சித் தொகுப்பு.
B.H. அப்துல்ஹமீத்/ ஆனந்தராணி பாலேந்திரா/ மகாலிங்கம் சுதாகரன்

மேலதிக விபரங்களுக்கு: +(0)2085690458/ +(0)2089330920/ +(0)7947471529.





இருப்பவர்கள் (இ.வ) ம.சுதாகரன் (விழா அமைப்பாளர்), இ.இரகுநாதன் (தலைவர்), திருமதி.கு.நித்தியானந்தன் (கணக்காய்வாளர்), திருமதி.பு.தியாகலிங்கம், திருமதி. இ.துரைராசா (காப்பாளர்), சி.துரைராசா (காப்பாளர்)
நிற்பவர்கள் (இ.வ) அ.ரவீந்திரன் (கணக்காய்வாளர்), செ.பாஸ்கரன் (மக்கள் தொடர்பாளர்), ம.பரந்தாமன், து.சுதர்சன் (பொருளாளர்), வை.மகேஸ்வரன், இ.கஜேந்திரன் (மக்கள் தொடர்பாளர்)



## விழா அமைப்பாளர்

தாயகத்தில் 1997ஆம் ஆண்டு என் அன்புக்கினிய சகபழைய மாணவர்களின் துணையுடன் முதலாவது 'பூபாளராகங்கள்' நிகழ்வை மிகவும் வெற்றிகரமாக விழா அமைப்பாளராய் இருந்து நடத்தினேன். அந்த பசுமையான நினைவுகள் என்றும் மனதை விட்டு அகலவில்லை. அவ்விழாவில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் பரிசாக லண்டனில் 2000ஆம் ஆண்டிலிருந்து ஆறு 'பூபாளராகங்கள்' நிகழ்வுகளை நடத்தி முடித்து ஏழாவது நிகழ்வு இப்போது நடக்கின்றது.

ஒழுங்கான திட்டமிடல், சரியான சிந்தனை, நேரிய பாதை, அர்ப்பணிப்பு மிக்க சேவை இவை என்றுமே தோற்பதில்லை.

மகாலிங்கம் சுதாகரன், விழா அமைப்பாளர்
பூபாள ராகங்கள், சர்வதேச ஒருங்கிணைப்பாளர்.

## வித்தியாலய பிரதி அதிபர்

கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் நடத்தப்படும் கலை நிகழ்வு 'பூபாளராகங்கள்' இவ்வாண்டிலும் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலையின் பல்வேறு தேவைகளையும் உடனுக்குடன் நிறைவேற்ற 'பூபாளராகங்கள்' வழியமைக்க ஆண்டவர் ஆசிகள் நல்குவாராக.

பிரதி அதிபர்.
இ.வீ.தேவராஜா
யாழ்.கம்பர்மலை வித்தியாலயம்.



## தாயகத்தில் இருந்து பழைய மாணவர் சங்கத் தலைவர்

யாழ்/கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கியராச்சிய கிளையினர் தொடர்ந்து 7ஆவது தடவையாக சிறப்புடன் வழங்கும் 'பூபாளராகங்கள்' நிகழ்வு தாயகத்தில் கொம்மந்தறை கம்பர்மலை மக்களையெல்லாம் பெருமையடையச் செய்திருக்கிறது.

தமிழர் தம் கலை, கலைசாரம், பண்பாடு, தாயகப்பற்று புலம்பெயர்ந்த நாடுகளிலும் வளர்க்கப்படுகின்றன. என்பதற்கு பூபாளராகங்கள் ஓர் முன்னுதாரணம். அதன் பெருமைக்குரியவர் எமது ஐக்கிய ராச்சியம் கிளையின் நிர்வாக உறுப்பினர்களே ஆவர்.

இ.ரமேஸ் (தலைவர்)
பழைய மாணவர் சங்கம்,
கம்பர்மலை வித்தியாலயம்.

## பிரதான அனுசரணையாளர்

கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக்கிளை ஏழாவது ஆண்டாக நடத்தும் 'பூபாளராகங்கள்' நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் சந்தோசமடைகின்றேன்.

மொழி, கலை, கலாசாரம் என்பவற்றை முன்நிறுத்தி நல்ல பணிக்காக நடத்தப்படும் 'பூபாவராகங்கள்' நிகழ்வின் வளர்ச்சி யாருமே எதிர்பார்க்காதது. அனைவரும் போற்றிப் புகழும் நிலைக்கு இந்த நிகழ்வை கொண்டுவந்த பெருமை பூபாளராகங்கள் விழாக்குழுவை சாரும். இன்று உலகப் புகழ்பெற்றுவிட்ட 'பூபாளராகங்கள்' நிகழ்வுக்கு எமது நிறுவனம் தொடர்ந்தும் பிரதான அனுசரணை வழங்கி வருகிறது.

அருண்
நிர்வாகி
Wilson Estate Agents Ltd
(Croydon)



## இலங்கை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்

'பூபாளராகங்கள்' வருடாந்த கலை நிகழ்ச்சி மூலம், பழைய மாணவர்கள் கம்பர்மலை வித்தியாலயத்தை பரவலாக அறிமுகப்படுத்தியதோடு, ஈழத் தமிழரது பாரம்பரிய பண்பாடுகளைப் பேணுவதிலும், வளர்ப்பதிலும் சிறந்த பங்களிப்பை வழங்கி வருவதை கடந்த ஆண்டு நேரில் காணக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

ஓய்வில்லாமல் ஓடியோடி உழைக்கும் அமைப்பாளர் திரு.சுதாகரன் உட்பட 'பூபாளராகங்கள்' வெற்றிக்குப் பங்களிப்பு நல்கும் எல்லோரும் பாராட்டுகளுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். கொம்மந்தறை கம்பர் மலைவித்தியாலய ஐக்கிய இராச்சிய பழைய மாணவர்களின் பங்களிப்பு தொடரட்டும்.

உடுவை எஸ்.தில்லைநடராசா.
மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல, இலங்கை.



## நாட்டியாலய அதிபர்

இந்த ஏழாண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் கொம்மந் தறையில் உள்ள பாடசாலை இங்கிருந்து 'பூபாள ராகங்கள்' நிகழ்ச்சியின் மூலம் சேர்த்து அனுப்பப்படும் நிதியினால் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருப்பதை அறியும்போது மனம் மகிழ்ச்சியடையும். இந்த வளர்ச்சியில் என் பங்களிப்பும் சேர்ந்துள்ளது என்ற நிறைவு எனக்கு.

எனக்கு ஓர் ஆசை, அந்தக் கம்பர்மலை பாடசாலையில் அங்குள்ள மக்கள் முன்னிலையில் எங்கள் நடன நிகழ்ச்சி நடைபெற வேண்டும். அந்த நாள் என் வாழ்வில் ஒரு பொன்னாள். எண்ணம் ஈடேறுமா?

ராகினி ராஜகோபால்.

SPONSORED BY:- WILSON ESTATE AGENTS LTD - LONDON

# எனது அன்புக்குரிய சகோதரிகளே!



பொது இடங்களில் எம்மில் அநேகருக்கு எப்படி நடந்து கொள்வது என்பதே தெரிவதில்லை. குறிப்பாக போக்குவரத்துப் பஸ்களில் பெண்கள் சிலர் கூட்டமாக, தம் உற்றார் உறவினருடன் ஏறிவிட்டால், ஓகோவென்று இரைச்சல் கூடிவிடும். ஒரு கோடியிலிருந்து மறுகோடியில் உள்ளவரை பெயர் சொல்லி அழைத்து கூப்பாடு போடுவார்கள்.

இவர்கள் சத்தமிட்டு அழைப்பது வயது வந்த இளம் பராயத்தினராக இருந்தால், அவர்களின் நிலை தர்மசங்கடமாகிவிடும். இவர்களில் பலர் கல்வியறிவற்றவர்களாகவே இருப்பதுவும் இதற்கு ஒரு காரணம்.

பொது வைபவங்களில் கலந்துகொள்ளும் போதும் கூட, அநாகரிகமாக நடந்து கொள்கிறார்கள். பல உயர் அதிகாரிகள் பங்கு கொள்ளும் இத்தகைய வைபவங்களில் நாமும் சற்று நாகரீகமாக நடந்து கொள்ள வேண்டாமா?

சரி, படிப்பறிவற்ற சிலர் தான் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், கல்லூரிகளில், கல்வி நிலையங்களில் கற்கும் மாணவியரும் மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களும் கூட இவ்வாறு நடந்து கொள்வது வேடிக்கையானது.

வீதியை அடைத்துக் கொண்டு பிளாட்பாரங்களில் சிரித்துக் கொண்டும் கதைத்துக் கொண்டும் நடக்கும் இவர்கள், பின்னால் வரும் பாதசாரிகளைக் கூட கவனத்தில் கொள்வதில்லை.

இதனால் சில இளைஞர்கள் வம்புக்காகவே இவர்களை மோதிக் கொண்டு செல்வதுண்டு.

இந்தக் காட்சியை ஏளனமாகப் பார்த்து கேலி பண்ணுவதற்கென்றே இன்னொரு கூட்டம் காத்திருக்கிறது என்பதை ஏனோ இவர்கள் மறந்து போகிறார்கள்.

ஏன் இந்த நிலை?

பெண்களுக்குத் தேவை அடக்கம். அதற்காகக் குனிந்த தலைநிமிராமல் தான் வீதியில் நடக்க வேண்டும் என்றில்லை. அடக்கம் என்னும் போது, அது அமைதியைத்தான் குறிக்கின்றது. அமைதியாகப் பெண்கள் நடந்து செல்லும் அழகே தனிதானே?

**ஞானம்**

---

# வாழ்வைத் தொலைக்கும் வீண் சந்தேகம் எதற்கு?

சந்தேகக் கேடு அது சந்தோஷக் கேடு என்பார்கள். தன்னைத் தானே நம்பாததும் இந்த சந்தேகம் தான். அப்படியிருக்கும் போது மற்றவரை நம்புமா?

குறிப்பாக இல்லறத்தில் கணவன்-மனைவியிடையே இது புகுந்துவிட்டால் வாழ்வே நரகமாகிவிடும்.

கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் பரஸ்பரம் நம்பாவிட்டால், எங்கே என்று தருணம் பார்த்துக் காத்திருக்கும் சந்தேகப் பேய் அங்கே புகுந்துவிடும்.

சந்தேகம் என்ற ஒன்று ஒருவருக்கு ஏற்பட்டு விட்டால், அது அவரை நிம்மதியாக சாப்பிட விடாது, உறங்க விடாது. ஏன் வாழ்க்கையையே சூன்யமாக்கி விடும் என்பதிலும் ஐயமில்லை.

சரி, இந்தச் சந்தேகம் ஏற்பட யார் காரணம்? எது காரணம்?

இல்லறத்தில் இணைந்துவிட்ட இருவருமே காரணர்தான்.

இருவரிடையேயும் புரிந்துணர்வின்மை ஒரு காரணம். மற்றது, அதற்கான சந்தர்ப்பத்தை கணவனோ மனைவியோ தாமே ஏற்படுத்திக் கொள்வது.

கணவன்-மனைவியிடையே ஒளிவு மறைவு என்பது இருக்கவே கூடாது. ஆம். கணவன் மனைவியிடம் சொல்லாமலோ மனைவி கணவனிடம் சொல்லாமலோ எந்தக் காரியத்தையும் செய்வது நல்லதல்ல. எதையும் ஒளித்து மறைத்துச் செய்யும் போதுதான் சந்தேகக் கீற்று அங்கே உருவாகின்றது.

கணவன் மனைவியிடம் சொல்லாமல் எங்காவது சென்று விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

தாமதமாக வீடு திரும்பியதும் மனைவி கணவனிடம் கேட்கும் முதல் கேள்வி: 'இவ்வளவு நேரம் எங்கே சென்றீர்கள்? சொல்லிவிட்டுப் போவதுதானே?' என்பதுதான். மனைவிக்குத் தெரியாத இடம் எனும் பட்சத்தில் கணவனுக்கு இதற்கான பதிலைச் சொல்வதில் தயக்கம் ஏற்படலாம். உடனே அவர் சென்ற இடத்தை மறைத்துவிட்டு, வேறு எங்கோ சென்றதாகக் கூறிவிடுவார். அந்தக் கணத்தில் மனைவிக்குப் பொறி தட்டிவிடும். சிலர் அத்தோடு விட்டுவிடுவார்கள். வேறு சிலரோ தொணதொணக்க ஆரம்பித்து விடுவார்கள். சிறுசிறு வாக்குவாதம் பெரிய சண்டையில் முடிந்துவிடும்.



சிலர் மனைவிக்குத் தெரியாமல் எத்தனையோ காரியங்களைச் செய்துவிடுவார்கள். அவை தெரிய வரும் போது என்ன செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்பார்கள். இதனையடுத்து அடுக்கடுக்காக பொய் மழை பொழியும். இது மனைவியர் மத்தியிலும் நிகழாமல் இல்லை.

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்களைக் கூறிச் சமாளிக்க முயல்வது நேர்மையான குடும்பஸ்தர்களுக்கு அழகல்லவே.

அதே போன்று கணவன்-மனைவி இருவருமே ஒருவருக்கொருவர் தெரியாமல் ஒரு துரும்பைத்தானும் எவருக்கும் கொடுக்கக் கூடாது. இதுவும் ஒருவர் மற்றவர் மீது சந்தேகப்பட வாய்ப்பாக அமைந்துவிடும்.

தாய்-தந்தையருக்கோ, கூடப் பிறந்த சகோதரர்களுக்கோ அல்லது உற்றார் உறவினருக்கோ பணம்- பொருள் (நகை) கொடுப்பதாயிருந்தால் கூட இருவருமே கலந்து பேசி பரஸ்பரம் சம்மதம் பெறவே வேண்டும். இல்லையென்றால், மூன்றாந்தரப்பினர் மூலம் தெரிய வரும் போது, பெரியதோர் கலகமே உருவாகிவிடும். இது நியாயமானதுதானே? தனது வாழ்க்கைத் துணை தனக்குத் தெரியாமல் ஏதோ செய்கிறார் எனும் போது எவருக்குமே ஆத்திரம் வரத்தான் செய்யும்.

பிறகென்ன? கேள்வி முறைகள், வாக்குவாதங்கள், சண்டைகள் என அதுவே தொடர்கதையாகி விடுகிறதுதானே?

இன்னுமொரு முக்கியமான விடயம். தத்தமது நண்பர்களை நேரடியாக ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி விட வேண்டும். இல்லையேல் நண்பர்களிலும் - மனைவி என்றால் அது ஆண், கணவன் என்றால் பெண் - சந்தேகப் பார்வை விழுவதைத் தவிர்க்க முடியாது போய் விடும்.

எனவே சந்தேகம் என்ற பேய் நம் இல்லத்துக்குள் புகுந்துவிடாமல் இருக்க கணவன்-மனைவி இருவருமே விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

வீண் சந்தேகத்தை நாமே உண்டு பண்ணி இன்பமான இல்லறத்தை தொலைக்கத்தான் வேண்டுமா?

**-லேகா-**

---

# பெண்

பார்ப்பதற்கு விழியாய்
பேசுவதற்கு மொழியாய்
பழகுவதற்கு தோழியாய்
பூமிக்கு வந்த ஒளிவிளக்காம்
புனிதமான பெண்ணவள்!

*-யதிஷியா-*

---

# அல்வா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கடலை மா | - 250 கிராம் |
| கோதுமை மா | - 250 கிராம் |
| நெய் | - 250 கிராம் |
| சீனி | - 250 கிராம் |
| முந்திரிபருப்பு | - 50 கிராம் |
| காய்ந்த முந்திரிகை | - 25 கிராம் |

**செய்முறை:**

அடி கனமான பாத்திரத்தில் நெய் முழுவதையும் விட்டு, முந்திரி பருப்பு காய்ந்த முந்திரிகை ஆகியவற்றை வறுத்தெடுத்துப் பின் அந்த நெய்யிலேயே இரண்டு மாவையும் சேர்த்து வாசனை வரும்வரை கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். மற்றொரு அடுப்பில் தேவையான அளவு தண்ணீரில் சீனியைப் போட்டு நன்றாகக் கொதிக்க வையுங்கள். மா நன்றாக வறுபட்டு நிறம் மாறியதும் கொதிக்க வைத்த சீனித் தண்ணீரை ஊற்றி அடுப்பைக் குறைத்து வைத்து நன்றாகக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும்.

அல்வா பாத்திரத்தில் ஒட்டாமல் சுற்றிலும் ஓரங்களில் நெய் விட ஆரம்பித்ததும் நெய் தடவிய தட்டில் கொட்டி, அதன் மீது வறுத்து வைத்துள்ள முந்திரி பருப்பையும் காய்ந்த முந்திரிகையையும் தூவி அலங்கரித்த பின், அளவாக வெட்டி சிறிது ஆறியதும் பரிமாறலாம்.

---

# பிட்ஸ்

* ஊறுகாய் செய்ய பயன்படுத்தும் எண்ணெயை நன்றாகக் காய வைத்து ஆவி வரும் வரை சூடாக்கவும். பின்னர் அதனை நன்றாக ஆற வைக்கவும். இந்த எண்ணெயைப் பயன்படுத்தி ஊறுகாயைத் தாளித்தால் எத்தனை காலமானாலும் பூஞ்சணம் பிடிக்காது நன்றாக இருக்கும்.

* வொஷிங் மெஷினில் சிறிதளவு தண்ணீர் விட்டு, சோப் பவுடரைப் போட்டுத் துணிகளை அரை மணி நேரம் ஊற விடுங்கள். அதன் பின் மெஷினைச் சுற்ற விடுங்கள். துணிகளிலிருந்து அழுக்கு நீங்கி வெள்ளை வெளேரென்று சுத்தமாக இருக்கும்.

* தினமும் ஐந்து, ஆறு உலர் திராட்சையை மென்று வந்தால் பற்களும் ஈறுகளும் நன்கு பாதுகாக்கப்படும். இதிலுள்ள ஐந்துவிதமான குணங்கள் பற்களுக்கும் ஈறுகளுக்கும் இந்தப் பாதுகாப்பை வழங்குகின்றன. இல்லினாய்ஸ் பல்கலைக்கழகம் தரும் தகவல் இது.

---

# வாரம் ஒரு கேள்வி-பதில்

**நான் உயர்கல்வி கற்கும் மாணவி. பாடசாலை வாழ்வில் ஒருவர் என்னைக் காதலித்தார். நானும் அவரைக் காதலித்தேன். இப்போதும் கூட இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கின்றோம். ஆனால் எனது குடும்பத்தினர் ஒருபோதும் எங்கள் காதலுக்கு சம்மதம் தர மாட்டார்கள். காரணம் அவர் சாதியில் குறைந்தவர். எனக்கு சாதி, குடும்பம் மிக முக்கியம். எனவே காதலைத் துறக்க முற்பட்டுள்ளேன். நான் இவரை மணந்தால் என் பிள்ளைகளுக்கும் சாதி பிரச்சினை வருமல்லவா?**

**சதீஸ் சசிமாலா,**

**விசுவமடு.**

சாதி இரண்டொழிய வேறில்லை என்பது ஔவை வாக்கு. கீழ் சாதி என்பதற்காகக் காதலைத் துறக்க நினைப்பது மிகமிக கேவலமானது. கீழ் சாதி என்று தெரிந்துதானே காதலித்தீர்கள்? இப்போதும் காதலித்துக் கொண்டிருக்கிறீர்கள். பிள்ளைகள் நலன் கருதி காதலை துறக்க நினைக்கும் நீங்கள், உங்கள் காதலை இழந்து தவிக்கப் போகும் உங்கள் காதலரைச் சற்றாவது எண்ணிப் பார்க்கவில்லையே. பிள்ளைகளின் காலத்தில் என்னென்ன சீர்திருத்தங்கள் சமூகத்தில் நிலவுமோ யார் கண்டது? அதைவிட நீங்கள் இப்போது ஒரு உயர்கல்வி கற்கும் மாணவி. உங்கள் படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்திவிட்டு பின்னர் எதிர்கால வாழ்வுக்கான துணை பற்றிச் சிந்தித்திருக்கலாமே.

தூய்மையான காதல், உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து பிறக்கும். அன்பினால்தான் நிறைவடைகின்றது. அதுவன்றி கீழ் சாதி மேல் சாதி என்ற நிலையில் அல்ல என்பதை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்.

# பூங்காற்று திரும்புமா...?

நாவற்குழி சு.சிவராசா

அவள் அந்த அழகான சிறுமி, தங்கத்தில் வார்த்தெடுத்த சிற்பம் போலிருப்பாள்.

குமரகுருபரர் மீனாட்சியை இப்படித் தான் கண்டிருப்பாரோ! கண்ட கிறுகிறுப் பில்தான் பிள்ளைத்தமிழ் பாடித் தந்தாரோ!

மான்குட்டி போல துள்ளி வந்த அவளுக்கு பத்து வயதுதான். ஐந்தாம் வகுப்பில் படிக்கிறாள். அம்மா அவளை ரீயூசனுக்கு போ என்று விரட்டினாலும்,

"ஊகும், நான் மாட்டேன். நான் மாமாக்கிட்டைதான் பாடம் படிப்பேன்" என்று சொல்லிவிட்டு புத்தகப் பையையும் எடுத்துக்கொண்டு என்னிடம் வந்து விடுவாள்.

அவர்கள் வாய்க்கும் வயிற்றுக்கும் அல்லாடும் வறிய குடும்பத்தினர். ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில்

## சிறுகதை

பரீட்சையில் பாஸ் பண்ணி விட்டால் காசு கிடைக்கும் என்று அந்த அம்மா எந்நேர மும் அங்கலாய்த்துக் கொண்டிருப்பாள்.

மகளோ,

என்னிடம் வந்து என்னைப் [illegible]க்குக்காட்டிக் கொண்டிருப்பாள். நான் பெரிதாக படித்தவனில்லை. எனக்குக்கண் பார்வையும் இல்லை. ஆனாலும் ஐந்தாம் வகுப்புப் பாடங்களை சொல்லிக் கொடுக்கும் அனுபவ அறிவு இருந்தது.

அவள் என் மடியிலிருந்தும், மார்பில் புரண்டும், பக்கத்தில் படுத்தும், கதைகள் பேசிக்கொண்டும் பாடம் கேட்பாள். இப்படி வளர்ந்த எங்கள் உறவு படிப்படியாக இறுகிக் கொண்டிருந்தது.

எனக்கும் அவள் இல்லாதபோது எல்லாமே வெறுமையாகத் தோன்றியது. இத்தனைக்கும் அவர்களுக்கும் எங்களுக்கும் முன்னர் எந்த உறவும் இருந்ததேயில்லை.

இப்போது நாங்கள் வன்னியில் ஒரு சிறிய கிராமத்தில் வசிக்கிறோம். யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்தபோது கட்டித்தரப்பட்ட ஒரு குடிசை வீட்டில் தான் நாங்கள் இருக்கிறோம். எனது அக்கா, அத்தான் [illegible]ண்டு பிள்ளைகள், எனக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

அவளுடைய குடும்பம் மலைநாட் டிலிருந்து இனக்கலவரத்தினால் இங்கு வந்து குடியேறியது.

இதில் விளங்காத ஒரு விஷயம் என்னவென்றால் அக்காவின் பிள்ளைகள் இவளைப்போல என்னோடு நெருக்கமாக இல்லை. இவளும் அந்தப் பிள்ளைகளோடு விளையாடாமல் என்னையே சுற்றிக்கொண்டிருந்தாள்

யுத்தமோ, சமாதானமோ, கலவரமோ இவை எதுவும் காலத்தை கட்டுப்படுத்த முடியாது. வருடங்கள் போகப்போகச் சிறுமி குமரியானாள். கால தேவனின் கை



வண்ணத்தில் அவள் அசல் அம்மன் விக்கிரகம் போலவே இருப்பாள் என்றே நினைத்துக்கொண்டேன்.

அப்படித்தான் அங்கே உள்ளவர்கள் எல்லோரும் அவளைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

தான் பருவப் பெண் என்பதை அவள் என்னோடு பழகும்போது மறந்து விட்டாள். எப்போதும் போலவே பழகினாள். கையை பிடித்துக்கொண்டு கோவிலுக்கு கூட்டிப்போவாள். எனக்கு ஒரு பக்கம் சங்கடமாகவும் மறுபக்கம் இதமாகவும் இருந்தது.

ஒரு நாள் என்னுடைய வயதைக் கேட்டாள், மனிதனுக்கு இருக்கிற மொத்த வயதில் பாதியளவை எட்டிப் பிடித்துக்கொண்டிருப்பதாக அவளிடம் கூறினேன். அவள் பளிங்குத் தரையில் வெள்ளிக்காசு கொட்டியதைப் போல கலகலவென்று சிரித்தாள்.

"எனக்கென்னவோ உங்களைப் பார்த்தால் கிழவனாகவே தெரியவில்லை. நடிகர் விஜய் போல இருக்கிறீங்கள்" என்று சொல்லி எனது கன்னத்தில் ஒரு கிள்ளுக் கிள்ளி விட்டாள்.

அவளுடைய வார்த்தைகள் அன்று முழுவதும் என்னை அந்தரத்தில் மிதக்க வைத்தன. 'முதல் மரியாதை' படத்தில் வந்த சிவாஜி போல "பூங்காற்று திரும்புமா....?" என்று இதயம் பாடியது. உள்ளம் துள்ளிக் குதித்தது. அவள் மீன் விற்றுக் கொண்டு வந்த ராதாவாக இருப்பாளோ என்று என் கற்பனை வளர்ந்தது. கண்ணிலான் மாங்காய் விழவெறிந்த மாத்திரைக் கோல் என்கையில் இருக்குமோ என்று பார்த்துக்கொண்டேன்.

அவள் அழகுதான் மேலும் மேலும் மெருகேறி வளர்ந்தது போலும். படிப்போ மட்டுமட்டாகவே இருந்தது. எப்படியோ குறுக்குச் சட்டத்தை தட்டி விழுத்தாமல் ஓ.எல் இல் பாய்ந்து ஏ.எல்லுக்குப் போய் விட்டாள். ஆனால் அந்த வகுப்புப் பாடங்கள் அவளுடைய புத்திக்குஅதிகப் படியானவையாக இருந்தன.

இப்போதெல்லாம் அவள் என்னிடம் வருவதைப் பற்றி சிலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். இந்தக் கண்கெட்டவன் தான் அவளைப் படிக்கவிடாமல் கெடுக்கிறான் என்றும் கூடச் சொன்னார்கள்.

ஆனால் அவள் இந்தக்கிசுகிசுக்களை யெல்லாம் தான் ரசிப்பதாகவே என்னிடம் கூறினாள். அவளுடைய இரசனை என்னை இதமாகத் தாலாட்டியது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான காலகட்டம் அது. அக்கா குடும்பத்தினர் ஊருக்குத் திரும்பி விட்டார்கள். நான் அங்கு போகாமல் இங்கேயே நின்று விட்டேன். கோவில்களில் நடக்கும் பூசைகளில், திருவிழாக்களில் தேவாரம் பாடுவேன். மாலை தொடுத்து மணியடித்து தொண்டு செய்வேன். எனக்கு பிரசாதம் பிரமாதமாய்க் கிடைக்கும். சிலர் வேட்டி சட்டையும் தருவார்கள். ஆக உணவு,உடை, உறையுள் மூன்றும் பறவாயில்லை

படிப்பு ஏறாமல் சுற்றித்திரிந்த அவள் யாரோ ஒருவனுடன் ஓடிப்போய் விட்டாள். கட்டப்படாத எனது வசந்த மாளிகையும் அடிபட்டுப்போனது. பொருந்தாத வஞ்சித் திணைப் பாடல் படிப்பதற்கு மட்டுமே பொருத்தமானது.

ஓடிப் போனவள் முல்லைத்தீவுப் பக்கம் எங்கோ இருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. அவளுடைய நினைவுகள் என் மனதிலிருந்து மறைந்து விட்டன.

இந்தநிலையில்தான் முல்லைத்தீவுக் கடற்கரையை சுனாமி பேரலை காவு கொண்டதை அறிந்தேன்.

பலர் தங்கள் உறவுகளைப் பறி கொடுத்து துயரக் கடலில் மூழ்கினார்கள். நான் வழக்கம் போல அந்த மண் குந்தில் அமர்ந்திருந்தேன், அந்த ஒரு வீட்டிலிருந்து அழுகைச்சத்தம் கேட்டது. எனக்கு நெஞ்சு திக்கென்றது.அந்த வீடு அவளும் அவள் கணவனும் வாழ்ந்த வீடு.

அவளையும் கணவனையும் ஆழிப் பேரலை அள்ளிக் கொண்டு போய் விட்டதாக வீட்டுக்காரர் கூறுவதைக்கேட் டேன். அதனால்தான் இந்த ஒப்பாரிச் சத்தம். வாழ்க்கை என்பது நடந்து முடிந்த வற்றை மறந்து விடுவதும் நிகழ் காலத் தில் ஒன்றி விடுவதும் என்றுதான் அனுப வப்பட்டவர்கள் சொல்வார்கள்.

இரண்டு மாதங்கள் கடந்தன, ஒரு சின்னஞ் சிறுமி வேலிக்குள்ளால் நுளைந்து ஓடிவந்து எனது மடியில் தாவி ஏறினாள். எனது முகத்தின் பக்கமாகத் திரும்பி கலகலவெனச் சிரித்தாள். கன்னத் தில் பிஞ்சு விரல்களால் கிள்ளினாள்.

என்னைச் சுற்றிக் கொண்டு திரிந்த முத்துச் சிற்பி பெற்றெடுத்த ஆணிமுத்து எனது மடியில் உட்கார்ந்திருக்கிறது. இந்தக் குழந்தையின் சேட்டைகள் எனக்கு அவளை அப்படியே என் முன்னால் கொண்டு வந்து நிறுத்தின.

இப்போதெல்லாம் அந்தக் குழந்தை என்னோடுதான் காலத்தைக் கழிக்கிறது. என்னை மாமா என்றுதான் அழைக்கிறது. அவள் குழந்தை வடிவில் மீண்டும் எனது மடிக்கு வந்து விட்டாள். இப்போது மீண்டும் பூங்காற்று வீசுகிறது.

---

# உலகின் முதல் "தனித் தந்தை"

'சிங்கிள் மதர்' அல்லது தனித்தாய் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதாவது திருமணம் செய்து கொள்ளாமல் யாரோ ஒரு முன்பின் தெரியாத நபர் [illegible]னமாகக் கொடுத்த [illegible]ந்துவை தன் [illegible]ருப்பைக்குள் [illegible]ருத்துவர் மூலம் [illegible]சலுத்த வைத்துக் [illegible]ழந்தையைப் [illegible]பற்றெடுப்பவள் [illegible]ன் இந்த 'சிங்கிள் [illegible]தர்'.




இவ்வாறு [illegible]பற்றெடுத்த [illegible]ழந்தையைத் தன்னந்தனியாளாகவே வளர்த்து [illegible]ளாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் ஒரு [illegible]பண்ணைத்தான் ஆங்கிலத்தில் 'சிங்கிள்' மதர் [illegible]ன்று அழைக்கிறார்கள்.

அதே போன்று, இப்போது பெண் [illegible]ண்ணோ, மனைவியோ இல்லாமல் 3 [illegible]ழந்தைகளைப் பெற்றுக் கொண்ட 'சிங்கிள் [illegible]தர்' ஒருவரும் இருக்கிறார்.

உலகத்தின் முதலாவது தனித்தந்தையாகச் [illegible]த்திரம் படைத்திருக்கும் அவர் ஈயான் [illegible]க்கலே ஜோன் என்பவராவார்.

[illegible]58 வயதான இந்த வியாபாரி திடீரென்று 5 ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் தன் வாழ்வில் ஏதோ ஒரு குறை இருப்பதாக உணர்ந்தார். தனக்குக் குழந்தை இல்லையே என்ற ஏக்கம் அவரைப் பிடித்து வாட்டியது.

அவர் நினைத்திருந்தால் தான் விரும்பிய ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து உறவு வைத்துக் கொண்டு குழந்தைக்குத் தந்தையாகி இருக்கலாம்.

ஆனால் அது ஒழுக்க ரீதியாகச் சரியில்லை என்று அவருக்குப்பட்டது. மேலும் அந்தப் பெண்ணுடன் எந்தக் காரணத்தாலாவது உறவு முறிந்துவிட்டால் அந்தக் குழந்தை யாருக்கு என்ற பிரச்சினை எழ வாய்ப்பிருந்தது.

ஈயான் இந்த மாதிரி வேண்டாத வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே, குழந்தை பெற்றுக் கொள்வதற்கு அவர் வேறொரு வழியைக் கையாண்டார்.

முதலில் 'இண்டர்நெட்'மூலம் அவர், தன் சினை-முட்டையைத் தானமாகக் கொடுக்கத் தயாராக இருக்கும் ஒரு பெண்ணைத் தேடிப் பிடித்தார். பிறகு அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர்ணியாவில் தன் விந்துவால் அந்தப் பெண்ணின் சினை முட்டையைக் கருவுறச் செய்து, பின் ஒரு வாடகைத் தாயைப் பிடித்தார். இவரது அந்தக் கருவைத் தன் கர்ப்பப்பையில் வைத்து வளர்த்துப் பிரசவித்துக் குழந்தையை அவரது கையில் கொடுக்க அந்த வாடகைத் தாய் தயாரானாள்.



இங்கிலாந்தில் இதையெல்லாம் சட்டபூர்வமாகச் செய்ய முடியாது. எனவே தான் ஒரு அமெரிக்க வாடகைத் தாயைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது.

இதற்கெல்லாம் இவருக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு தெரியுமா? 40 லட்சம் ருபா!

ஆனால் இதற்கான பிரதிபலன் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்!

குழந்தைகள் பிறந்து ஆறு வாரங்களுக்குப் பிறகு ஈயான் அமெரிக்கா சென்று விமானம் மூலம் தன் 3 குழந்தைகளையும் இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தார். 'தனிக்கட்டை' யாக இருந்த அவர் 'குடும்பம்'நடத்த ஆரம்பிதார். தாயாகவும், தந்தையாகவும் இருந்து அந்தச் சின்னஞ்சிறு குழந்தைகளைப் பராமரித்து வருகிறார் ஈயான்.



# சுவையான பாடல்களுடன் 'சம்திங் சம்திங்' படப்பிடிப்பு நிறைவு

உள்ளூர், வெளியூர், வெளிநாடு என பாடல் காட்சிகளுக்கு மட்டும் பல நாட்கள் பம்பரமாக சுழன்று படமாகியுள்ளது 'சம்திங் சம்திங் எனக்கும் உனக்கும்'. 'ஜெயம்'ரவி - த்ரிஷா நடிக்க ராஜா இயக்கியுள்ள இப்படத்தின் பாடல்களும் அவை படமான இடங்களும் பற்றிய ஒரு சுவாரஸ்யமான தகவல்கள்: பூப்பறிக்க நீயும் போகதே உன்னை பார்த்தாலே பூக்களுக்குள் கத்தி சண்டையடி.... போட்டு வைக்க நீயும் போகாதே உன்னைப் பார்த்தாலே கண்ணாடி கைகள் நீட்டுமடி.... ராஜுசுந்தரத்தின் விதவிதமான நடனங்களில், ஜெயம் ரவி, த்ரிஷா, ரிச்சா பலோட் மூவரும் ஆடிப்பாடும் இந்தப் பாடல் காட்சி லண்டன், டுபாய் என பெரிய நகரங்களில் தொடங்கி கொடைக்கானல், குற்றாலம், அம்பா சமுத்திரம், ராஜபாளையம், தென்காசி, சிவகிரி, கீவப்புலியூர், திண்டுக்கல் என 25க்கும் மேற்பட்ட இடங்களில் படம்பிடிக்கப்பட்டது.

'சம்திங் சம்திங் சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும் சம்திங் சம்திங்... லப்டப் லப்டப் சொல்லும் சம்திங் லாஜிக் இல்லா மேஜிக் சம்திங்...!

மூன்று லட்சம் பலூன்களுக்கு மத்தியில் ஜெயம் ரவி, த்ரிஷா, ரிச்சா பலோட், தேஜாஸ்ரீ, சந்தானம், மணிவண்ணன், ஹனிபா, சச்சு, கீதா ஆகியோர் ஆடிப்பாடும் இந்த பாடல் காட்சி சென்னை ஸ்டுடியோக்களில் செட் போட்டுப் படமாக்கப்பட்டது. 'உன் பார்வையில் பைத்தியம் ஆனேன் உன் வார்த்தையில் வாக்கியம் ஆனேன் உன் வெட்கத்தை வேடிக்கை பார்த்தேன் - மயங்கினேன்' - ஜெயம் ரவி ஆடிப்பாடியது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஒரு ஞாபக அலையென வந்து என் நெஞ்சினை நனைத்தவள் நீயே என் வாலிப திமிரினை உன்னால் மாற்றினேன்'

ஜெயம் ரவி, த்ரிஷா குஷியாக ஆடிப்பாடும் இந்தப் பாடலுக்கு விதவிதமான நடனங்களில் நடனம் அமைத்தவர் விஷ்ணு தேவா. இந்தப் பாடல் காட்சி பல இடங்களில் பிரமாண்டமான முறையில் பத்துக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைத்து படம்பிடிக்கப்பட்டது. 'கிளியே கிளியே கிக்கீ கிளியே குயிலே குயிலே குக்கூ குயிலே அட கிளிதான் கிளிதான் நான்கூட - என் மனச கூண்டுல அடச்சாளே....!'

ஐம்பதுக்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகளுடன் ஜெயம் ரவி ஆடிப்பாடும் இந்தப் பாடல்காட்சி பிருந்தா நடனம் அமைக்க, கித்தனையான் கோட்டை, ஆத்தூர், சேலம், குற்றாலம், அம்பாசமுத்திரம், சிவகிரி, தென்காசி போன்ற இடங்களில் நூறுக்கும் மேற்பட்ட நடன கலைஞர்களுடன் படம் பிடிக்கப்பட்டது.

ஆகாயம் இத்தனை நாள் மண் மீது விழாமல் தூணாகத் தாங்குது காதல் தான்...., திண்டுக்கல் அருகில் ஆத்தூர் பக்கதில் சித்தையயன் என்கிற கிராமத்தில் பச்சை பசேல் என்றிருக்கும் வயல் வெளிக்கு மத்தியில் ஐம்பது ஏக்கருக்கு மேல் கூடாரம் அமைக்கப்பட்டு பல்வேறு இடங்களில் இந்தப் பாடல் சிறப்பாக படம்பிடிக்கப்பட்டது. 'கோழி வெடக் கோழி என்னைக் கொத்தி திங்குற படுபாவி ஆத்தி அடி ஆத்தி என்னசுத்த வைக்குற சுதி ஏத்தி' வால மீன் புகழ் ஷோபி நடனம் அமைக்க சென்னை பிரசாத் ஸ்டுடியோ, ஏ.வி.எம். ஸ்டுடியோ, மோகன் ஸ்டுடியோக்களில் பல்வேறு வகையான வீடுகள் போல அரங்கங்கள் அமைக்கப்பட்டு மிகச்சிறப்பாக படம் பிடிக்கப்பட்டது.

'சுத்தி சுத்தி ஆட்டம் போடுற.... இந்த இளமையை யாராச்சும் தடுக்க முடியுமா?' என்ற பாடல் வரிகளுக்கேற்ப ஜெயம் ரவி டுபாய் வீதியிலும், டுபாய் ஏயார்போர்ட் மற்றும் லண்டன் வீதிகளிலும் படமாக்கப்பட்டது.

டுபாய் பிளைட்டில் 300 பயணிகள் மற்றும் ஏர்ஹோஸ்டர்ஸ் உடன் ஜெயம் ரவி, கீதா உடன் ஆடிப்பாடும் பாடல் படப்பிடிப்பு நடைபெற்றது. வெளிநாட்டு நடன நடிகர்கள் அதிகமானோர் இப்படி கலந்துகொண்டது இதுவே முதல் முறை. ஐம்பது ரஷ்ய அழகிகளுடன் ஜெயம் ரவி ஆடிப்பாடுவது கண்கொள்ளாக்காட்சி.



# நிறைவேறும் விஜய் ஆசை

விஜய், இதுவரை இருவேடங்களில் நடித்ததில்லை. ஒரு படத்திலாவது அப்படி நடித்துவிட வேண்டும் என்று ஆசைப்படும் அவர், நல்ல கதை கிடைத்தால், உடனே நடிப்பதாகச் சொன்னார். அதன் அடிப்படையில் விஜய் இரட்டை வேடங்களில் நடிப்பதற்காக ஒரு கதையைத் தயார் செய்து வைத்துள்ளார் டைரக்டர் வின்செண்ட் செல்வா. ஏற்கனவே இவர் விஜய் நடித்த பிரியமுடன், யூத் படங்களை இயக்கியுள்ளார். தற்போது ரமேஷ், சலோனி நடிக்கும் மதுரை வீரன் படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். போக்கிரியில் பிஸியாக இருக்கும் விஜய், வின்செண்ட்டிடம் கதை கேட்க நேரம் ஒதுக்கியுள்ளாராம்.

# சத்தியமாய் சொல்கிறேன் நம்புங்க!

'ரஜினி நடக்குற ஸ்டைல், அவர் பேச்சு, சிரிப்பு, கண்ணாடிய ஸ்டைலா மாட்டுறது யப்பா... எல்லாமே எக்ஸலெண்ட்' என முச்சுக்கு முன்னூறு தடவை ரஜினி பெயரைச் சொல்லி பூரித்துப் போகிறார் ஸ்ரேயா. 'சிவாஜில ரஜினிகூட நடிக்குறேன்னு எல்லார்கிட்டேயும் பெருமையா சொல்லிவிட்டு இருக்கேன். படம் 60 சதவீதம் முடிந்துவிட்டது. எப்போ ரிலீசாகும் என்று நானும் அவலாய் இருக்கிறேன். ஒவ்வொரு ஷாட்டையும் பல முறை பட்டை தீட்டி, ஷங்கர் எடுக்கிறதப் பார்த்தா இன்னும் பல மாசம் காத்திருக்கணும் போலத் தோன்றுகிறது. மாமா, மருமகன் கூட மரத்தை சுற்றுகிறேன். அட இவளால சீனியருக்கும் ஜூனியருக்கும் ஜோடி போட முடியும் என்று எல்லோரும் சொல்லணும். அதுதான் முக்கியம். இந்தி பையன் ஒருத்தன் கூட மும்பை முழுக்க ரவுண்ட் அடிக்கிறதா பத்திரிகைகளில் எழுதிறாங்க. அது எல்லாம் சும்மா... சினிமாவைத் தவிர வேற எந்த விஷயத்திலும் கவனம் செலுத்திறதே இல்லை. சத்தியமாய் சொல்றேன் நம்புங்க' என்கிறார் ஸ்ரேயா. சரி நீங்க சொன்னா நாங்க நம்பித்தானே ஆகணும்?

# ஷங்கரின் அடுத்தப...



'மு...
23ஆம்...
அடைந்...
எஸ்.பிக்...
'வெயில்...
பரத், பச...
பிரியங்க...
உதவிய...
படத்தின்...
மதுரை, ...
முடிந்துள்...
தமிழகத்தி...
மாவட்ட...
வறண்ட...
புழுதி காம்...
படத்தின்...
நகரிலேயே...
தமிழகத்திலேயே விருதுநகரில்தான் மிக குறுகியகால நேர்த்தியான...
நிறைந்த வீடுகள் உள்ளன. சின்ன சின்ன சந்துக்களும் தெருக்களு...
சமீபத்தில் பரத், பவனா இடம்பெறும் ஒரு பாடலின் படப்பிடிப்பு...
குறுகிய சந்துகளில் கூட பரத்தும் - பாவனாவும் அழகாக நடனமா...
கண்டுகளித்து பாராட்டியுள்ளனர்.

# பிரச்சினையை தூண்...



ஆர்.பி.சௌத்ரி பெரும் பொருட்செலவில் எடுத்து வரும் படம் 'அரண்'. ஜீவா, மோகன்லால் என இரு ஹீரோக்கள். கோபிகா, லட்சுமி கோபால் சாமி இருவரும் ஹீரோயின்கள்... ஒரு பாடலுக்கு ரகசியா நடனம் ஆடுகிறார்.

இந்திய இராணுவத்தில் மேஜராக இருந்த ர... அரணை இயக்குகிறார். ஹீரோக்கள் இருவரும் இராணுவ கமாண்டோக்களாக நடி... பெரும்பகுதி படப்பிடிப்பு இந்தியா...ன் எல்லை பகுதிகளில் நடத்தப்பட்டது. இந்திய எல்லையை ஊடுருவும் தீவிரவாதிகளை இரு கமாண்டோக்களும் உயிரை பணயம் வைத்துத்தடுப்ப... படத்தின் கதை.

பொதுவாக எல்லை, தீவிரவாதம் என்றது... முஸ்லிம் தீவிரவாதிகளே நினைவுக்கு வரு... தமிழ் சினிமாவும் இதில் விதிவிலக்கல்ல. இந்தியாவில் கதை நடப்பதாக இருந்தால் வில்லன்கள் ...மாகவே இருப்பர். விஜயகாந்த் சினிமாவில் வேட்டையாடிய...வாதிகளில் கனிசமா... பாகிஸ்தான் முஸ்லிம் நாடு என்பதாலும், ...து தீவிரவாதிகளை உ... எல்லையை ஊடுருவ செய்வதாலும் சினி...ல் தீவிரவாதியை முஸ்... சிக்கல் இருந்ததில்லை. ஆனால், 'அரண்'த்தில் இதை மீறியிருக்கி... ஒருவர் ஆப்கானிஸ்தான் சென்று ... ...னை பெற்ற ... அனுமதியுடன் விடுவித்து இந்தியாவில் ...வாத செயல்களில் ஈடுப... ஆப்கானிஸ்தானுக்குச் சென்று இயக்குனர் ...ர் ரவியும் ஒளிப்பதிவ... இந்திய நவாப் எதிரி நாட்டுக்கு விசுவாச...ருப்பதாக சித்தரித்திருப்... சமூகத்தின் எதிர்ப்பை சம்பாதிக்க சாத்தியங்கள் உள்ளதாக கூறுகி...

# சதா உள்ளே ...ன்தார...

முதலில் நயன்தாராவின் கொள்கை ம...ன்மைக்கு ஒரு ஓ போ... முடியாமல் செய்துவிடுவேன் என்ற மனை இயக்குனர்களின் மிர... சின்ன பரிசு! ஜோஷி இயக்கும் 'ஜென்மத்தில் சுரேஷ்கோபிக்கு ... பாடலுக்கு ஆட நயன்தாராவை கேட்டு, ...ம் ஜோஷி மீதிருந்த மரி...

பெட்டி படுக்கையுடன் பொள்ளாச்சி...ங்கிய நயன்தாராவிடம்... நடிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்...வ்வளவு தான்..... மனை... பொறுமை. ஒரு பாடல் என்று கூறிவிட்... காட்சிகளிலும் நடிக்கவே... வேலை என்று கூறிவிட்டு அப்படியே விட்டார். நயன்தாரா நடி... வேடத்தில் தற்போ... நடிகைகளே ... வலம் வரும்... ரொம்ப சா... ஒரு கலக... தெலுங்... இப்படி... கஷ்ட... மிரட்... விட்ட...



# அடுத்தபடம் 'வெயில்'



'முதல்வன்', 'காதல்', 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' என வெற்றியின் உச்சியை அடைந்துள்ள இயக்குனர் ஷங்கரின் எஸ்.பிக்சர்ஸ் தயாரிக்கும் நான்காவது படம் 'வெயில்.'

பரத், பசுபதி, பவனா, ஸ்ரேயா ரெட்டி, பிரியங்கா நடிக்கும் இப்படத்தை ஷங்கரின் உதவியாளர் ஜி.வசந்தபாலன் இயக்குகிறார். படத்தின் படப்பிடிப்பு திருக்கழுக்குன்றம், மதுரை, விருதுநகர் ஆகிய இடங்களில் நடந்து முடிந்துள்ளது.

தமிழகத்தில் வருடம் முழுக்க வெயில் அடிக்கும் மாவட்டம் விருதுநகர் மாவட்டம். இதற்கு வறண்ட பூமி, கந்தக பூமி, பொட்டல் காடு, புழுதி காடி என பல பெயர்கள் உள்ளன. ஆக படத்தின் படப்பிடிப்பு பெரும்பகுதி விருது நகரிலேயே நடந்துள்ளது.

மிக குறுகியகால நேர்த்தியான பழைய கட்டிட வேலைப்பாடுகள்
ன்ன சந்துக்களும் தெருக்களும் இங்கு அதிகமாக உள்ளன.
ம் ஒரு பாடலின் படப்பிடிப்பு இந்த இடத்தில் தான் நடைபெற்றது.
பாவனாவும் அழகாக நடனமாடியதை விருதுநகர் மக்கள்

# பாஞ்சாலி யார்?

ஜான்சிராணி வேடத்தில் யார் நடிப்பது, நீயா நானா என்று ஐஸ்வர்யாராய் - சுஷ்மிதாசென் இருவரினதும் குடுமிப்பிடி இன்னும் தீரவில்லை. அதற்குள் அடுத்த அடிதடி! பாண்டவர்களின் மனைவி பாஞ்சாலி யார்? ஐஸ்வர்யாவுடன் இந்தமுறை கோதாவில் குதித்திருப்பவர் பிபாஷாபாசு!

பொலிவுட்டை சமீபகாலமாக சரித்திர காய்ச்சல் பிடித்து ஆட்டுகிறது. சுபாஷ் சந்திரபோஸ், பகவத்சிங், ஜான்சிராணி என வரிசையாக படங்களை எடுத்து வந்தவர்கள், தற்போது கொஞ்சம் முன்னேறி புராணக்கதைக்குள்ளும் புகுந்திருக்கிறார்கள். மகாபாரதக் கதையின் சுவாரஸ்யமான பாத்திரங்களில் ஒன்று பாஞ்சாலி. ஐந்து பேருக்கு மனைவியாக ஐவரின் மனம் நோகாமல் இல்லறம் நடத்திய நிஜமான இல்லத்தரசி. கௌரவர் சபையில் துச்சாதனனால் சேலை இழுக்கப்பட்டது, அந்த அவமானத்தை துச்சாதனனின் இரத்தத்தில் துடைப்பேன் என சபதமிட்டு, பாரத போருக்கு பிள்ளையார் சுழி போட்ட பெருமையும் இவருக்குண்டு.

இப்படிப்பட்ட பாத்திரத்தை மையப்படுத்தி ஒரு படம் எடுக்க ராஜ்குமார் சந்தோஷிக்கு ஆர்வம். கதையை தயார் செய்து, பாஞ்சாலியாக நடிக்க ஐஸ்வர்யாவை தேர்வு செய்துவிட்டார். ஆனால் ரிதுபார்னா கோஷ்டி பாஞ்சாலியாக தேர்ந்தெடுத்திருப்பது பிபாஷாபாசுவை! ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான கதையை எடுத்து ஏமாந்துபோனவர்கள் பொலிவுட்டில் ஏராளம்.

இருபெரும் தலைகள் மோதிக்கொள்வதால் பாரத போர் நிலைக்கு மாறப்போகிறதோ?



# ...யை தாண்டும் அரண்



செலவில்
மோகன்லால்
சுமி கோபால்
பாடலுக்கு

ந்த ரவி
இருவரும்
ால் படத்
ன் எல்லை
எல்லையை
ண்டோக்
டுப்பது

றதும்
, வருவர்.
ல. வடஇந்தியாவில்
கள் முஸ்லிமாகவே இருப்பர்.
டிய தீவிரவாதிகளில் கணிசமான சதவீத்தினர் முஸ்லிம்கள்.
லும், அங்கு தீவிரவாதிகளை உருவாக்கி பயிற்சி அளித்து இந்திய
சினிமாவில் தீவிரவாதியை முஸ்லிமாக காட்டுவதில் இதுவரை
ண்' படத்தில் இதை மீறியிருக்கிறார்கள். இந்தியாவை சேர்ந்த நவாப்
க்கு தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளை ஆப்கான் அரசின்
ில் தீவிரவாத செயல்களில் ஈடுபட வைத்திருக்கிறார். இந்தக் காட்சியை
குனர் மேஜர் ரவியும் ஒளிப்பதிவாளர் திருவும் எடுத்து வந்துள்ளனர்.
ாசமாக இருப்பதாக சித்தரித்திருப்பதால் 'அரண்' படம் முஸ்லிம்
தியக்கூறுகள் உள்ளதாக கூறுகிறார்கள்.

# ... நயன்தாரா வெளியே!

க மாறாத தன்மைக்கு ஒரு ஓ போடுவோம்! படங்களில் நடிக்க
மலையாள இயக்குனர்களின் மிரட்டலுக்கு மசியாததற்கு இந்த 'ஓ'
ன்மம்' படத்தில் சுரேஷ்கோபிக்கு நாயகியாக நடிக்கிறார். இதில் ஒரு
டு, அவரும் ஜோஷி மீதிருந்த மரியாதையால் ஒத்துக்கொண்டார்.
ாச்சி வந்திறங்கிய நயன்தாராவிடம், பாடலுடன் சில காட்சிகளில்
றார்கள். அவ்வளவு தான்..... மலையேறிவிட்டது நயன்தாராவின்
ிட்டு சில காட்சிகளிலும் நடிக்கவேண்டும் என்று கூறுவது ஏமாற்று
ய சென்றுவிட்டார். நயன்தாரா நடிக்க முடியாது என்று சொன்ன அந்த
வேடத்தில் தற்போது நடிப்பவர் சதா.சின்ன நடிகைகளே ஹீரோயினாக மலையாளத்தில் வலம் வரும்போது சதாவுக்கு கிடைத்திருப்பதே ரொம்ப சாதாரண வேடம். தமிழ் படங்களில் ஒரு கலக்கு கலக்கி வந்த இவருக்கு, தெலுங்கிலும்கூட படங்களில்லை. இப்படியே போனால், சதா நிலைமை கஷ்டம்தான்.

மிரட்டலுக்கு மசியாத நயன் தப்பி விட்டார்!

# மீண்டும் ஹீரோவாக நடிக்கத் தயார்!

துருதுரு விஜய், ஜிலுஜிலு அசின் என்று புதுக்கூட்டணியுடன் 'போக்கிரி'க்கு தயாராகிக் கொண்டிருந்தார் பிரபுதேவா. தெலுங்கில் இரண்டு படங்கள் இயக்கி முன்னணி இயக்குனராக இருக்கும் இவருக்கு 'போக்கிரி' முதல் தமிழ் படம். எப்படியும் அடிச்சு தூள் கிளப்பணும் என்பதில் விடாப்பிடியாக இருப்பவரிடம் வேறொரு ஆசையும் விடாப்பிடியாக தொங்கிக் கொண்டிருக்கிறது. அது மறுபடியும் ஹீரோவாக நடிக்கவேண்டும்!

நடிகராக ஒருமுறை பட்டதுன்பம் போதாதா என்றால், அப்போது எனக்கு புரியாத வயசு என்கிறார் கூலாக. "நான் டான்ஸராகதான் சினிமாவுக்குள் வந்தேன். திடீரென்று என்னை நடிக்கச் சொன்னதும் தடுமாறிப்போனது உண்மை. ஹீரோவாக நடிப்பதில் நிறைய சிக்கல்கள் இருந்தன. ஒரேமாதிரி கதைகள்... ஒரே மாதிரி கேரக்டர்கள்."

பழசை அசைப்போட்டவர், "இப்போ ஒரு இயக்குனரா ஆகியிருக்கிறோன். எது சரி எது தவறுன்று தெரியுது. நல்ல கதை அமைந்தால் திரும்பவும் ஹீரோவாக நடிக்கத் தயார்!"

இவரைப் போல டான்ஸராக சினிமாவில் நுழைந்து, நடிகராக தோல்வியடைந்து, தெலுங்கில் இயக்குனராக வெற்றி பெற்ற லோரன்ஸ், தனது இரண்டாவது படமான 'ஸ்டைலில்' ஹீரோவாகவும் ஜெயித்திருக்கிறார். இப்போது 'முனி' படத்தின் மூலம் தமிழிலும் ஹீரோவாக வெற்றி பெற முழுவீச்சில் செயலில் இறங்கியுள்ளார்.

# 'எங்களுக்குள் காதல் இல்லை!'



விஷாலுக்கும் - ரீமாசென்னுக்கும் இடையே காதல் என்ற செய்தி கொலிவுட் முழுவதும் பற்றிக்கொண்டு எரியும் நிலையில் கிசுகிசுக்களுக்கு தண்ணீர் ஊற்றி அணைத்துள்ளன விஷால் - ரீமா பதில்கள். 'செல்லமே' படத்தில் ஜோடி சேர்ந்த விஷால் - ரீமாசென் இருவரும் 'திமிரு' படத்தில் மீண்டும் இணைந்து நடிக்கின்றனர். இதனால் இருவருக்குமிடையே காதல் மலர்ந்துள்ளதாக செய்திகள் கசிந்து வருகின்றன.

இந்த நிலையில் அந்தச் செய்தியை விஷால் - ரீமா மறுத்துள்ளனர். 'திமிரு' படத்தின் பத்திரிகையாளர் மாநாடு நடந்தது. இதில் படத்தின் நாயகன் விஷால், நாயகி ரீமாசென், இயக்குனர் தருண், தயாரிப்பாளர் அஜய் ஆகியோர் கலந்துகொண்டனர். அப்போது பேசிய விஷால், இப்படத்தில் மருத்துவ கல்லூரி மாணவராக தானும், சைக்காலஜி ஸ்டூடண்டாக ரீமாவும் நடிப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் மதுரை உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பில் நடந்த அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார். அப்போது, ரீமாசென்னுடன் காதல் என்ற செய்தி உண்மைதானா? என்று அவரிடம் கேட்டபோது, சினிமாவில் சென்டிமெண்ட் ஒன்று இருக்கிறது. அதன்படி ரீமாவுடன் நான் இணைந்து நடித்த 'செல்லமே' வெற்றி படமாக அமைந்தது. அதனால் 'திமிரு' படத்தில் எனக்கு ஜோடியாக நடிக்க அவரையே கேட்டோம். தவிர 'திமிரு'வில் கதாநாயகியின் கேரக்டர் துறுதுறு என்று இருக்கும். இதற்கு ரீமாசென் பொருத்தமாக இருப்பதால் அவரை தேர்ந்தெடுத்தோம். மற்றப்படி எங்கள் இருவருக்கும் இடையே வேறு எந்த உறவும் இல்லை" என்று மறுத்தார். ரீமாசென்னிடம் விஷாலிடம் பிடித்த விஷயங்கள் என்ன என்று கேட்டபோது, "அவர் நல்ல நண்பர், அமைதியானவர், நல்ல நடிகர்" என்று நற்சான்றிதழ் அளித்தார். அவ்வளவுதான்!

# கவிதைப் புனல்

## சர்வதேச சமூகமே செயற்படுத்து!

ஒரு நாட்டில் வாழும் சகல மக்களுக்கும்
சம உரிமை இருக்க வேண்டும் என்பது
சர்வதேச சட்டம்
இலங்கை அரசு அதை மீறியுள்ளது
சிங்கள மக்களுக்குள்ள உரிமைகள்
தமிழ் மக்களுக்கு
மறுக்கப்பட்டதாலேயே
சாத்விகப் போராட்டம் ஆரம்பமானது
அப்போராட்டத்தை நசுக்க முயன்றதால்
ஆயுதப் போராட்டம் வெடித்தது
சர்வதேச சமூகம் இதை ஏன்
அறியவில்லை
இலங்கை அரசுக்கு ஏன்
அறிவுறுத்தவில்லை
இன்றும் கூட தமிழ் மக்களை
அழித்தொழிக்கும் முயற்சிகளிலேயே
இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது
எல்லோருக்கும் தெரிந்த இந்த உண்மை
சர்வதேச சமூகத்துக்கு தெரிய வில்லையா?
விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்
கோரிக்கையை
எப்போதோ கைவிட்டுவிட்டது
சமஷ்டி அமைப்பை ஏற்றுக்கொண்டது
ஆனாலும் இலங்கை அரசு இன்னமும்
கண்ணாமூச்சி விளையாடுவது ஏன்?
பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை எனப்
பேய்க்காட்டுவது ஏன்?
சம உரிமை கோருவது தமிழ் மக்களின் உரிமை
அதை நிராகரித்தால், தனியாகப்
பிரிந்துபோவதும்
தமிழ் மக்களின் அடிப்படை உரிமையே
சர்வதேச சமூகமே, இதைச் செயற்படுத்து

**தமிழன்பன்.**

## தாயன்பு

தாயன்பு பற்றி மனிதன்
ரொம்பவும் பீற்றிக் கொள்கிறான்
காரணம் பிராணிகளின்
தாயன்பு பற்றி அவன் அறியவில்லை
பறவைகளின் தாயன்பு
மிகவும் உச்சமானது
கூட்டில் உள்ள குஞ்சுகளுக்கு
தாய்ப்பறவை உணவு கொண்டு வந்து
ஊட்டிவிடுவதை பார்த்திருப்பீர்கள்
அதைவிடுங்கள் - இந்தக்
குப்பையைக் கிளறிவிடும்
கோழிகளை எப்போதாவது
கவனித்திருப்பீர்களா
முட்டைகளை அடைகாக்கும்வரை
பசி தாகம் பாராமல், ஒடுங்கப்பட்டு
ஏகாந்திர சிந்தையுடன், அசையாது
அடைகாக்கும், ஆசைகளை
அடக்கிக் கொள்ளும்
குஞ்சுகள் பொரித்ததும், அவற்றை
எந்நேரமும் தன் சிறகுக்குள்ளே
வைத்துக்கொள்ளும், குஞ்சுகளுடன்
நமக்கு அன்னைமையிலே நடமாடும்
திடீரென்று பார்த்தால்
குஞ்சுகளை காண முடியாது
கோழி மட்டும் அமர்ந்திருக்கும்
கூர்ந்து கவனித்தால் அதன்
சிறகுக்குள் அத்தனை குஞ்சுகளும்
அடங்கியிருப்பது தெரியவரும்
தெரியாமலா பாரதி பாடினான்
காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

**அருள்மணி.**

### ம(ர)துவே

*மறந்து விடு - உன்*
*மனசு சுமக்க முடியாதபடி*
*துடிக்கும் என் நினைவுகள்*
*கனக்கத் தொடங்கியிருந்தால்!*

**ரீ. மேரிதர்சினி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

### தனிமை

*அனுபவித்தவன்*
*மட்டுமே அறிவான்*
*அதன் சுகத்தை மட்டுமல்ல*
*சுமையையும்தான்!*

**ச. தாட்சாயினி,**
**கற்பிட்டி.**

### துரோகம்

*பெண்ணே!*
*எனது மனமே*
*எனக்குத் துரோகமாகிவிட்டது*
*என்னை மறந்துவிட்டு*
*உன்னை நினைக்கிறது*

**கே. தனுஷன்,**
**கிளிநொச்சி.**

### தாக்கிவிடும்

*மனிதா மற்றவர்களை இம்சையாக*
*பேசாதே - நீ*
*எலும்பில்லா நாவால் இம்சையாக*
*பேசும் சொல் - அவர்களின்*
*எலும்பையே தாக்கிவிடும்*

**கு. சோபா,**
**கணேசபுரம்.**

### மௌனம்

*விட்டு விட்டுத் துடிக்கும்*
*விழி இரண்டுக்கும் கட்டுப்பட்டு*
*நான் கைதியாகிட - நீ*
*மௌனத்தின் மூலம் கசையடி தருகிறாய்*

**நஜீமா நியாஸ்.**

### நினைவு

*அன்பே!*
*கண்ணுறங்கும் போதும்*
*உன் உருவத்தையே என் நெஞ்சினுள்*
*நிரப்பிக்கொள்கிறேன்*
*ஏனெனில் நித்திரை*
*நிரந்தரமாகிப்போனால் என் கடைசி*
*நிமிடமாவது*
*உன் நினைவு என் நெஞ்சினுள்*
*இருக்கட்டும் என்றுதான்.*

**தோமஸ் ஜொனி,**
**கிளிநொச்சி.**

### உறவு முறை

*நிலையான சொந்தங்கள்*
*நிலையில்லா மனிதரை*
*மடிய முன் முறை சொல்லி*
*அழைத்திடும் உன்னதமான-*
*உரிமைச்சொல்*

**சு. எடின்பரோ,**
**நல்லூர்.**

### மலர்

*ஒரு நாள்*
*உயிர் வாழ்ந்தாலும்*
*மகிழ்வாய்வாழும்*
*அழகு தேவதையிவள்*

**எஸ். பி. லக்குணா,**
**வட்டக்கச்சி.**

### தாய்மை ஒரு தெய்வம்

*நிலவினைத் தாங்கும் வானம் போலவும்*
*இயற்கையைத் தாங்கும் பூமி போலவும்*
*பாவங்களைத் தாங்கும் இறைவன்*
*போலவும்*
*கருவிலே உயிரைத் தாங்குகின்ற*
*தெய்வம்.*

**செ. கன்னிகா,**
**சிறுப்பிட்டி தெற்கு.**

### யாருக்கும் கேட்காமல்

*ஊமையாய்*
*என் மனது அழுகின்றது*
*நண்பியே உன்*
*பிரிவை எண்ணி*

**எஸ். மோகன்தாஸ்,**
**முரிகண்டி.**

ஊமைக்கவிதை
மறக்கமுடியாத
மனக்காயங்களை
மனதிலே!
மௌனமாக்கியதால்
மனம் நொந்து
மரணத்தை தேடும்
உள்ளக் குமுறல்தான்
ஊனமுற்ற என்
ஊமைக் கவிதை

**சி. டிலோசினி,**
**கற்கோவளம்.**

## நீயும் நானுமாய் ஒரு நீண்ட பயணம்...

புவியில் நீயும்
புதனில நானுமாய்
ஆளுக்கொரு கிரகத்தில்
நாங்கள்!

சம்பிரதாயப் போர்வைக்குள்
தம்பதிகளாகி
பரஸ்பரம் பிரயோகமற்ற
தூர பவனி

நித்தியமும்
நீண்டு செல்லும்
சம்பாத்தியம்
அதரங்கள் பிசகா
அளவான சொற்கள்

எப்போதும்
அழற்சி
எப்போதாவது
அன்னியோன்னியம்

திராணியற்ற தளர்தலில்
மடிசாயும் ஏக்கம்
சித்தத்துள் திரண்டு நிற்கும்
அர்த்தமற்ற தயக்கம்

தவறியும் குலாவ மறந்த
பகட்டுப்படிமமாய் நீ
வறட்டுப்பிடிவாத
பிரதிவிம்பமாய் நான்

பதைபதைப்புடன்
விடியல் துரிதம்
இடையில் பிரிவு
இரவில் நிசப்தம்
மீண்டும் விடியல்
இப்படியே....
இப்படியே சயனித்திருந்த
தாம்பத்திய பிரவாகத்தில்
புதியதொரு இன்பச்சலனம்

எங்கள்
ஓரிரு அந்தரங்க பொழுதுகளின்
ஒரே அத்தாட்சியாய்
ஒரு பவித்தர
ஜீவஜனனம்

பாலைவனத்தில் ஒரு
நீரூற்று
அடர்வனத்தில் ஒரு
பூந்தோட்டம்

உன்னையொத்த
அதே சாயலில்
குறும்புச்சிரிப்பு....
குறுகுறுப்பார்வை...
தட்டித் தடவி தாவி இடறும்
குட்டிப்பாதம்.....
முலைதேடி அவாவித்துடிக்கும்
சுட்டி இதழ்...

தொலைந்துபோனேன் நான்
இந்த
பிஞ்சு பிரபஞ்சத்திற்குள்
தொலைந்துதான் போனேன்
உன்னைக் கொஞ்சமாய்
மறந்தும் போனேன்

சிசுவைத் தழுவி
தொட்டணைக்க தவிக்கிறது
உன் உரிமை எண்ணம்

தாயையும்தான்

இறுக்கம் தளர்த்தி
இரங்க மறுக்கிறது
உன் திமிரின் திண்ணம்

என் தாய்மையில் இப்போது
பேதமில்லை
நீயே என்
முதல் குழந்தையாகிறாய்
நீயே என்
மூலதனமுமாகிறாய்
உறவுகளின் உன்னதம்
உறைக்கத் தொடங்குகிறது

இடைவெளிகளை
தகைக்கிறேன்
விட்டுக்கொடுத்தல்
இனிக்கிறது
கட்டியணைக்கப் பிடிக்கிறது
முழுதாய் அர்ப்பணிப்பதில்
மீண்டும் போட்டி

இப்போது.....

புவியில் நீ
புவியில் நான்
புவிக்குள்ளேயே நாங்கள்!

**பிரமிளா செல்வராஜா,**
**ஹாலி - எல.**

## சாதாரண மனிதன் நான்

*நம் கண்கள்*
*பேசுகின்ற வார்த்தைகளை*
*கவிதையாய் வரைந்திட*
*நான் கண்ணதாசனல்ல*

*புன்னகையில்*
*புதைந்த நான்*
*உன்னை புரிக்காமல்*
*இருக்க புத்தனுமல்ல*

*சத்தியமாய் உனை*
*காதலிக்கவில்லை என்று*
*சத்தியம் செய்ய*
*நான் அரிச்சந்திரனுமல்ல*

*நாணத்துடன்*
*நியாயமாய் சொன்னாய்*
*நட்புணர்வோடு*
*நண்பியாய் பழகினாய் என்று*

*நான் நாணமற்று*
*நியாயமல்லாமல் சொல்கிறேன்*
*நண்பியே உன்னைத்தான்*
*காதலிக்கிறேன் என்று*
*சத்தியமாய் சொல்கிறேன்*
*உன் சந்நிதியை*
*அடைவேன் என்றால்*
*சௌகரியமாய் சாவை*
*அணைக்கின்றேன்.*

**கபீல்,**
**வற்றாப்பளை.**

### காதல் வரம்

*கடவுளிடம்*
*வரம் கேட்டேன்*
*என்னை*
*கவிஞனாக்கும் படி*
*கடவுள் பணிக்கிறான்*
*உன்னை காதலிக்கும்*
*படி*

**குரு,**
**கொழும்பு.**

### இரஞ்சுகின்றேன்

*இது எனக்கு மறுபிறவி*
*புதியதோர் உலகினுள்*
*புதிதாய்*
*அவதரித்து விட்டதாய்*
*உணர்கின்றேன்*
*என்னைச்சுற்றி*
*இறுக மிக இறுக*
*கட்டப்பட்டிருந்த*
*இனவாத முட்களின்*
*கோரப்பிடியிலிருந்து*
*எப்படியோ*
*தப்பப் பிழைத்துவிட்டேன்*
*புதிதாய்*
*இறக்கை முளைத்த*
*பறவையின் துடிப்புடன்*
*சுதந்திரக் காற்றை*
*சுவாசிக்கும் போதும்*
*என் ஆத்மாவின் ஓரமதில்*
*இப்போதும் வலிக்கிறது*
*இன்னும்*
*இருள் மண்டிய*
*இறைக் கூண்டினுள்*
*என் நண்பர்கள்!*
*மகிழ்ச்சிக்கான*
*கணங்களை*
*இருள் இராத்திரியிடம்*
*கரைய விட்டு*
*வாடுகிறார்கள்*
*உரியவர்களே*
*மனிதவுரிமை -பற்றி*
*பேசுவோரே!*
*சமாதான சூழலிலும்*
*சிறையினுள் வாடும்*
*இளைஞர்களின்*
*விடுதலைக்கு*
*குரல் கொடுங்கள்*
*முயற்சியெடுங்கள்*
*இரஞ்சுகிறேன்*
*இருகரமேந்தி!*

**ஜோ. கிறிஸ்டி,**
**மட்டகளப்பு.**

# திடீர் நண்பன்

எட்வின் ரோஸ் இங்கிலாந்தைச் சேர்ந்தவன். விளையாட்டுக்காரனான ரோஸ் மிகவும் உற்சாகமானவன். கலகலப்பாகப் பேசி எளிதில்எவரையும் கவர்ந்து விடுவான். வசதியான குடும்பத்தில் பிறந்த அவன் ஊர் சுற்றிப் பார்ப்பதில் அலாதி பிரியமுள்ளவன். ஒவ்வொரு வருடமும் எங்கேயாவது தூரப்பிரதேசங்களைச் சுற்றிப்பார்க்கச் சென்றுவிடுவான். வழியில் எவனாவது நட்புக்கொண்டால் அவனையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு அவர்களுடனே சுற்றித்திரிவான்.

இம்முறை அனடோல் என்பவனை ரோஸ் சந்தித்தான்

அனடோல்-

ரோஸுக்கு எதிர்மறையானவன். அமைதி, பேசாமை, ஏதேதோ யோசனைகளுக்குச் சொந்தமானவன். வேறு யாராக இருந்தாலும் யாருடா இவன் தூங்கு மூஞ்சி! என்று தட்டிவிட்டுப் போய் விடுவார்கள்.

ஆனால் ரோஸுக்கு -

அவனைப் பிடித்திருந்தது. ரோஸின் முடிவில்லாத அளவு கதைகளையெல்லாம் 'உம்! உம்!' போட்டவாறு கேட்டுக் கொண்டிருக்க ஓர் உயிருள்ள பொம்மை கிடைத்து விட்டது அல்லவா!

ஹாரன் நகரில் வசந்தத்தின் துளிர்கள் தோன்றிக் கொண்டிருந்தன. ரோஸ்-அனடோல் இருவரும் அழகிய அந்த நகரை வந்தடைந்தபோது அவர்களுக்கு வசதியான விடுமுறை கிடைக்கவில்லை. திருமதி வோல்க்கர் எனும் பெண்மணியின் வீட்டில் ஒதுக்குப்புறமான அறை ஒன்று கிடைத்தது.

'அப்பாடா இதாவது கிடைத்ததே' என்று பெருமூச்சு விட்ட எட்வின் பெரும் நிம்மதியுடன் அனடோலைப் பார்த்தான். 'அடப்பாவி மகனே! சிரிப்பு என்பது உன் முகத்தில் தோன்றாதா?' என வியப்போடு மனதுக்குள் சொல்லிக் கொண்டான். ஏனென்றால் அவன் முகத்தில் சந்தோஷத்தின் ரேகைகள் கொஞ்சமாவது தோன்றவில்லை. அந்த கல்லுளிமங்கன் 'என் கப்பல் கவிழ்ந்து போய்ட்டு என்ன செய்வேன்' என்ற மாதிரி கடும் யோசனையில் முகத்தை பாறைக்கல்லாக்கிக் கொண்டு கண்களை அசைக்காமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திருமதி வோல்க்கர் பண விசயத்தில் கரரான பெண்மணி. அறையை வாடகைக்கு எடுத்துவிட்டு அப்புறம் அதை கொடுக்காமலே ஓடிவிடும் பலரை கண்டுவிட்டவள். தனது துருதுருப்பான கண்களால் பையன்களை எடைபோட்ட அவளுக்கு- எட்வினைப் பிடித்தது. அனடோலை பிடிக்கவில்லை. எட்வினின் கலகலப்பான தோற்றமும் அவன் அணிந்திருந்த விலை உயர்ந்த ஆடை, கழுத்துச் செயின், விலையுயர்ந்த கைக்கடிகாரம், காலணிகள் எல்லாம் அவளுக்குப் பிடித்தன. ஆசாமி பசையுள்ளவன் என்பதை புரிந்து கொண்டாள்.

ஒரு மனநோயாளியைப்போல தோன்றிய அனடோலைப் பிடிக்கவில்லை. அவனும் அவனுடைய உடைகளும், 'பிச்சைக்காரப் பயல்' என சலித்துக் கொண்டாள்.

என்றாலும் இந்த உற்சாகமான பேர் வழிகளை ஒரு பென்ஸுக்கும் நம்ப முடியாது. சும்மா கலகலப்பு நாடகமாடி ஏமாற்றிவிட்டு மினிட்டாம் பூச்சுபோல் மறைந்துவிடுவார்கள் என்றும் அவள் மனம் நினைத்தது. இத்தகைய பெரிய ஆராய்ச்சிகள், எல்லாம் ஒரு பவுண் வாடகைப்பணம் பறிபோய் விடக்கூடாதே என்ற முன் ஜாக்கிரதையினால் அவள் செய்து கொண்டவை ஆகும்.

* * * * * *

இரவு

பனிமூட்டம் இல்லை. வானில் நட்சத்திரப் பூக்கள், கறுத்தப் பெண்ணின் மூக்குத்திகளாக மின்னின.

ஆனால் கடுமையான குளிர் உடலை வாட்டி எடுக்கிறது.

நண்பர்கள் இருந்த அறைக்கு வெளியில் முழுவதும் கம்பளியால் போர்த்துக் கொண்டு ஜன்னலால் யாரோ உள்ளே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நைட் பல்ப் எரிகிறது.

கண்ணாடி ஜன்னலினூடே அறைக்குள் நடப்பவை மங்கலாகத் தெரிகின்றன.

ஒருவன் படுத்துக்கிடக்க, மற்றவன் அங்குமிங்குமாக நடமாடிக்கொண்டிருந்தான். திடீரென கதவை திறந்து கொண்டு அவன் வெளியில் வந்தான். அட, யாரவன்?

ஓ... எட்வின்... கம்பளியால் போர்த்திக் கொண்டு அறைக்குள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த உருவம் ஒரே ஓட்டமாக ஓடி மற்ற அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டது.

அந்த பூதாகரமான உருவம் திருமதி வோல்க்கர் தான்.

வெளியில் வந்த எட்வின் திருமதி வோல்க்கர் ஓடுவதைக் கண்டுவிட்டான். 'அடி பாவிப் பெண்ணே! உன்னுடைய ஒரு பவுண் வாடகையை கொடுக்காமல் நாம் இரவோடு இரவாக ஓடிப்போய்விடுவோம் என்று நினைக்கிறாயா?' என மனசுக்குள் சொல்லிக்கொண்டான்.

வெளியில் வந்த எட்வின் கொஞ்சம் தொலைவில் இருண்ட பூதமாகத் தெரியும் மலையுச்சியையும், அதனடியில் வெள்ளி பாதரசமென விரிந்து கிடக்கும் வாவியையும் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு என்ன நினைத்தானோ தெரியவில்லை கொஞ்சம் தொலைவில் சனக்கூட்டமாகவிருந்த உல்லாச விடுதியை நோக்கிச் சென்றான். உறவாடுபவர்களின் கலகலப்பான சத்தம். மெலிதான காதல் இசையும் அங்கிருந்து வருகின்றது.

அங்கே அவனுக்கு சில நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களுடன் சேர்ந்து குடித்துவிட்டு கொஞ்சம் தள்ளாட்டத்துடன் தனது அறைக்கு வந்தான். அவனோடு கூடவே வந்த ஒரு பத்திரிகையாள நண்பன் அறைவரைக்கும் வந்து அவனை விட்டுச் சென்றான்.

அடுத்த நாள்.

திருமதி வோல்க்கர் எழுந்து தனது கடமைகளை எல்லாம் முடித்த பின்னரும் அவர்களின் அறைக்கதவு பூட்டியே கிடந்தது. ஜன்னலால் எட்டிப் பார்த்போது திரை இழுத்து விடப்பட்டிருந்ததால் ஒன்றும் தெரியவில்லை. "எருமை மாட்டுப் பயல்கள், தின்பது குடிப்பது இதுதான் இவர்கள் வாழ்க்கை போலும்" அவள் முணுமுணுத்தாள்

பகல் ஒரு மணிபோல் திருமதி வோல்க்கரின் தொலைபேசி அலறியது.

"ஹலோ!"

"ஹலோ! மிஸ்டர் எட்வின் பிளீஸ்."

"அவர் இன்னும் தூங்குகிறார்."

"இருக்க முடியாது, நான் அவனுடைய அண்ணன் பேசுகிறேன். என்னை இன்று ஹாரன் ரயில்வே ஸ்டேசனில் சந்திப்பதாக அறிவித்திருந்தான். நான் இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன், அவனை இன்னும் காணவில்லை."

"அவன் குடித்துப்போட்டு தூங்குகிறான்!"

"இருக்காது! இருக்காது! அவன் சொன்னபடி நடக்கிற பிள்ளை."

"ஆமா நீதான் பீத்திக்கொள்ளவேண்டும் கொஞ்சம் இரு" போனை வைத்த வோல்க்கர் எட்வின் படுத்துக் கிடக்கும் அறைக்கதவை டமார்! டமார் என தட்டினாள்.



உள்ளே ஒரு சந்தடியையும் காணோம். கதவுக்கு ஓர் உதைகொடுத்து திறந்து கொண்டு உள்ளே போனாள்.

என்ன ஆச்சரியம்!

அறை சுத்தமாக துடைத்து வைக்கப்பட்டிருந்தது. உள்ளே ஒருவரையும் காணோம், அவர்களின் பெட்டிகளையும் காணோம்.

திருமதி வோல்க்கர் திறந்த வாயுடன் வெலவெலத்துப்போய் நின்றாள். 'அடப்பாவிகளா, என் வீட்டு வாடகைக்கு



## எழுதுவது கே. வி.

டிமிக்கி கொடுத்து விட்டீங்களே!

ஏரியில் படகுப் பயணம் செய்து கொண்டிருந்த ஓர் உல்லாசப் பயணிகள், முகம் அடையாளம் காண முடியாதவாறு தலை சிதைந்து போய் விட்டிருந்த ஒரு சடலத்தைக் கண்டெடுத்தார்கள்.

சனம் கூடிவிட்டது. பத்திரிகையாளர்களும் பொலிசாரும் ஸ்தலத்திற்கு விரைந்து வந்துவிட்டார்கள். திருமதி வோல்க்கரும் குதித்துக் கொண்டு ஓடினாள். சடலமாகக் கிடந்தவனின் உடைகள் அவளை நடுநடுங்கச் செய்தன. 'ஐயோ! அந்த அப்பிராணி அனடோல் அல்லவா அவன்' என வோல்க்கர் தன்னையும் மறந்து அலறினாள்.

பொலிசார் லபக்கென அவளை பிடித்துக் கொண்டார்கள். பொலிசார் கொடுத்த மிரட்டலில் அவள் எல்லாச் சம்பவங்களை விபரித்தாள்.

பத்திரிகையாளர்கள் மத்தியில், இரவு எட்வினை சந்தித்த பத்திகையாளனும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான். சடலத்தின் உடைகளைக் கண்டதும் அவன் ஏனோ கடுமையான யோசனையில் ஆழ்ந்து போனான்.

அவன் சிந்தைக்குள் தீப்பொறிகள் பறந்தன. அவன் கண்முன்னே ஒரு காட்சி நிழலாடியது. அவன் காலையில் அலுவலகம் சென்ற போது ஒரு சம்பவம் நடந்தது. தான் சென்று கொண்டிருந்த பஸ்ஸிலே எட்வின் ரோஸ் இரு ஸூட்கேஸ்களோடு வந்து ஏறுவதை அவன் கண்டான். எட்வினின் முதுகுப்புறத்தையே அவன் கண்டான். அவனுடைய வர்ணமயமான விலை உயர்ந்த சேர்ட்டும் கழுத்துச் செய்னும், கைக்கடிகாரமுமே அவனை காட்டிக்கொடுத்தன. அவற்றின் மூலமே தனது இரவு நண்பன் எட்வின் என்பதை அவன் தீர்மானித்தான்.

நேற்று இரவு உல்லாச விடுதியில் எட்வினுடன் திடீர் நட்புக்கொண்ட பத்திரிகையாளன் அவனுடைய நடத்தையில் மட்டுமல்லாது அவனது அங்கங்களை அலங்கரித்துக் கொண்டிருந்த இப்பொருட்களிலே அடையாளம் வைத்துக்கொண்டிருந்தான். அது மட்டுமில்லை நன்றாகவே அவனுக்கு குடிக்க வாங்கிக்கொடுத்த எட்வின் இன்னும் மூன்று நாட்களின் பின்னரே ஹாரன் நகரை விட்டுப் போவதாகச் செல்லியிருந்தான். பின்னே ஏன் இப்படி?

திடுதிப்பென கிளம்பிவிட்டான், என்ற எண்ணத்துடன் முன்னோக்கி நகர்ந்து

"ஹலோ எட்வின்!"

என அன்போடு அழைத்து, முதுகைத்தட்டி, முகத்தைப் பார்த்தபோது திகைத்துப் போனான்.

அது

எட்வின் இல்லை. இரவு பார்த்த எட்வினின் முகம் மிகவும் கலகலப்பானதாயிற்றே! இது யார்? ஆனால் நிட்சயமாக இது எட்வினின் உடைகள் தான்.

அவன் மிரட்சியுடன் பொலிஸ் இன்ஸ்பெக்டரைத் தேடினான். ஓடிச்சென்று அவரிடம் எல்லா விசயங்களையும் சொல்லி, எட்வினின் உடைகளோடு இருந்த அந்த ஆசாமி இறங்கிய இடத்தையும் குறிப்பிட்டு அவன் ஏதாவது அவ்விடத்திலுள்ள சிறிய விடுதி ஒன்றில் தான் தங்கியிருப்பான் என்றான்.

பத்திரிகையாளனை வாகனத்தில் ஏற்றிய இன்ஸ்பெக்டர் ஜீப்பில் பறந்தார்.

அவர்கள் அனடோலை கண்டு பிடித்தார்கள். அவன் தான் எட்வினைக் கொன்றிருந்தான். விடியற் காலையிலே அவர்கள் மலை உச்சிக்குப் போயிருக்கிறார்கள். எட்வின் கொஞ்சம் ஓய்வாக கண்களை மூடிக்கொன்றிருந்த போது பெரும் பாறாங்கல் ஒன்றை தூக்கிப் போட்டு எட்வினின் தலையை நொறுக்கித் தள்ளிவிட்டான். பிறகு பாறாங்கல்லை பல தடவை தூக்கிப் போட்டு முகத்தை பதம் பண்ணி அடையாளம் தெரியாமல் சிதைத்து விட்டான். பின்னர் அவனுடைய உடை, உடமைகளையெல்லாம் அவன் அணிந்து கொண்டு அவனுடைய உடைகளை எட்வினுக்கு அணிவித்துவிட்டு அறையிலிருந்த பெட்டிகளையெல்லாம் எடுத்தக்கொண்டு நைசாக நழுவிட்டான்.

அனடோல்கைது செய்யப்பட்டான். அதன் பின்னரே அவனுடைய வரலாறு தெரியவந்தது. அவன் பெரும் கில்லாடி என்றும் பலகாலமாக பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்து வருபவன் என்றும் தெரியவந்தது. பலரையும் ஏமாற்றி அவன் பணம் பறித்துள்ளான். ஆனால் அவனுடைய முதல் கொலை எட்வின்தான். மிகவும் நல்லவனான எட்வினிடம் அனடோல் எதைக் கேட்டிருந்தாலும் அவன் கொடுத்திருப்பான் அவ்வளவுக்கு நல்லவன். பாவம்! அந்த நல்லவன் முகத்தை பாறாக்கல்லைப் போட்டு சிதைத்து விட்டிருந்த கொடுமையை காணச்சகிக்க முடியாமல் ரயில்வே ஸ்டேசனில் கால்கடுக்க காத்திருந்த அண்ணன் ரோஜஸ் கதறி கதறி அழுத காட்சி யாராலும் மறக்க முடியாததாகவிருந்தது.



# பல்சுவை கதம்பம்

ஆக்கம்: [illegible]

## இதென்ன புதுக்கதை



இன்றய உலகம் நாகரிகத்தை நோக்கி வெற்றி நடை போட்டாலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் தினமும் சங்கிலித்தொடர் போல் அரங்கேறிய வண்ணம் உள்ளன. வீட்டிலிருந்து வெளியில் செல்வது முதல், இரவு வீட்டுக்கு திரும்புவது வரை வெளிநபர்களின் வன்முறைகளை சந்திக்கும் பெண்களின் துயரங்கள் அளவிட முடியாதவை. வெளிநபர்களால் தொந்தரவு ஏற்படுவது குறித்து நிறையவே கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், கணவனால் கற்பழிக்கப்படுவது...? ஒரு பெண்ணின் விருப்பமே இல்லாமல், அவளுடன் கணவன் வலுகட்டாயமாக உறவு கொண்டால், 'கணவனால் கற்பழிக்கப்பட்டவள்' என்று அப்பெண் அழைக்கப்படுகிறாள்.

'இதென்ன புதுக்கதை? பலரது வீட்டிலும் இது நடக்கத்தானே செய்கிறது? இதையெல்லாம் பூதக்கண்ணாடி மூலம் பார்த்து, தவறு என்று சொல்ல முடியுமா?' என்றால், 'முடியும்' என்கிறது வெளிநாட்டுச் சட்டம். அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பார்படாஸ், பல்கேரியா, ஈக்குவேடார், குரோஷியா, கனடா, பிரிட்டன், பின்லாந்து, பிரான்ஸ், ஹொங்காங், அயர்லாந்து, நியூசிலாந்து, சுவீடன், தைவான், உஸ்பெகிஸ்தான் உட்பட பல நாடுகளில், மனைவியை கற்பழிப்பது சட்டப்படி குற்றம்.

அமெரிக்காவில் 15 சதவீத பெண்கள் கணவரால் கற்பழிக்கப்படுவதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. அங்கு நிகழும் மொத்த கற்பழிப்புகளில் 25 சதவீதம் இதுபோன்றவைதான். இந்தியாவில் எழு பெண்களுக்கு ஒரு பெண், குறைந்தது ஒரு முறையாவது தங்களது கணவர்களால் கற்பழிக்கப்படுவதாக சமீபத்திய சர்வே ஒன்று தெரிவித்திருப்பது, சமூக நலம் விரும்புவோர் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் 'டில்லி டைம்ஸ்' என்ற பத்திரிகை நடத்திய ஆய்வில் பெண்கள் கணவரால் கற்பழிக்கப்படுவதை குற்றமாக கருதி சட்டம் இயற்ற வேண்டும் என 93 சதவீதம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஒரு பெண்ணை நான்கு சுவருக்குள் கற்பழிப்பது அவரது கணவராக இருந்தாலும், அது குற்றம் தான் என இவர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

கணவரால் கற்பழிக்கப்படும் பெண்கள் உடல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாவதோடு, மன ரீதியான பாதிப்பிற்கும் ஆளாவதாக கூறுகிறார் மனநல மருத்துவர் அவ்தேஷ் சர்மா. மேலும் இவர் கூறுகையில், 'குடும்ப வாழ்க்கையில் இதுபோன்ற நிகழ்வுகள் சாதாரணமான ஒன்றாக கருதப்படுகின்றன. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களது அறிவுரைகள் மூலம் இது போன்ற செயல்கள் பெரிதுபடுத்தப்படுவது இல்லை. பலர் இது போன்ற கற்பழிப்புக்களை குடும்ப வாழ்வில் உள்ள அன்றாட பிரச்சினைகளில் ஒன்றாகவே கருதுகின்றனர். இந்த பாதிப்பிலிருந்து விடுபட பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்பட வேண்டியது அவசியம்' என்கிறார்.

## டாலியின் போஸ்



திரைப்பட வாய்ப்புகளை இழந்துவரும் ஹொலிவூட் நடிகை ஸ்டாசிடாலி, (Stacey Darli) படத் தயாரிப்பாளர்களை தன்னை நோக்கி ஈர்ப்பதற்கு உலகப் புகழ்பெற்ற ஆண்களுக்கான பிளேபோய் சஞ்சிகைக்கு நிர்வாண போஸ் கொடுத்திருக்கிறார். எதிர்வரும் ஆகஸ்டில் வெளிவரவிருக்கும் இதழுக்காக முழு நிர்வாணமாகப் போஸ் கொடுத்திருக்கிறார் டாலி.

இவர் நடித்துள்ள I Could Never Be Your Woman எதிர்வரும் செப்டம்பரில் ரிலீஸ் ஆகிறது.

## கவர்ச்சியாய் கழுவுகிறார்




கிளுகிளுப்பாக கார் கழுவ ஏற்பாடு செய்திருக்கிறது [illegible]



அமெரிக்காவில் நடைபெற இருக்கும் உலக அழகி போட்டியில் கலந்து கொள்ள இருக்கும் அழகிகள். யுனிவர்சல் நகரில் உள்ள பூங்காவில் ஜாலியாக நீர்சறுக்கு விளையாடினர்.

## பிழைப்பு போய்விட்டதே



மும்பையில் பிழைப்பு போய்விட்டதால் மும்பாய் இரவு விடுதிகளில் நடனம் ஆடி தமது வயிற்றைக் கழுவி வந்த பெண்கள் வளைகுடா நாடுகளில் வேலைவாய்ப்புத் தேடித்தரும் முகவர்களை நோக்கி அலைமோத தொடங்கி உள்ளனர்.

'இரவு விடுதிகள்' கலாசாரத்தை சீரழிக்கின்றன என்று கூறி மும்பாய் சட்டசபை, அவை இயங்குவதற்குத் தடை விதித்துள்ளது.

அந்த விடுதிகளில் நடனமாடிவந்த பெண்கள் இப்போ பிழைப்பில்லாமல் தவிக்கின்றனர். சிலர் சிவப்பு விளக்குப் பகுதிகளில் தொழில் நடத்துகின்றனர். மும்பையில் தொழில் பறிக்கப்பட்டதால் வெளிநாடுகளுக்குச் சென்று ஏதாவது பிழைத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். அதற்கேற்ப முகவர்களும் தயாராக இருப்பதால் வளைகுடாவில் எந்த வேலையும் செய்யத் தாம் தயாராக இருப்பதாக இவர்கள் சொல்லுகின்றனர்.

''கிளப்புகளில் தவறு நடந்தால் அவற்றைத் திருத்துவதை விட்டு எம்மைத் திருத்துவதா?''

''எங்களுக்கு சாப்பிட சோறில்லை. உடுக்க துணியில்லை. இந்த நிலையில் வளைகுடாவுக்கு போய்விட்டால் ஏதாவது செய்யலாம் என்ற நம்பிக்கையில் தான் அங்கு செல்ல நினைக்கிறோம்.'' என்று சொல்கின்றனர் மாஜி நைட்கிளப் பெண்கள்.



அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் ஸ்மித்சோனியன்ஸ் தேசிய வனவிலங்குப் பூங்காவில் முதலாவது பிறந்த நாள் விழா கொண்டாடும் பண்டா குரங்குக்கு ஐஸ் கேக் பரிசாக வழங்கப்பட்டது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள மருத்துவமனையில் மக்டலினா என்பவருக்கு ஒரே பிரசவத்தில் 2 ஆண்கள், 2 பெண்கள் என்று நான்கு குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளுடன் மருத்துவமனையின் இயக்குனர் டாக்டர் ஹர்ரின் ஹா.





ஸ்பெயினின் பார்கோஸ நகரில் பல நாடுகளைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்கும் நடன விழா நடந்து வருகிறது. ரசிகர்களை கவரும் வகையில் நடனமாடிய சில நாட்டு பாலே நடனக் கலைஞர்கள்.

# வன்னிரெக்கின் அறிவியல் பகிர்வு

Vanni Tech
Vanni Institute of Technology


வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம், சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் அமைப்பினால் நிறுவப்பட்ட, ஓர் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் ஆகும். வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் ஆனி மாதம் 2003 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிறுவகத்தின் இலக்குகள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை கற்பிப்பதும், உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும், அவர்களை சர்வதேச சந்தையில் போட்டிக்குத் தயார்ப்படுத்துவதும் ஆகும்.

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் மூன்றாம் தொகுதி மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட கணினி அறிவூட்டல் சம்பந்தமான இந்த இலத்திரனியல், வலையமைப்பு, மென்பொருள் ஆகிய பிரிவுகள் பெரும்பாலும் 9ஆம், 10ஆம், ஆண்டு மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப பாடவிதானத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளன. இவை மாணவர்கள் தங்களின் வீடுகளில் இருந்தவாறே தொழில்நுட்ப அறிவை விரித்தியாக்கிக் கொள்ள உதவும்.

## ஒரே பார்வையில் Linux உம் Windows உம்

### இயங்குதளம் (Operating System)


இயங்குதளம் எனப்படுவது கணினிக்கும் பாவனையாளருக்கும் இடையே ஒரு இடைமுகப்பாக (Interface) தொழிற்படுகின்ற மென்பொருளாகும். (software) பாவனையாளரினால் கொடுக்கப்படும் உள்ளீடுகள் கணினியால் உணரப்பட்டு அதற்குரிய வெளியீடுகள் இந்த இயங்குதளத்தினாலேயே மேற்கொள்ளப்படுவதால் இம்மென்பொருள் இல்லாதவிடத்து கணினி என்பது உயிரற்ற உடலுக்கு ஒப்பானதாகும். இயங்குதளத்தில் Sunsolaris, Linux, Unix, Windows என பல வகைகள் காணப்படுகின்றன. இங்கு நாம் விண்டோஸ் இயங்குதளம், லினக்ஸ் இயங்குதளம் பற்றியே ஆராய இருப்பதனால் இவை தொடர்பான சில தகவல்களைப் பார்ப்போம்.




த.கிருபா : சோ.நிஷானி : த.தீபவதனா

### விண்டோஸ் Windows.

விண்டோஸ் Microsoft Company னால் வெளியிடப்படுகின்ற ஒரு இயங்குதளமாகும். பல பதிப்புக்களை (Verson) கொண்டுள்ளது. ஒவ்வொரு பதிப்பும் புதிய பல விடயங்களை உள்ளடக்கிப் புதுப்பொலிவுடன் வெளிவருகின்றது. Windows 95, Windows 98, Windows 2000, Windows NT போன்றன அவற்றில் சிலவாகும்.






### லினக்ஸ் Linux

லினக்ஸ் ஆனது Unix என்ற இயங்குதளத்தில் இருந்து உருவாகிய ஒரு இயங்குதளமாகும். Unix இயங்குதளத்தில் உள்ள கடுமையான கட்டளை தொடர்களையும் (Comand Line) மேலும் பல Graphical interface ஐயும் உள்ளடக்கி தனித்துவமான ஒரு இயங்குதளமாக விளங்குகிறது. Red had, Caldera, Mandrak, Debian, Suse, போன்ற நிறுவனங்கள் லினக்ஸ் இயங்கு தளத்தை வெளியிடுகின்றன.

(தொடரும்)

## உங்கள் வீட்டு லைபிறரியை எவ்வாறு கணினிமயப்படுத்தலாம்?

இ.ஜெயசிவாஜா

MicroSoft Access மூலம் ஒரு தரவுத்தளத்தை அமைக்கையில் Fiald Name சிலவற்றின் Data typeஐ மாற்றுவது பற்றி கடந்த வாரம் பார்த்தோம்.

இப்போது Books என்ற Table இனை Close செய்தீர்களானால் உங்கள் database இல் இப்பெயரில் ஒரு தரவுகளற்ற Table உருவாகும்.

அடுத்து இவ் Table இற்குரிய தரவுகளை உட்செலுத்துதல் பற்றிப் பார்ப்போம். இங்கு Forms ஊடாகவே தரவுகள் உட்செலுத்தப்படவுள்ளது.


**Form ஒன்றை Wizard முறையில் உருவாக்கல்.**

Objectஇல் Form தேர்வு செய்து Create form by using wizard தேர்வு செய்க. கிடைக்கும் டயலாக் பாக்ஸில் இருந்து எல்லா Fields ஐயும் ▸ மூலம் தெரிவு செய்த பின்னர் Next ஐத் தேர்வு செய்க. Formy; Field Name ஒவ்வொன்றும் ஒழுங்குபடுத்தப்படவுள்ள ஒழுங்கமைப்புகள் சில தரப்பட்டுள்ளன. அவற்றில் Columnar ஐத் தேர்வு செய்த பின்னர் Next ஐத் தேர்வு செய்க.

பின்னர் Stylesஇல் இருந்து Blue print ஐத் தேர்வு செய்தபின் Next ஐத் தேர்வு செய்க. What title do you want for your form என்பதில் save செய்யும் பெயராக Data entry form என்று டைப் செய்து Open the form to view or enter information என்ற option ஐத் தேர்வு செய்து Finish செய்க.

இனி உங்களிடம் உள்ள ஒவ்வொரு புத்தகத்தினதும் விபரங்களை உட்செலுத்தப் போகிறீர்கள். BookID நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு புத்தகத்தினதும் விபரங்கள் ரெக்கோட்டாக சேமிக்கப்படுகிறது. கீழுள்ள பட்டன் அடுத்த புத்தக விவரத்தை உட்செலுத்துவதற்குரிய புதிய Form ஒன்றைத்தரும்

சிலவேளை உட்செலுத்தப்பட்ட தரவுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்படலாம். உதாரணமாக இரவல் கொடுத்திருந்த புத்தகம் திரும்ப கிடைக்கும் போது Status of Book இல் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். குறித்த ரெக்கோட் ஒன்றை தேடி எடுப்பதற்கு இம்முறை இலகுவானது.




(தொடரும்)

## ஆர்வமூட்டும் இலத்திரனியல்

கூடியளவு மின்வலு தேவையானபோது குறைந்தளவு மின்னைத் தாங்கும் வடத்தைப் பயன்படுத்தினோமானால் மின்பிறப்பாக்கிக்கும் (Generator) அழுத்தம்(Load) கூட்டும். எந்த வடத்தினைப் (Wire) பயன்படுத்தி மின்பிறப்பாக்கியிலிருந்து மின்னைப் பெற்றாலும் அது ஒரே அளவு மின்னழுத்தப் பெறுமானமுள்ள மின்னழுத்தத் தையே(V) தரும். ஆனால் மின்பிறப்பாக் கியிலிருந்து வெளியேறும் மின்வலுவின (W) வித்தியாசத்திற்கேற்ப மின்னோட்ட மானது (A) மாறுபடும். வடமானது(Wire) மொத்தமாக இருந்தால் கூடியளவு மின் செலவழியுமென்பது பொய்க் கணக்கு. எமது தேவைக்கேற்ப நாம் வடத்தினைத் தெரிவு செய்வதே எதற்குஞ் சிறந்தது.

தற்போது பெரும்பாலான வீடுகளில் சூரிய மின்கலங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதற்கும் நாம் தனியான மின்சுற்றினைப் பொருத்தவேண்டியுள்ளது. இது நேரோட்ட (DC) மின்சுற்றாகையால் நேர்முனை (+ve), மறைமுனை (-ve) என்பவற்றைச் சரியான முறையிற் பார்த்துச் சுற்றைப் பொருத்துதல் வேண்டும். இம்மின் சுற்றில் பன்னிரண்டு வோல்ற் (Voltage) மின்னழுத்தமே இருக்கும். இதனை நாம் தொட்டால் இம்மின்சுற்றில் ஓடும் மின்சாரம் எம்மை எந்த வகையிலும் பாதிக்காது. ஆனால் இரு முனைகளும் ஒன்றுடனொன்று தவறுதலாகத் தொடுகையுறும்போது குறும்சுற்று (Short) உண்டாகி மின்சுற்றுப் பாதிப்புறுவதோடு சாதனங்களும் (மின்விளக்குகள் (Bulb), சூரியஒளி மின்னேற்றிகள் (Solar set), வனொலிகள்) பழுதடையும் சிலவேளைகளில் மின் கலமும் (Battery) வெடிக்கக்கூடும். நேரோட்ட மின்சுற்றில் (DC) நேரோட்ட மின் குமிழ்களையே (DC Bulp) பயன்படுத்துதல் வேண்டும். இம்மின்குமிழ்களை ஆடலோட்ட மின்சாரத்திற் பயன்படுத்தி மின்குமிழ்கள் பழுதடைந்த சம்பவங்கள் நிறைய உண்டு. மின்கல முனைகளில் வடங்களை (Wire) மாறிக்கொடுத்துப் பல சாதனங்களைப் பழுதடையச்செய்த பாக்கியசாலிகளாகக் கூட நீங்கள் இருக்கலாம்.



வே.வசந்தகுமார், பி.மார்ஷல், வ.பிரசன்னா, பா.றஜீவ்குமார், கு.சதீஸ்போல், அ.திவாகரன், அ.திருக்குமரன், க.கோகுல்நாத்

இவற்றிலிருந்து நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் எவ்வகை மின்சார மெனிலும் அவற்றை நாம் கையாளும் போது நிதானத்திற்கு வந்த பின்னரே கையாளுதல் சிறந்தது.

(தொடரும்...)

# சமாதான வேஷம் கலைந்த



கொல்லப்பட்ட சிப்பாய்களின் சடலங்கள்

இதுவரை காலமும் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் மறைமுகமாகத் தாக்குதல் நடத்திய இராணுவத்தினர் இப்போது பகிரங்கமாக வலிந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கண்காணிப்புக்குழுவிடமும் இது தொடர்பாக புலிகள் தரப்பு தமது குற்றச்சாட்டைத் தெரிவித்திருக்கிறது. சுமார் 150 பேர் வரையிலான இராணுவப் படையணி ஒன்று புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஊடுருவிச்சென்று தாக்குதலைத் தொடுத்த வேளையில் புலிகள் முறியடிப்பு சமர் ஒன்றின்மூலம் பன்னிரெண்டு படையினரைக் கொன்றதுடன் கோப்ரல் தர அதிகாரி ஒருவரையும் சிறைப்பிடித்துள்ளனர். 'வழமையாக கருணா அணியினர் ' என்ற பெயரில் தமிழ் பகுதிகளுக்குள் புகுந்து தாக்குதல்களை மேற்கொள்ளும்

**-சிவசைலயா-**

இராணுவப்பிரிவு இப்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டிருக்கிறது. சர்வதேச அரங்கில் கருணாவை ஒரு படையணித்தலைவனாக காட்டுவதற்கு கட்டிவைத்திருந்த கதைகள் எல்லாம் புஸ்வாணமாகிப் போகுமளவுக்கு நிலைமை சென்றுள்ளது. எந்த எதிர்ப்புகளுமின்றி முன்னேறிக்கொண்டிருந்த படையினருக்கு புலிகளின் திடீர் தாக்குதல் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு சிப்பாய் உயிருடன் பிடிபடுவது ஓர் இராணுவத்தின் மறைமுக நடவடிக்கைகளுக்கு பெரும் தடையாய் அமையும் என்று தெரிந்திருந்தும் அந்த சிப்பாயை மீட்கும் அவகாசம் கிடைக்காமல் பின்வாங்கி ஓடியிருக்கிறது இராணுவம்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 12 இராணுவ வீரர்களது சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்கள் பொலநறுவை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு கிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என்று புலிகள் தரப்பு தெரிவித்திருக்கிறது. இந்தத் தாக்குதல் புலிகளை வலிந்து சண்டைக்கு இழுக்கும் நோக்கத்தை; பின்னணியாகக்கொண்டு செயற்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கை என்பது தெளிவாக உணரக்கூடியது. ஒருவேளை இந்தத் தாக்குதல் திட்டம் இராணுவத்துக்கு சாதகமாக அமைந்திருந்தால் வழமைபோன்று இராணுவப் பேச்சாளர் தரப்பு கருணாகுழுவினரே இந்தத் தாக்குதலை மேற்கொ கூறியிருக்கும். கருணாகுழுவினரும் கிணறு வெட்டிய புணிலின் சர்வதேசத்தின்முன் கதை அளந்திருப்பர்.

இந்த யதார்த்தத்தை கண்காணிப்புக்குழு உணர்ந்துகொள்ளவேண்டு தமிழர் தரப்பு இப்போதும் வலியுறுத்தும் விடயமாகும்.இது தொடர்பாக கிளிநொச்சியில் கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்தியில் சு. ப. தமிழ்ச்செல்வன் தமது நிலைப்பாட்டை கூறியிருப்பதாகவ் செய் வெளிவந்துள்ளன.

மட்டக்களப்பு வாகனேரியில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றன படைத்தரப்பு உறுதி செய்துள்ளது மட்டுமின்றி இறந்த சிப்பாய்களின் களையும் வழமைக்கு மாறாக பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது. எனினும் சம்பவம் இடம்பெற்ற பகுதி இராணுவ கட்டுப்பாட்டுப் குதி புலிகளே தமது பகுதிக்குள் புகுந்து தாக்கியதாகவும் அது குற்றஞ் சில தென்னிலங்கை ஊடகங்களும்கூட உள்நாட்டு புவியியல் அதை பிரசுரித்திருந்தன.

இதேவேளை,இந்தத் தாக்குதல் காரணமாக வாகனேரியை அண்டிய முகாம்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் அ மக்கள் பெண்டுகள் சேனை என்ற இடத்தை நோக்கி இடம்பெயர்ந்து அவர்களுக்கான வசதிகள் குறித்தும் மாற்று நடவடிக்கைகள் குறிதும் இன்னமும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை இந்த நிலையில,

இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஜீசே ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்:-

"வாகனேரியில் - சம்பவ இடத்துக்கு எமது கண்காணிப்பாளர்கள் பார்வையிட்டனர். அந்தப் பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பட எனக் கூறியுள்ளார்.

இதுவரை காலமும் நிழலாகத் தொடர்ந்துவந்த போர் இப்போது பிர சண்டைக்கு வழி செய்திருக்கிறது. வழமையாக சாட்டப்படும் 'கருணா எடுபடாமல் போன நிலையில் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல கொள்ளப்படுகிறது.

படையினர் தமது பகுதியை நோக்கி முன்னேறும் தகவல் புலிகளு கிடைத்ததும் மிக நிதானமாக நடவடிக்கைகளை அவதானித்து, கண்காணிப்புக்குழுவுக்கு தகவல் கொடுத்தனுப்பி இரண்டுமணி நே பின்னரே தாக்குதலைத் தொடுத்துள்ளனர்.

அப்பகுதியில் சுமார் ஒருமணிநேரம் இடம்பெற்ற உக்கிர மோதலி படையினர் பின்நோக்கி ஓடியுள்ளனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து சுமார் 37 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இப்பகுதிக்குள் சுமார் 5 கிலோ தூரம்வரை முன்னேறிய படையினர் நடத்திய தாக்குதலில் புலிகள போராளிகள் நால்வர் உயிரிழந்ததுடன் ஆறுபேர் காயமடைந்தனர் வாழைச்சேனை காகித ஆலைப் பகுதியில் முகாமிட்டிருக்கும் 23-3 படையணியைச் சேர்ந்த இராணுவத்தினரே இவ்வாறு முன்னேறியி தெரிவிக்கப்படுகிறது.


'இந்த மோதலின்போது, ஊடுருவிய படையினருக்கு உதவியாக ம கரடிக்குளம், வழைச்சேனை காகித ஆலை முகாம்களில் இருந்து அ எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் அச்சமடைந் இடம்பெயர்ந்துள்ளனர்.

எப்படியாயினும்,

'சமாதானம்' என்று உலகை ஏய்க்கும் முகப்பூச்சுகளுடன் நாடுகளு இறங்கும் அரசதரப்பு மனதின் ஓர் ஓரத்திலாயினும் உண்மையாக கொண்டிருக்கவில்லை என்பது இத்தகைய நடவடிக்கைகள் மூலம் தெளிவாகிறது.

புலிகள் பேச்சுக்கு வருகிறார்கள் இல்லை என்று அடிக்கடி கூடிவி தலைவர் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட - இறைமையுள்ள- பன் றாந்தையான செயற்பாடுகளையும் கண்காணிக்கவேண்டும்.

இது விடயத்தில் சிங்கள மக்களும் தெளிவாக இருக்கவேண்டிய யமாகும். சுய சிந்தனையின் அடிப்படையில் இராணுவத்தின் ஒழு நடவடிக்கைகளை அவர்கள் கண்டிக்கவேண்டும். மக்களிடம் அந் பிறக்கும் வரையில் 'ஒற்றையாட்சி 'என்பதும் 'சமாதானம் ' என்பது வாய்ப்பேச்சாகவே இருக்கமுடியும்.

HOTEL WESTERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்: வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No: 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P. +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax +94 11 4518481 E-mail info@hotelwesteern.com
Website www.hotelwesteern.com



விமாகி டிரான்ஷ்போர்ட் டிவிஷன்

புத்தம் புதிய 40 அடி Trail r உடன் கூடிய லொறி வாடகைக்கு விடப்படும்.

இலங்கையின் சகல பாகங்களுக்கும் போக்குவரத்து சேவை

Prime Movers With 40 Feet Trailers



VEMAKE TRANSPORT SERVICE

விமாகி டிரான்ஸ்போர்ட் டிவி
9 C ஜெம்பெட்டா லேன், கொழும்பு-13
தொ. பே : 5344031 நவ்ஷாட் : 077 329



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888,
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லக்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2006, ஜூலை 16 ஆம் திகதி வெ